இரண்டாம் பதிப்பு

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 97 | வள்ளுவர் ஆண்டு 2048 | மாசி 19 வெள்ளிக்கிழமை 03.03.2017

## அரிசிப் பொதிகளில் விலை இல்லாவிடின் சட்ட நடவடிக்கை

யாழ். மாவட்ட பாவனையாளர் அதிகார சபையினர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3
அரிசிப் பொதிகளில் கட்டாயம் விலை பொறிக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு விலை பொறிக்கப்படாத அரிசிப் பொதிகளை விற்பனை செய்யும் கடைகள், மில் உரிமையா >> 24



இலங்கை மீது புதிய தீர்மானம்;

## அமெ. பிரிட்டன் தரப்பினர் நேற்று உயர்மட்டப் பேச்சு

ஜெனிவா, மார்ச் 3
இலங்கை தொடர்பான புதிய தீர்மானத்தைப் பிரிட்டன் முன்வைக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், ஜெனிவாவில் நிலை கொண்டுள்ள பிரிட்டன் பிரதிநிதிகளுக்கும் அமெரிக்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நேற்று உயர்மட்டப் பேச்சு நடைபெற் >> 24

## நாள்கள் நகர்கின்றன எமக்கு விடிவில்லை

புதுக்குடியிருப்பில் போராட்டம் நடத்திவரும் பொதுமக்கள் விசனம்

முல்லைத்தீவு, மார்ச் 3
நாள்கள் கடந்து செல்கின்றன. எமது போராட்டத்துக்கு இன்னும் விடிவு கிடைக்கவில்லை எனப் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணி உரிமை >> 24



## கட்டாந்தரையிலேயே வாழ்க்கை

பிலக்குடியிருப்பில் தொடரும் அவலம்

முல்லைத்தீவு, மார்ச் 3
பிலக்குடியிருப்புக் காணிகளுக்குச் சென்றுள்ள மக்கள் அங்கு மரங்களுக்குக் கீழ் தற்காலிகக் கூடாரங்களை அமைத்துத் தங்கியுள்ளனர். பிலக்குடியிருப்புப் பகுதியில் உள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி கடந்த ஒரு மாத காலமாக அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்த மக்கள் நேற்று முன்தினம் தமது காணிகளுக்குள் காலடி எடுத்து >> 24

புதிய அரசமைப்பு உருவாக்கம் குறித்து

# கூட்டு அரசினுள் கருத்து மோதல்

## இரு முதன்மைக் கட்சிகளும் ஏறுமாறான வெளிப்பாடு

கொழும்பு, மார்ச் 3
அரசமைப்பு உருவாக்க முயற்சியில் கூட்டு அரசின் இரண்டு முதன்மைக் கட்சிகளிடையேயும் மீண்டும் கருத்துப் பிளவு ஏற்பட்டுள்ளது. இதனால் இந்த முயற்சியில் மேலும் தடங்கல் ஏற்படக் கூடிய அபாயநிலை உருவாகியுள்ளது. புதிய அரசமைப்பே உருவாக்கப்படும் எனவும், பொதுவாக்கெடுப்புடன் நிறைவேற்றப்படும் என்றும் அமைச்சரவை இணைப் பேச்சாளரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினருமான ராஜித சேனாரட்ன நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்த நிலையில், புதிய அரசமைப்பு உருவாக்கப்படாது என்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு மாத்திரமே மேற்கொள்ளப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர நேற்றுத் தெரிவித்துள்ளார். >> 24

## மீள்குடியேற்ற அமைச்சின் திட்டங்கள் மேற்பார்வை

வடக்கு வருகிறது அதிகாரிகள் குழு

யாழ்ப்பாணம், மார்ச் 3
மீள்குடியேற்ற அமைச்சு மற்றும் அதன் கீழான அதிகார சபைகள், நிறுவனங்கள் ஊடாகவடக்குமாகாணத்தில் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்ட வேலைத் >> 24

## சீனிக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்க முடிவு

கொழும்பு, மார்ச் 3
சீனிக்கான கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்த கடும் எதிர்ப்பை >> 24

## சாணக்கிய குணவர்த்தன நீதிமன்றுக்கு வரவில்லை

ஆட்கொணர்வு மனு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3
சாட்சியம் கூறவேண்டிய ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சாணக்கிய குணவர்த்தன நீதிமன்றில் முன்னிலையாகாததால் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 12 பேரின் ஆட்கொணர்வு மனு முல்லைத்தீவு நீதிமன்றினால் இந்த மாத இறுதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் திருகோணமலை மாவட்ட முன்னாள் அரசியல் >> 24

## விளக்கமறியல் கைதி யாழ். சிறையில் சாவு

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் சிறைச்சாலையில் நேற்றுமுன்தினமிரவு உயிரிழந்துள்ளார் என்று >> 24

# பன்றிக் காய்ச்சலால் இளம் தாய் நேற்று வவுனியாவில் உயிரிழப்பு

## வடக்கில் நிகழ்ந்த முதல் சாவு இது

வவுனியா, மார்ச். 3
எச்1 என்1 வைரஸ் தொற்றான பன்றிக் காய்ச்சலுக்கு இலக்காகியிருந்த இளம் தாய் ஒருவர் சிகிச்சை பயனின்றி வவுனியா வைத்தியசாலையில் நேற்று உயிரிழந்துள்ளார் என வைத்தியசாலைப் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் தெரிவித்தார்.
வடக்கு மாகாணத்தில் பன்றிக் காய்ச்சல் பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. இதுவரை 60 பேர் பன்றிக் காய்ச்சல் தொற்றுக்கு இலக்காகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் பன்றிக் காய்ச்சல் தொற்றுக்கு இலக்கான ஒருவர் வடக்கில் உயிரிழந்துள்ளார். அநுராதபுரம் மாவட்டத்தின் ஹெப்பிட்டிக்கொலாவ வைச் சேர்ந்த டினோசா சிரானி ரத்னாயக்கா (வயது26) என்ற >> 24

முச்சந்தி முரளி



இப்பிடி அடிபடுகிறதிலேயே காலம் போகப்போகுது பாருங்கோ...

## குற்றமிழைத்த படையினரை காப்பாற்றாது நல்லாட்சி அரசு

அவர்களுக்குத் தண்டனை உறுதி என்கிறார் அமைச்சர் மகிந்த அமரவீர



கொழும்பு, மார்ச் 3
இலங்கை இராணுவத்தினரை மின்சாரக் கதிரை, பன்னாட்டு நீதிமன்றிலிருந்து காப்பாற்றியதைப் போன்று, குற்றமிழைத்த ஒரு சில >> 24

## மைத்திரி, ரணிலின் செயலகங்கள் இணைந்து நடமாடும் சேவைகள்

வடக்கில் விரைவில் நடத்தத் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 3
வடக்கு மாகாண்த்தின் நான்கு மாவட்டங்களில் அரச தலைவர் செயலகம் மற்றும் தலைமை அமைச்சர் செயலகம் உள்ளிட்ட அனைத்துச் செயலகங்களும் இணைந்து நடமாடும் சேவைகளை >> 24

உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்ட்ரீம் சேவர்

ரூ.1000 அல்லது அதற்கு மேல் சேமிக்கும் எந்தவொரு தொகைக்கும்
6.75% (வ.வி.வீ. 6.96%) முதல் 9.25% (வ.வி.வீ. 9.65%) வரை
அதிகபட்ச வட்டி

24 மணிநேர அழைப்பு மையம்: 011 2350000
இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கி கிளைக்கு விரைந்து வர்தன எக்ஸ்ட்ரீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## கேரளக் கஞ்சாவுடன் சிக்கினார் ஒருவர்

கொழும்பு, மார்ச் 3
நீர்கொழும்பு பிரதேசத்தில் பொது இடமொன்றில் 4 கிலோ கேரளக் கஞ்சாவுடன் நபரொருவரைக் கைதுசெய்துள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்தனர்.
கடற்படையினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நீர்கொழும்புப் பொலிஸாருடன் இணைந்து மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார்.
பறிமுதல் செய்யப்பட்ட கேரள கஞ்சாவும் கைதுசெய்யப்பட்ட நபரும் மேலதிக விசாரணைக்காக நீர்கொழும்புப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-10)

## புதிய அதிபரை பூட்டி வைத்த ஏழு பேருக்கு விளக்கமறியல்

பதுளை, மார்ச் 3
பதுளை தமிழ்ப் பாடசாலை ஒன்றில் புதிய அதிபர் நியமிக்கப்பட்டதை விரும்பாத பெற்றோர்கள் சிலர் அதிபரையும், அவருடன் வந்த சிலரையும் அறைக்குள் வைத்து பூட்டி வைத்த சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.
இந்தச் சம்பவம் தொடர்பில் ஆறு பெண்கள் உட்பட ஏழு பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். மேலும் இருவர் தேடப்பட்டு வருகின்றனர்.
இது தொடர்பில் தெரியவருவதாவது:
பதுளை செரண்டிப் தமிழ் வித்தியாலயத்திற்கு எஸ். சுந்தர்ராஜா என்பவர் புதிய அதிபராக நியமிக்கப்பட்டு அவர் நேற்றுமுன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றார்.
ஏற்கனவே இருந்த அதிபர் அன்றைய தினம் கடமைகளை ஒப்படைத்துவிட்டு வேறு பாடசாலைக்குச் சென்றுவிட்டார்.
எனினும் புதிய அதிபரின் நியமனத்தை ஏற்றுக்கொள்ளாத பெற்றோரும், மாணவர்களும் தமது எதிர்ப்பை வெளியிட்டதுடன், புதிய அதிபரையும் அவருடன் வந்த சிலரையும் அலுவலக அறையினுள் பூட்டி வைத்தனர்.
இதையடுத்து அவர்கள் பூட்டிய கதவைப் பெரும் பிரயத்தனத்திற்கு மத்தியில் திறந்து வெளியேறியதுடன் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தனர். இதனையடுத்து 7 பேர் கைது செய்யப்பட்டனர். (த-ய-41)



## சளைக்காது தொடரும் காணாமற்போனோரை தேடும் போராட்டங்கள்

கிளிநொச்சி மார் 3
கிளிநொச்சி மாவட்டக் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களது போராட்டம் நேற்று 11ஆவது நாளாகவும் தொடர்ந்தது.
இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து பச்சிலைப்பள்ளி வண்ணாங்கேணி வடக்கு துர்க்கா விளையாட்டுக் கழகத்தினரும் நேற்று இணைந்தனர்.
வவுனியாவில் இடம்பெறும் சுழற்சி முறையிலான போராட்டத்துக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திரரசா நேற்று நேரில் சென்று ஆதரவை வழங்கினார்.
கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 11 ஆவது நாளாகத் தமது போராட்டத்தை நேற்றுத் தொடர்ந்தனர்.
வலிந்து காணாமல் போனவர்கள், கடத்தப்பட்வர்கள், அரசியல் கைதிகள், இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டவர்கள் ஆகியோரின் விடுதலை மற்றும் தெளிவான வெளிப்படுதலை வலியுறுத்தி இரவு பகல் பாராது கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் இந்தப் போராட்டம் தொடர்கிறது.
கடந்த 20 ஆம் திகதி ஆரம்பமான போராட்டத்துக்குப் பல்வேறு தரப்பினரும் ஆதரவு வழங்கி வருகின்றனர். நேற்றுப் பச்சிலைப் பள்ளி வண்ணாங்கேணி வடக்கு துர்க்கா விளையாட்டுக் கழகத்தினரும் தமது ஆதரவை தெரிவித்துப் போராட்டத்தில் இணைந்தனர்.
வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று 7ஆவது நாளாகவும் சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர். வடக்கு மாகாணசபை உறுப்பினர் இந்திரராசா நேரில் சென்று மக்களுடன் கலந்துரையாடி ஆதரவைத் தெரிவித்தார். (த-21-6)

## திருகோணமலையிலும் பட்டதாரிகள் போராட்டம்

திருமலை, மார்ச் 3
திருகோணம்லை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்துக்கு முன்னால் நேற்று காலவரையறையற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.
கிழக்கு மாகாணத்திலுள்ள வேலையற்ற பட்டதாரிகளுக்கான நிரந்தர நியமனத்தை வழங்குமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகத் திருகோணமலை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் தலைவர் எஸ்.சிவக்குமார் தெரிவித்தார். (த-ய-45)



## இராணுவத்தின் தலைமை அதிகாரி குணதிலக ஓய்வு

கொழும்பு, மார்ச் 3
இலங்கை இராணுவத் தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக கடந்த 28 ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார். இந்த நிலையில் தற்போது இலங்கை இராணுவத்தின் இரண்டாவது நிலைப் பதவி வெற்றிடமாகியுள்ளது.
பொறியியல் படைப்பிரிவைச் சேர்ந்த மேஜர் ஜெனரல் சன்ன குணதிலக, 35 ஆண்டுகள் இலங்கை இராணுவத்தில் பணியாற்றியுள்ளார். இதன்போது, அவர் பல்வேறு முக்கிய பதவிகளை வகித்துள்ளார்.
55 வயதை எட்டிய நிலையில், இலங்கை இராணுவத்தில் இருந்து ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சன்ன குணதிலகவுக்கு, பனாகொடவில் உள்ள இராணுவத்தின் பொறியியல் படைப்பிரிவுத் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் பிரியாவிடை அளிக்கப்பட்டது. (த-10)



## அனுர சேனாநாயக்க தொடர்ந்து மறியலில்

கொழும்பு, மார்ச் 3
றக்பி வீரர் வசீம் தாஜுதீனின் படுகொலைச் சம்பவம் தொடர்பில், கைதுசெய்யப்பட்ட முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர சேனாநாயக்கவை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் நேற்று உத்தரவிட்டார்.
றக்பி வீரர் வசீம் தாஜுதீன் கொலை வழக்கில் அனுர சேனாநாயக்க மற்றும் நாராஹேன்பிட்டிக் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சுமித் பெரேரா ஆகியோர் கைதுசெய்யப்பட்டிருந்த நிலையில், முதலாம் சந்தேக நபரான சுமித் பெரேரா பிணையில் விடுதலை செய்யப்பட்டார். (த-10)

## வறட்சி பாதித்த மக்களுக்கு தண்ணீர் வழங்க பவுசர்கள்

*மாவட்ட செயலர்களிடம் கையளிப்பு*

கொழும்பு, மார்ச் 3
வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்காகத் தண்ணீர் பவுசர்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இதில் முதற்கட்டமாக 25 பவுசர்கள் மாவட்டச் செயலர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டன என அரச தலைவர் ஊடகப் பிரிவினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:
வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குக் குடிதண்ணீர் வழங்குவதற்காகத் தண்ணீர் பவுசர்களைப் பெற்றுக்கொடுக்கும் சிறப்பு நிகழ்ச்சித் திட்டம் நேற்று முற்பகல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் கொழும்பு பாதுகாப்பு அமைச்சு வளாகத்தில் நடைபெற்றது.
வறட்சியான காலநிலை காரணமாக 15 மாவட்டங்களில் 83 பிரதேச செயலர் பிரிவுகளில் பாதிக்கப்பட்டுள்ள ஒரு லட்சத்து 80ஆயிரம் குடும்பங்களுக்குத் தற்போது குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.
முதற்கட்டமாக களுத்துறை, குருநாகல், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு இந்த பவுசர்கள் வழங்கப்பட்டன.
அமைச்சர் வஜிர அபேவர்தன, பிரதி அமைச்சர் தினேஷ் கன்கந்த, அரச தலைவரின் செயலர் பி.பீ. அபயக்கோன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.
இதேவேளை, உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்பட்ட நச்சுத்தன்மை அற்ற உணவுப்பொருள்களை விற்பனை செய்யும் நடமாடும் வாகனத்தையும் அரசதலைவர் பார்வையிட்டார் என்றுள்ளது. (த-10)

## பள்ளிவாசலைப் பாதுகாக்க கையெழுத்து திரட்டும் பணி

கொழும்பு, மார்ச் 3
'தம்புள்ளை பள்ளிவாசலைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளின் கீழ் நாடு முழுவதும் கையெழுத்துத் திரட்டும் நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது என ஐக்கிய சமாதான முன்னணியின் தலைவர் மிப்லார் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
நேற்று பிற்பகல் ஒரு மணிக்குக் கொழும்பு , மருதானை பள்ளிவாசல் முன்பாகக் கையெழுத்து திரட்டப்பட்டது. இது ஏனைய இடங்களிலும் தொடரவுள்ளது.
தம்புள்ளை பள்ளிவாசலுக்கு மீண்டும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இனவாதிகள் தலைதூக்க ஆரம்பித்துள்ளனர். முன்னர் இருந்த அரசு எப்படி செயற்பட்டதோ அதே பாணியில்தான் நல்லாட்சி அரசும் இது விடயத்தில் செயற்படுகின்றது. எனவே, பள்ளிவாசல் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்குரிய பணியே இடம்பெறவுள்ளது - என்றார். (த-10)

களுத்துறைத் தாக்குதல்;

## இனம்காணப்பட்டார் பிரதான சூத்திரதாரி

கொழும்பு, மார்ச் 3
களுத்துறை பஸ் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்குத் திட்டமிட்ட பிரதான சூத்திரதாரி அடையாளம் காணப்பட்டுள்ளார் என்று பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.
களுத்துறை சிறைச்சாலை பஸ் மீது கடந்த திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் 7 பேர் சாவடைந்ததுடன் 4 பேர் காயம் அடைந்திருந்தனர்.
இந்த நிலையில் தாக்குதல் நடத்திய சந்தேக நபர்கள் சம்பவ இடத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளதுடன் அவர்கள் தப்பிச் செல்வதற்கு பயன்படுத்தியதாகக் கூறப்படும் வெள்ளை நிற வான் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர்.
இந்த நிலையிலேயே சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி உட்பட அனைத்துச் சந்தேக நபர்களையும் அடையாளம் கண்டுள்ளதாகப் பொலிஸ் பேச்சாளர் கூறினார். (த-10)



## அல்ஹுசைன் - மங்கள ஜெனிவாவில் சந்திப்பு

ஜெனிவா, மார்ச் 3
இலங்கையின் மனித உரிமை நிலைமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளருக்கும், அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் இடையில் ஜெனிவாவில் சந்திப்பு நடைபெற்றது.
இந்தச் சந்திப்புத் தொடர்பான ஒளிப்படத்தை அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர நேற்று முன்தினம் தனது கீச்சகத்தில் (ருவிற்றரில்) பதிவு செய்தார்.
ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசு கால அவகாசம் கோரவுள்ளது. கோரப்படும் கால அவகாசத்தில் ஐ.நா. தீர்மானத்தில் சொல்லப்பட்ட பரிந்துரைகளைச் செய்து முடிப்பதற்கான கால அட்டவணையை, இந்த ஆண்டு கொண்டு வரப்படவுள்ள ஐ.நா. தீர்மானத்தில் உள்ளடக்குவதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனையை உள்ளடக்கிய ஐ.நா. தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கும் அதற்கு இலங்கை அரசை இணை அனுசரணை வழங்கச் செய்வதுக்குமான கலந்துரையாடல்கள் ஜெனிவாவில் தற்போது நடைபெற்று வருகின்றன. அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீரவுடனான இந்தச் சந்திப்பில் மேற்படி விடயம் தொடர்பிலும், ஐ.நா. ஆணையாளர் கலந்துரையாடியதாகத் தெரிய வருகின்றது. (த-5)

## ஊழல், மோசடிகள் விசாரணை ஆணைக்குழுவின் காலம் நீடிப்பு

கொழும்பு, மார்ச் 3
ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளும் அரச தலைவர் ஆணைக்குழுவின் காலம், மேலும் ஆறு மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
"ஆணைக்குழுவின் காலம் இன்றுடன் நிறைவடைய இருந்தது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் மேலும் 6 மாதங்களுக்கு கால நீடிப்பு, வழங்கப்பட்டுள்ளது. கடிதம் ஒன்றின் மூலமாக அரச தலைவர் இந்த அறிவிப்பை அனுப்பி வைத்தார்" என்று ஆணைக்குழுவின் செயலாளர் எச். டபிள்யு. குணதாஸ தெரிவித்தார். (வ-4)

பேரா. பல்கலை. பகிடிவதைக் குற்றச்சாட்டு

## மாணவர்களின் அலைபேசிகளை ஆராயப் பொலிஸாருக்கு அனுமதி

கொழும்பு, மார்ச் 3
பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பகிடிவதைக் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மாணவர்களின் அலைபேசிகளில் நிர்வாண ஒளிப்படங்கள் இருக்கின்றனவா என்பது பற்றி விசாரணை நடத்த நீதிமன்று பொலிஸாருக்கு அனுமதி வழங்கியது.
பேராதனை பல்கலைக்கழகத்தின் இளநிலை மாணவர்கள் மீது துன்புறுத்தல்களை மேற்கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் மூத்த மாணவர்கள் 15 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். கண்டி நீதிவான் மன்றில் இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தது. 15 மாணவர்களும் மன்றில் முன்னிலையாகினர். அதன்போதே பொலிஸாரின் கோரிக்கைக்கு நீதிமன்று அனுமதி வழங்கியது.
அத்துடன், 15 பேருக்கும் எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியல் நீதிமன்றால் நீடிக்கப்பட்டது. (வ-4)

# கேப்பாபிலவை விடுவித்ததாக உலகுக்கு அரசு காட்டக்கூடாது

### அந்தப் பகுதி மக்கள் விசனம்





முல்லைத்தீவு, மார்ச் 3
இராணுவம் சுவீகரித்த கேப்பாபிலவுக் காணிகள் இதுவரை விடுவிக்கப்படவில்லை. அயற் கிராமக் காணிகளை விடுவித்துவிட்டு கேப்பாபிலவுக் காணிகள் விடுவிக்கப்பட்டதாகச் சொல்வது உண்மைக்கு மாறானது என அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
கேப்பாபிலவில் 128 குடும்பங்களுக்குச் சொந்தமான 480 ஏக்கர் காணிகளை விடுவிக்கக் கோரி நேற்றுமுன்தினம் அங்குள்ள இராணுவ முகாமுக்கு முன்னால் தகரக் கொட்டகை அமைத்து மக்கள் தொடர் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.
போராட்டம் குறித்து அந்த மக்கள் தெரிவித்ததாவது:
கேப்பாபிலவுக் கிராமம் மிகவும் தொன்மை வாய்ந்த கிராமம். இங்கு உள்ள அனைவரும் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த எமது சொந்தக் காணிகளை இராணுவத்திடம் பறிகொடுத்து விட்டு மாதிரிக் கிராமம் என்ற பெயரில் அரசு நடத்தும் நலன்புரி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளோம். மாதிரிக் கிராமத்தில் தங்க வைக்கப்பட்ட காலத்தில் இருந்து எங்கள் பூர்வீகக் காணிகளை விடுவிக்கவேண்டி தொடர் போராட்டம் நடத்திய வண்ணமே உள்ளோம். அயற்கிராமங்கள் எல்லாம் விடுவிக்கப் பட்டுவிட்டன. எமக்குச் சந்தோசம். ஆனால்கேப்பாபிலவுவிடுவிக்கப்பட்டது என்ற தோரணையை உலகுக்குக் காட்டவேண்டாம்.
நல்லாட்சி அரசிடம் மீண்டும் நாங்கள் வலியுறுத்துகிறோம். எங்கள் பரம்பரை வாழ்விடங்களை விடுவியுங்கள். சொந்த நாட்டில் அகதியாக வாழ்ந்தது போதும். நாங்கள் தெளிவாக இந்த அறவழிப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். எங்கள் காணிகளுக்குள் செல்லும் வரை நாங்கள் இங்கிருந்து நகரமாட்டோம்.
கடந்த ஒரு மாத காலமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் காணி விடுவிக்கக் கோரி நடந்த பொதுமக்களின் போராட்டத்துக்கு இன மத மொழி கடந்து அனைத்து மக்களின் ஆதரவும் கிடைத்தது. அதே போன்று நாங்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்துக்கும் அனைவரது ஆதரவும்வேண்டும் என்றனர். (த-7)

பிணைமுறி விவகாரம்;

## மத்திய வங்கியிடமிருந்து அறிக்கை கேட்கும் ரணில்

கொழும்பு, மார்ச் 3
சர்ச்சைக்குரிய பிணைமுறி விவகாரம்தொடர்பில்தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கியிடம் அறிக்கை கோரியுள்ளார்.
பிணை முறிகள் விநியோகத்தின்போது நாணயமாற்று கொடுக்கல், வாங்கல்களுக்கு உட்பட்ட வருட இறுதியின் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்குரிய நடவடிக்கை எப்போதிருந்து ஆரம்பமாகியது என்பது குறித்த தகவல்களையும் அவர் கோரியுள்ளார்.
மேற்படி விதிமுறைகளைப் பின்பற்றி விநியோகிக்கப்பட்ட பிணை மற்றும் முறிகள் தொடர்பில் முழுமையான விவரங்கள் அடங்கிய அறிக்கையையும் ரணில் கேட்டுள்ளார்.
வருடம் முழுவதும் பிணை முறிகள் விநியோகிக்கப்பட்டு வருடத்தின் இறுதியில் வர்த்தமானி அறிவித்தல் கடந்த 1999 ஆம் ஆண்டிலிருந்தே வெளியிடப்பட்டு வருகின்றது என்று உத்தியோகப்பற்றற்ற ரீதியில் இதுவரை தகவல் கிடைத்துள்ளது. அதனை உறுதியாக அறிவிப்பதற்கு மத்திய வங்கி தவறியிருக்கின்றது.
இந்த நிலையில் வருடத்தின் இறுதியில் பிணைமுறிகள் விநியோகத்துக்குட்பட்ட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டதன் காரணம் மற்றும் அதற்கான அடிப்படையாக இருந்த ஆலோசனைகள் தொடர்பான முழுமையான விடயங்கள் ஆகியவற்றைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மத்திய வங்கியிடம் கோரியுள்ளார். (த-5)



## வட்டுவாகலில் வீழ்ந்த எரிகற்களால் பரபரப்பு

முல்லைத்தீவு, மார்ச் 3
முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் நேற்று வானத்தில் இருந்து வீழ்ந்த சிறு எரிகற்களால் அரை மணிநேரம் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.
பரந்தன்முல்லைத்தீவு பிரதான வீதியில் வட்டுவாகல் பாலத்துக்கு அண்மையிலும், மணற்குடியிருப்புப் பாலத்துக்கு அருகிலும் நேற்று இந்தஎரிகற்கள்வானத்தில்இருந்துவீழ்ந்துள்ளன. தணல் கக்கிய நிலையில் வீழ்ந்த அவை சுமார் அரை மணி நேரம் வீதியில் புகைத்துக்கொண்டிருந்ததாக நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்தனர்.
வீதியால் பயணித்த வாகனச் சாரதிகள் இவற்றைக் கண்டு அச்சமடைந்ததாகவும், அருகில் காவலரணில் இருந்த இராணுவத்தினரும் சற்றுப் பரபரப்புடன் காணப்பட்டனர் எனவும் கூறப்பட்டது. (கு-101)

## பட்டதாரிகள் வேலைவாய்ப்பில் அக்கறையற்றுள்ள அமைச்சுகள்

### வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் சாடல்

யாழ்ப்பாணம், மார்ச் 3
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சைத் தவிர ஏனைய நான்கு அமைச்சுகளும்பட்டதாரிகள்வேலைவாய்ப்பில் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை. உண்மையில் இவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுத்திருந்தால் அதன் முன்னேற்றத்தைப் போராட்டத்தில் ஈடுபடும் பட்டதாரிகளுக்கு தெரிவிக்கவேண்டும் என வடக்கு மாகாண உறுப்பினர் சுகிர்தன் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு முன்னால் வேலையில்லாப் பட்டதாரிகள் கவனவீர்ப்புப் போராட்டத்தைத் தொடர்ச்சியாக 4ஆவது நாளாக மேற்கொண்டு வருகின்றனர். அவர்களது போராட்டம் நியாயமானது. இந்தப் போராட்டத்தின் நியாயத் தன்மையைக் கருத்தில் எடுக்கவேண்டும். மாகாண சபையும் மத்திய அரசும் அவர்களது கோரிக்கைக்குச் சாதகமான பதிலை வழங்கவேண்டும்.
இவர்கள் கடந்த வருடம் பெரும் போராட்டத்தைச் செய்தபோது வடக்கு மாகாண சபை அந்தப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்து பல வாக்குறுதிகளையும் வழங்கியது. ஆனால்கல்வி அமைச்சைத் தவிர ஏனைய நான்கு அமைச்சுகளும் இன்றுவரை இவர்களது வேலைவாய்ப்பில் அக்கறை செலுத்தியதாகத் தெரியவில்லை.
மாகாண சபை உருவாக்கப்பட்டு 3 வருடங்கள் முடிவடைந்த நிலையிலும் வடக்கு இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்பை உருவாக்கக் கூடிய எந்த நடவடிக்கையையும் மேற்கொள்ளவில்லை. எந்தவொரு தொழிற்சாலைகளும் உருவாக்கப்படவில்லை. வடக்கை நோக்கி வந்த தொழிற்சாலைகளையும் என்ன காரணங்களைக் காட்டித் திருப்ப முடியுமோ அதனைச் செய்தது தான் மாகாண சபையின் சாதனை. மாகாண சபை அமைச்சர்கள் உடனடியாக வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.
அதற்கு மத்திய அரசு தடையாக இருந்தால் அதைப் பகிரங்கப்படுத்தி பட்டதாரிகளுடன் போராடத் தயா ராகவேண்டும் என்றார். (கு-101)

# பட்டதாரிகளின் கோரிக்கைகள் குறித்து வடக்கு மாகாண ஆளுநருடன் பேச்சு

## போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோரிடம் தெரிவித்தார் சரவணபவன் எம்.பி.



யாழ்ப்பாணம், மார்ச் 3

வடக்கு மாகாண பட்டதாரிகள் அரச வேலைவாய்ப்பை வலியுறுத்தி முன்னெடுத்துவரும் போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் நேற்றுக் கலந்துகொண்டார். அவர்களது போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்த அவர், பட்டதாரிகளின் கோரிக்கைகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருடனும் கலந்துரையாடுவதாகக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண பட்டதாரிகள் அரச வேலைவாய்ப்புக் கோரி யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் முன்பாகக் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

"நாங்கள் பட்டதாரிகளாக இருந்தும் அரச வேலை கிடைக்கவில்லை. பட்டம் பெறத நபர்கள் தற்போது அரச வேலைகளில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வேலைவாய்ப்புக் கிடைக்காததால் நாங்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளோம். பட்டம் பெற்று 4 வருடங்களுக்குப் பின்னரே ஆசிரிய நியமனத் துக்கான போட்டிப் பரீட்சை நடைபெற்றது. அதனால் பலருக்கு சிறந்த பெறுபேறு கிடைக்கவில்லை. எமக்கு நிரந்தர வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தித் தருமாறு கோருகிறோம்" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகள் தெரிவித்தனர்.

"உங்களுக்கு எனது முழுமையான ஆதரவு கிடைக்கும். உங்களின்கோரிக்கைகளைநிறைவேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும். வடக்கு மாகாண ஆளுநருடனும் இந்த விடயம் தொடர்பில் பேச்சு நடத்துவேன். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன யாழ்ப்பாணத்துக்கு நாளை வருகிறார்.

அவருடனான சந்திப்பைவிட, உங்களுடைய போராட்டம் முக்கியம் என்பதனால், அரச தலைவருடனான சந்திப்பை நான் புறக்கணித்து உங்களுக்கு ஆதரவாக இருப்பேன்" என்று போராட்டத்தில் ஈடுபட்டுள்ள பட்டதாரிகளிடம் தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன். (வ-4)

# பணம் பறிக்கும் கும்பலில் இருவர் தீவகத்தில் சிக்கினர்

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் 2 ஆயிரம் ரூபா நாணயத் தாளை வழங்கி மோசடியில் ஈடுபட்டார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 4 பேரில் 2 பேர் வேலணையில் வைத்து ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பகுதிகளிலும் கார் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் சென்று கும்பல் ஒன்றுநிதிமோசடியில் ஈடுபடுவதாக பலரும் குறிப்பிட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில் இவர்கள் ஒரு வர்த்தக நிலையத்தில் சென்று நிதி மோசடியில் ஈடுபட்டிருந்த சமயம் சீ.சீ.ரிவி கமராவிலும் சிக்கியிருந்தனர்.

மோசடிநபர்களிடம் பணத்தினைப் பறிகொடுத்தவர்களில் ஒருவரின் செய்தியுடன் மோசடி நபர்கள் இருவரின் சீ.சீ.ரி.வி கமராவில் பதிவாகிய ஒளிப்படமும் பத்திரிகையில் வெளியாகியது.

இந்த நிலையில் மோசடிக் கும்பல் இதே பாணியில் வேலணையில் உள்ள ஓர் வர்த்தக நிலையத்தில் ஆயிரம் ரூபா நோட்டைக் கொடுத்து 100 ரூபா ரீலோட் செய்து மிகுதிப் பணம் 900 ரூபாவையும் பெற்ற பின்பு 2 ஆயிரம் ரூபாவே வழங்கினோம் என்று தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளது.

எனினும் 2 ஆயிரம் ரூபா நாணயத்தாள் இல்லை என்று வர்த்தகர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மேசையின் லாஞ்சியை வர்த்தகர் காண்பித்த வேளை, அதில் இருந்த பணத்தின அபகரித்துக் கொண்டு கும்பல் தப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வர்த்தகர் உடனடியாகவே ஊர்காவற்றுறை பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

அதன் பிரகாரம் மோசடிக் கும்பலில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் நீதிமன்றின் உத்தரவில் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது

(வ-101)

### குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட

# 13 போராளிகளின் சாவுதான் டில்லி மீது புலிகளுக்கு வெறுப்பை ஏற்படுத்தியது

## இந்திய அமைதிப்படை அதிகாரியின் நூலில் தெரிவிப்பு

புதுடில்லி, மார்ச் 3

குமரப்பா, புலேந்திரன் உள்ளிட்ட போராளிகளின் சாவுதான் இந்திய இராணுவம் மீது விடுதலைப் புலிகளுக்கு காழ்ப்புணர்ச்சியைத் தோற்றுவித்தது.

அதுவே பின்னர் இந்தியத் தலைமை அமைச்சர் ராஜீவ் காந்தி படுகொலைக்கும் காரணமாக அமைந்தது.

இவ்வாறு இந்திய அமைதிகாக்கும் படை அதிகாரியாக இலங்கையில் பணியாற்றிய முன்னாள் இந்திய இராணுவ அதிகாரியும் பிரபல பத்தி எழுத்தாளருமான சுஷாந்த் சிங் தெரிவித்துள்ளார்.

'மிஷன் ஓவர்சீஸ்: டெயாரிங் ஒப்பரேஷன்ஸ் பை த இந்தியன் மிலிட்டரி' என்ற பெயரிலான நூல் ஒன்றை அவர் வெளியிட்டார். அந்த நூலிலேயே சுஷாந்த்சிங்மேற்கண்டவாறு கூறியுள்ளார். இந்தியாவுக்கு வெளியே பிற நாடுகளில் இந்திய இராணுவம் நடத்திய இராணுவ நடவடிக்கைகள் குறித்த மிக முக்கிய சம்பவங்களின் தொகுப்பாக இந்த நூல் வெளிவந்திருக்கிறது.

1987ஆம் ஆண்டு இலங்கையில் 'பவன்' என்ற பெயரில் இந்திய இராணுவத்தால் நடத்தப்பட்ட படை நடவடிக்கை 1988ஆம் ஆண்டு மாலைதீவில்நடத்தப்பட்ட 'காக்டஸ்' இராணுவ நடவடிக்கை, 2000ஆம் ஆண்டு சியராலியோனில் நடத்திய 'குர்கி' இராணுவ நடவடிக்கை என்பவற்றின் புதிய பல தகவல்களை சுஷாந்த் சிங் இந்த நூலில் விவரித்துள்ளார்.

இந்திய இராணுவம் இலங்கையில் முன்னெடுத்த இராணுவ நடவடிக்கை குறித்து நூலில் அவர் தெரிவித்துள்ளதாவது:

"1987ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 5ஆம் திகதி காலை பத்து மணியளவில் இந்திய அமைதிகாக்கும் படையின் அதிகாரி மேஜர் ஷெனன் சிங்கின் படையணிக்கு இலங்கை இராணுவத்தின் 54ஆவது படையணியில் இருந்து ஒரு தகவல் வந்திருந்தது. "இந்திய அமைதிகாக்கும் படையினர் வசமிருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் 13 பேரையும் நீதிமன்ற விசாரணைக்காக அன்று மாலை 4 மணிக்கு தம்மிடம் ஒப்படைக்க வேண்டும். 13 போராளிகளும் சிறை வைக்கப்பட்டுள்ள பலாலி உணவகத்தின் பாதுகாப்பை முழுமையாக இலங்கை இராணுவம் வசம் ஒப்படைத்து விட்டு அங்கிருந்து இந்திய அமைதிப் படை விலகிச் செல்ல வேண்டும்" என்று அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இது மேஜர் ஷெனன் சிங்குக்கு கடும் அதிருப்தியைத் தந்திருந்தது. ஏனெனில், பிடித்து வைக்கப்பட்ட 13 போராளிகளுக்கும் மன்னிப்பு வழங்கப்படும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், மீண்டும் அவர்களை விசாரிப்பது முறையல்ல என்று அவர் கருதினார். மேலும், அவர்கள் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டால், அங்கு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படலாம் என்று விடுதலைப் புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அத்துடன், இலங்கையின் அழுத்தங்களுக்கு இந்திய இராணுவம் செவிசாய்க்காது என்றும் விடுதலைப் புலிகள் நம்பியிருந்தனர்.

தமக்குக் கிடைத்த தகவலை புதுடில்லி வட்டாரத்துக்குத் தெரியப்படுத்திய ஷெனன் சிங், போராளிகளை இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கக் கூடாது என்றும், அப்படி ஒப்படைத்தால், இந்திய இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான நல்லெண்ண உறவு கடுமையாகப் பாதிக்கப்படும் என்றும் விளக்கியிருந்தார். எனினும் புதுடில்லியில் இருந்து அவருக்கு சாதகமான பதில் கிடைக்காததால், போராளிகளை இலங்கை இராணுவ வசம் ஒப்படைக்க ஷெனான் சிங் வேண்டா வெறுப்பாக ஒப்புக் கொண்டார்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த போராளி குமரப்பா, "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? நாம் இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டால் அதுவே எமது கடைசி நாளாக அமைந்து விடும் என்று எமது தலைவர்கள் கூறியிருக்கிறார்கள்" என்று ஷெனான் சிங்கிடம் கூறினார். இந்த வார்த்தைகளின் மறைபொருளைப் புரிந்து கொள்ளாத ஷெனான், விருப்பமேயில்லாமல் மேலிடத்து உத்தரவுக்கு அடிபணியத் தயாரானார்.

மற்றொருபுறம், இந்தச் செய்தியைக் கேட்ட போராளிகள், தமக்கு காகிதமும் பேனையும் தருமாறு கேட்டதுடன், ஒரு கடிதத்தை எழுதி உறவினர்களுக்குக் கொடுத்தனுப்பினர். மதிய நேரம் போராளிகள் 13 பேருக்கும் மதிய உணவு டிபன் கெரியரில் கொண்டு வரப்பட்டிருந்தது. இந்திய இராணுவத்தின் தீவிர பரிசோதனையின் பின் அந்த கெரியர்கள் போராளிகளிடம் வழங்கப்பட்டன.

மிகச் சரியாக மாலை நான்கு மணிக்கு மேஜர் ஷெனான் சிங் 54ஆவது படையணித் தலைமையதிகாரியிடம் பாதுகாப்பை ஒப்படைத்து விட்டு தமது படையணியின் பாதுகாப்பை விலக்கிக் கொண்டு, சுமார் 500 மீற்றர் தொலைவே உள்ள தமது முகாமைச் சென்றடைந்தார். போராளிகளை இலங்கை இராணுவம் வசம் ஒப்படைத்து விட்டது பற்றி புதுடில்லி இராணுவ அலுவலகத்துக்கும் அவர் தகவல் தெரிவித்தார்.

சில நிமிடங்களில், இலங்கை இராணுவ வீரர் ஒருவர் மேஜர் ஷெனானிடம் ஓடி வந்து, போராளிகளை மீண்டும் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் என்று அவரிடம் கேட்டுக்கொண்டார். ஆனால், மேலிடத்து உத்தரவு இன்றி எதுவும் செய்ய முடியாது என்று ஷெனான் மறுத்து விட்டார். பின்னர், இந்திய இராணுவத்தின் உயரதிகாரி ஒருவர் ஷெனானிடம், போராளிகளைக் கையேற்குமாறு கூறினார்.

"இலங்கை இராணுவத்தினர் போராளிகளைக் கையளிக்க மறுத்தால், அவர்களைச் சுடலாமா? என்னிடம் கையளித்த பின் போராளிகளை இலங்கை இராணுவம் சுட்டுக் கொன்றால் நான் என்ன செய்வது? அல்லது இரு தரப்பினரும் தாக்குதலில் இறங்கினால் நான் என்ன செய்வது?" என்று ஷெனான் கேள்வியெழுப்பினார்.

இந்தக் கேள்விகளுக்கான பதில்களைப் பெற்றுத் தருவதாகக் கூறி புதுடில்லி இராணுவ தலைமையகத்துடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார் அந்த உயரதிகாரி.

அதேநேரம், வயர்லஸ் கருவி மூலம் ஷெனானைத் தொடர்புகொண்ட இலங்கை இராணுவ அதிகாரியொருவர்,

குமரப்பா மற்றும் புலேந்திரன் உட்பட 13 போராளிகளும் சயனைட் அருந்தி தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிவித்தார்.

இந்தச் சம்பவமே விடுதலைப் புலிகளுக்கு இந்திய இராணுவத்தின் மீது காழ்ப்புணர்ச்சியாக உருவெடுத்தது.

கடைசியில் ராஜீவ் காந்தியைக் கொலை செய்வதற்கும் காரணமாக அமைந்தது என்று அந்த நூலில் சுஷாந்த் சிங் தெரிவித்துள்ளார். (வ-5)

# பிள்ளையின் ஒழுக்கத்துக்கு பெற்றோர்தான் பொறுப்பு

*யாழ்ப்பாண நீதிவான் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மார்ச் 3
பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்க வேண்டியது ஒவ்வொரு பெற்றோரின் பொறுப்பு. அதிலிருந்து பெற்றோர் விலகமுடியாது. விலகவும் கூடாது.

இவ்வாறு கஞ்சா, சுருட்டுடன் கைதான சிறுவனின் வழக்கில் யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன் தெரிவித்தார்.

கஞ்சா போதைப் பொருளுடன் சுருட்டு ஒன்றை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் சிறுவன் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவர் சான்று பெற்ற பாடசாலையில் தடுப்பில் வைக்கப்பட்டிருந்தார்.

சிறுவனுக்கு எதிரான வழக்கு யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. குற்றப்பத்திரிகை வாசிக்கப்பட்ட போது, சிறுவன் குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டான்.

அதனையடுத்துச் சிறுவனின் தந்தையாரை அழைத்த நீதிவான், மேற்கண்டவாறு அவரிடம் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் இவ்வாறான குற்றச் செயல்களில் சிறுவன் ஈடுபட்டால் கடுமையான தண்டனை வழங்கப்படும் என்றும் நீதிவான் எச்சரித்தார்.

அத்துடன் கஞ்சா சுருட்டு வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு சிறுவன் 9 ஆயிரம் ரூபாவை தண்டமாகச் செலுத்த வேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டது.

(வ-4-103)

# பாதசாரிக் கடவையில் மாணவியை மோதிவிட்டுத் தப்பித்தவர் கைது

*காப்புறுதிப் பத்திரம் காட்டிக் கொடுத்தது*

யாழ்ப்பாணம், மார்ச் 3
பாதசாரிகள் கடவையில் வைத்து பாடசாலை மாணவி ஒருவரை மோட்டார் சைக்கிளால் மோதிவிட்டுத் தப்பிச் சென்ற குற்றச்சாட்டில் இளைஞன் ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். அவரை எதிர்வரும் 14ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாண நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ்ப்பாண நகர்ப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றின் அருகே அமைந்திருந்த பாதசாரிகள் கடவையில் மாணவி ஒருவர் சாலையைக் கடக்க முற்பட்டுள்ளார். அந்த வேளை மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த இளைஞர் ஒருவர் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாத நிலையில் மாணவியை மோதித் தள்ளியுள்ளார். அத்துடன் விபத்தை ஏற்படுத்திய பின் மாணவியை வைத்தியசாலைக்கு கூட்டிச் செல்லாமல், அந்த இளைஞன் அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

விபத்துத் தொடர்பில் சம்பவ இடத்தில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். தப்பிச் சென்ற இளைஞரின் காப்புறுதி பத்திரம் சம்பவ இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. அதனை வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் குற்றஞ்சாட்டப்பட்ட இளைஞரை கைது செய்து யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தினர்.

காயமடைந்த மாணவியின் கால் முறிவடைந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். வழக்கினை விசாரணை செய்த யாழ்ப்பாண நீதிமன்ற நீதிவான் சி.சதீஸ்தரன், இளைஞனை எதிர்வரும் 14ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இதேவேளை, காங்கேசன்துறை சாலையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் துவிச்சக்கர வண்டி விபத்தில் காயமடைந்த துவிச்சக்கர வண்டியில் பயணித்த தம்பதிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தனர். கணவன் சிகிச்சை பயனளிக்காமல் நேற்று முன்தினம் சாவடைந்தார்.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த ராஜரட்டை பல்கலைக்கழக மாணவனை பொலிஸார் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்று முற்படுத்தினர். விபத்தில் காயமடைந்தவர்களை குற்றஞ்சாட்டப்பட்ட மாணவனே வைத்தியசாலையில் சேர்த்தார் என்று பொலிஸாரால் மன்றில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து அவரை பிணையில் விடுவிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

(வ-103)

# ஆசிரியர் பயிற்சி பட்டச் சான்றிதழ் வழங்கல் நாளை

யாழ்ப்பாணம், மார்ச் 3
கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் 2014/2015ஆம் கல்வியாண்டில் கல்வி கற்று பரீட்சையில் சித்தி அடைந்த ஆசிரிய பயிலுநர்களுக்கான பயிற்சி பட்டச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வு இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளன. முதலாவது அமர்வில் பங்குபற்ற இருப்பவர்கள் காலை 7.30 மணிக்கும் இரண்டாவது அமர்வில் பங்குபற்ற இருப்பவர்கள் மு.ப. 11.30 மணிக்கும் வருகை தருமாறு கலாசாலையின் முதல்வர் வி.கருணைலிங்கம் அறிவித்தார். (வ-422)

**2017 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்**

வடக்கு மாகாண சபைக்கான பொருள்கள் சேவைகளைப் பெற்றுக் கொள்ளவதற்காக 2017 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான முடிவுதிகதி 15.03.2017 வரை கால நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

*அ.பத்திநாதன்*
*பிரதம செயலாளர்,*
*வடக்கு மாகாண சபை,*
*இல.63, நல்லூர் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம்.* (சி.28373) (13.18)

**பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்கம் (வ-து)**

**பதவி வெற்றிடம்**

மேற்படி சங்கத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்காக தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**கிளைமுகாமையாளர் 208/13 வெற்றிடம் - 02**

சம்பளத் திட்டம் 13/2015 சுற்று நிருபப்படி
14230-120x10-130x10-16730

*தகைமைகள்:* 108/81இன்படி

அ) கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பளத் திட்டத்தில்சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்டதுறையிலான பதவியில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

*அல்லது*

ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணதர) பத்திரம்/க.பொ.த (சாதாரண தரத்தில்) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/தூயகணிதம், சிங்களம்/தமிழ்மொழி என்பவற்றினை உள்ளடக்கியதாக 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் கூடிய 6 பாடங்களிலான சித்தியும் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 2 வருடங்களுக்கு குறையாத அனுபவமும்.

**வயதெல்லை : 18 - 45**
**(கூட்டுறவுப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக்கப்பட்டுள்ளது)**
**விண்ணப்ப முடிவு திகதி : 17.03.2017**

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி **தலைவர், பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்கம், பண்டத்தரிப்பு** என்ற முகவரிக்கு 17.03.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**பண்டத்தரிப்பு பரிஸ் ப.நோ.கூ.சங்கம்**
**பண்டத்தரிப்பு.** (aja.in/943)(11,18) **பொதுமுகாமையாளர்.**

**மணமக்கள் தேவை**

இந்து கௌரவ குடும்பம் வெளிநாடு, செவ்-குற்றமுள்ள, கி.பா. குறைந்த மணமகன்களிற்கு A/L படித்த மணமகள்கள் தேவை. உள்ளூர் அரச உத்தியோகத்தர்களுக்கு மணமகள்கள் தேவை. 1992 Rc (PR) வெளிநாட்டு மணமகளுக்கு வெளிநாட்டில் உள்ள மணமகன் தேவை.
**தொடர்பு: சசி திருமண சேவை,**
**5/1, புகையிரதவீதி நீராவியடி, யாழ்ப்பாணம்.**
077 044 3589-Viber

**அல்வாய் வேவிலந்தை ஸ்ரீ முத்துமாரி அம்மன் தேவஸ்தானம் மஹா சத சண்டி யாகம்_2017**
**2 ஆவது நாள் உற்சவம்**



பூத்தவளே! பவனம் பதினான்கையும் பூத்த வண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னையன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே!

**இரண்டாம் நாள் யாகத்தின் உபயகாரர்கள்.**

**சிங்களம் புதிய பிரிவுகள் / வாய்மூல, செவி மடுத்தல்பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம்**

சிங்களம்பேச, எழுத, வாசிக்க புதியபிரிவுகள் ஆரம்பம் சனி, ஞாயிற்று மற்றும் வார நாள்களில் **04.03.2017 சனி யன்று** ஆரம்பம்.

அரச கரும மொழிகள் திணைக்களத்தினால் இம் மாத நடுப்பகுதியில் நடத்தவுள்ள வாய் மூல மற்றும் செவிமடுத்தல் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பம் **03.03.2017** வெள்ளி மாலை **4.30 5.30** வரை.
**இல.41, றக்காலேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணத்தில்**

**கிளை இல.72, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம்.**
**விவரங்களுக்கு : 077 703 3729 ஸ்ரீ மாஸ்டர்**

**MAJESTIC CINEPLEX**
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

**T.Y.M.H.A SPORTS FESTIVAL-2017**
**திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்**
**நடத்தும் மாபெரும் விளையாட்டு விழா - 2017**

**கரம் - Carrom**
★ ஒற்றையர் ஆட்டம் ஆண் / பெண்
★ இரட்டையர் ஆட்டம் ஆண் / பெண்
★ குழுநிலை போட்டி ஆண் / பெண்
வயதுப் பிரிவினருக்கான போட்டி
13 வயதுப் பிரிவு ஆண் / பெண்
17 வயதுப் பிரிவு ஆண் / பெண்
20 வயதுப் பிரிவு ஆண் / பெண்



**சதுரங்கம் - Chess**
8 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்
10 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்
12 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்
14 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்
16 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்
18 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்



**மேசை பந்தாட்டம் - Table Tennis**
★ ஒற்றையர் ஆட்டம் ஆண் பெண்
★ இரட்டையர் ஆட்டம் ஆண் பெண்
★ குழுநிலை ஆண் பெண்
8 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்
10 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்
12 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்
15 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்
18 வயதுக்குட்பட்ட ஆண் /பெண்
21 வயதுக்குட்பட்ட ஆண் / பெண்



வயதெல்லைகள் 01/01/2017 இலிருந்து கணிக்கப்படும்.
திறந்த வயது பிரிவினருக்கும் நடைபெறும்.
**முடிவுத் திகதி : 09.03.2017 தொடர்பு: 077 1016 407**



**மென்பந்து துடுப்பாட்டம்**
★அணிக்கு 6 பேர் கொண்ட 05 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விலகல் முறையிலான கிரிக்கெற் சுற்றுப் போட்டி.

**இடம்: T.Y.M.H.A. மைதானம் (பனிக்கர் மைதானம்)**

**முதலாம் இடம் 50,000 ரூபாவும் வெற்றிக்கிண்ணமும்**
**2ஆம் இடம் 20,000 ரூபாவும் வெற்றிக்கிண்ணமும்**
**விண்ணப்பப்படிவம் : 2000 ரூபா**
★அனைத்துப் போட்டிகளும் விலகல் முறையில் நடைபெறும்.
★விண்ணப்பப் படிவங்களை இந்து வாலிபர் சங்கத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
தொடர்பு: 077 151 0454

### அரசியல்வாதிகளின் நலன்சார்ந்த திட்டங்களால்

# குறைந்த வருமானம் பெறும் குடும்பங்கள் நெருக்கடியில்

## மைத்திரி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 3

பொது மக்களுக்குத் தேவையான உணவு, வீடு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளுக்காக சகல அரசுகளும் முன்னுரிமையளித்து செயற்படுதல் அவசியமானது. எனினும் அரசியல்வாதிகளின் தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை இலக்காகக் கொண்டு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதனால் எமது நாட்டில் குறைந்த வருமானமுடைய மக்கள் தமது வாழ்வாதாரம் தொடர்பாக பல்வேறு இன்னல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளன.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொலன்னாவ சாலமுள்ள பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 396 வீடுகளைக் கொண்ட "லக்சந்த செவன" வீடமைப்புத் தொகுதியின் இரண்டாம் கட்டத்தை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அரச தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பௌதிக வளங்களின் அபிவிருத்தியால் கண்கள் குளிர்ச்சியடைந்தாலும் மக்களின் வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்த முடியாவிடின் அந்த அபிவிருத்திச் செயற்பாடுகளால் பயனேதும் இல்லை. நாட்டில் சகல மக்களையும் பொருளாதார ரீதியில் மேம்படுத்துதல் தற்போதைய அரசின் குறிக்கோளாகும். இன்று நாட்டின் சகல துறைகளின் அபிவிருத்தி விரைவுபடுத்தப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டளவில் நாட்டில் வீடு, நகர அபிவிருத்தி, விவசாயம், கல்வி மற்றும் சுகாதாரம் உள்ளிட்ட சகல துறைகளிலும் சிறப்பான முன்னேற்றத்தை பெற்றுக்கொள்வதற்கு அரசால் முடியும் என்று நம்புகின்றேன். தற்போது ஒரு சிலர் அரசுக்கு எதிராக பல்வேறு குற்றச்சாட்டுக்களை முன்வைப்பதுடன் எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபடுகின்றனர். சில ஊடகங்களும் கெடுதியான விடயங்களை மாத்திரம் தெரிவித்து தமது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. ஜனநாயக உரிமைகள் மற்றும் சுதந்திரத்தின் வரையறைகளுக்கு அப்பாற்பட்டு நாட்டுக்கு அழிவுகளை ஏற்படுத்த வேண்டாம் என்றார்.

ஆயிரத்து 188 மில்லியன் முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்ட "லக்சந்த செவன" வீடமைப்புத் தொகுதியில் 396 வீடுகள் உள்ளன. கொழும்பு பழைய களனிப் பாலத்துக்கு சமாந்தரமாக நிர்மாணிக்கப்படும் புதிய களனிப் பாலத்தின் நிர்மாணப் பணிகளால் வீடுகளை இழந்த சேதுவத்தை, வதுள்ளவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த 280 குடும்பங்களுக்கும் இந்தத் திட்டத்தில் வீடுகள் வழங்கப்பட்டன. (வ-10)

# ஆவணங்களின்றி பயணிகள் சேவையில் ஈடுபட்ட சாரதிக்குத் தண்டம்

சாவகச்சேரி, மார்ச் 3

ஏ9 சாலையில் பயண்ப்போருக்கு ஆபத்தை விளைவிக்கக் கூடிய வகையில் பயணித்த பேருந்தை வழிமறித்து சோதனையிட்ட பொலிஸார், சாரதியிடம் வாகன வரிப் பத்திரம், வாகன தரச் சான்றிதழ் மற்றும் வழித்தட அனுமதியின்றி பயணிகளை ஏற்றி வந்தமை ஆகிய குற்றங்களைக் கண்டறிந்தனர். அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட வழக்கில் 14 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது நீதிமன்று.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவில் இடம்பெற்றது.

இந்தச் சாரதிக்கு எதிராக பொலிஸார் சாவகச்சேரி நீதிவான் மன்றில் ஆபத்தை விளைவிக்கக் கூடிய வகையில் வாகனம் செலுத்தியமை, வாகன வரிப் பத்திரம் வாகன தரச் சான்றிதழ் ஆகியவை இல்லாமை சாலையில் பயணித்தமை மற்றும் வழித்தட அனுமதியின்றி பயணிகளை ஏற்றி வந்தமை ஆகிய நான்கு குற்றச்சாட்டுக்களை முன்வைத்தனர்.

சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சாரதி குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டார்.

சாரதி முதல் மூன்று குற்றங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதமும் நான்காவது குற்றத்துக்கு 5 ஆயிரம் ரூபாவுமாக மொத்தம் 14 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்த வேண்டும் என்று நீதிமன்று உத்தரவிட்டது. சாரதியின் செயலால் அந்த வாகனத்தில் பயணித்த பயணிகள் பெரும் சிரமத்தின் மத்தியில் வேறு வாகனங்களில் பயணத்தை மேற்கொண்டனர். (வ 9)


ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை கருணாகரன் (சுரேஷ்)



மில் ஒழுங்கை, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கருணாகரன் நேற்று (02.03.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் சறோஜினிதேவி தம்பதிகளின் அன்பு மகனும், பிரதீபாவின் (கனடா) அன்புக் கணவரும், லபின்சன் (கனடா), கெனுசா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ரமேஸ்வரன் (கனடா), காலஞ்சென்ற காஞ்சனாதேவி (லண்டன்) மற்றும் காண்டீபன் (காண்டி- மல்லாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சுகன்யா (கனடா), நகுலேஸ்வரன் (லண்டன்), சுபத்திரா (மல்லாகம்) ஆகியோரின் மைத்துனரும், சுவேதன் (கனடா), லக்சனா (கனடா) ஆகியோரின் சிறிய தந்தையும், வைஸ்ணவி (லண்டன்), தட்சாயினி (லண்டன்), சத்திகிரிசன் (மல்லாகம்), சபரிஷன் (மல்லாகம்) ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2017) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மில் ஒழுங்கை,
மல்லாகம்.

தகவல்
காண்டீபன் (சகோதரன் - மல்லாகம்)

0771345985

தோற்றம் 1935 . 04 . 02



மறைவு 2017 . 03 . 01

### திருமதி சிவபாக்கியலட்சுமி பூலோகராஜா

வேலணை கிழக்கு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியலட்சுமி பூலோகராஜா 01.03.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு-அமுதம்மா தம்பதிகளின் அன்பு மகளும், வடிவேலு - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பூலோகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராசமணி, பரமேஸ்வரி காலஞ்சென்ற இராசா, காலஞ்சென்ற கனகசபை, சுந்தரம் (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் இ.மி.சபை), காலஞ்சென்ற காந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தர்மகுணராஜா (இலங்கை மின்சார சபை ஊழியர் - திருகோணமலை), சுகுணராஜா (மின்இணைப்பாளர்), சாந்தராணி (பிரான்ஸ்), சடாச்செல்வி, ஜெயராஜா (வேலை மேற்பார்வையாளர், யாழ்.மாநகரசபை), புஸ்பராஜா (கட்டட ஒப்பந்தக்காரர்-நீர்கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், மாலினிதேவி (திருகோண மலை), கனகேஸ்வரி (இந்தியா), தவராஜா (பிரான்ஸ்), கணேசதாசன், பத்மராணி (ஆசிரியர், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்), சுதாகினி (நீர்கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், பவீந்தர், சுஜீவன், கஜீவன், கௌசிகன், கௌசல், லிதர்சன், துவாரகா, சிந்துஜா, தாஜ்மா, ஜலஜா, தேனுஜா, கஜமுகன், தனுஜன், அபர்னா, சண்முகப்பிரியன், கம்சப்பிரியன், அருந்ததி, கம்சாயினி, கபினுஜா, சாமினி, சாருகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், டிலுக்சி, சுருதி, சுவாதி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

588/11, நாவலர் வீதி, அரியாலை,
யாழ்ப்பாணம்.
(யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய எதிர் ஒழுங்கை)

தகவல்
குடும்பத்தினர்.

077 610 3572

## மரண அறிவித்தல்



### திருமதி மனோன்மணி பொன்னம்பலம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி பொன்னம்பலம் நேற்று (02.03.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தனுஷ்கோடி கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னம்பலத்தின் (இலங்கை போக்குவரத்து சபை முன்னாள் சாரதி) அன்பு மனைவியும், பத்மராணி, ஜெயராணி, பிறேமிளா, மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற ரகுபதி (ஆசிரியர்) மற்றும் சாந்தலிங்கம், சிவானந்தன் ஆகியோரின் மாமியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம், இராசதுரை, லட்சுமி மற்றும் பூரணம், கலாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயக்குமார், தர்சினி, ஜீவகுமார், நந்தகுமார், சுபாசினி, தனுஷா, கார்த்திகா, பானுரேகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகிஜா, மாதூரியன், துஷானந்தன், சுவாதி, சஹானா, ஜக்சிதா ஆகியோரின் பூட்டி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


சுப்பிரமணியம் வீதி,
அரியாலை.

(AJA/1547)(11,18)

தகவல்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 05 . 05 . 1993



இறப்பு 28 . 02 . 2017

### செல்வன். தவகுலரெத்தினம் ரகுராம்

2013/14 இறுதி ஆண்டு மாணவன் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்
(பிரயோக விஞ்ஞான பீடம் - இலங்கை ரஜரட்ட பல் கலைக்கழகம்)
(Royal College Old Boy)

நயினாதீவை பூர்வீகமாவும் கொழும்பு வெள்ளவத்தையை வாழ்விடமாகவும் கொண்ட தவகுலரெத்தினம் ரகுராம் 28.02.2017 செவ்வாய்க்கிழமை அன்று அகாலமரணமடைந்தார் அன்னார் தவகுலரெத்தினம் மாலினி தம்பதிகளின் பாசமிகு ஏக புதல்வனும் பவித்தாவின் ஆசை அண்ணாவும் சிவானந்தன் + குருகுலராணி ஏகாம்பரபதி + லோகராணி ஆகியோரின் பாசமிகு மருமகனும், பாமினி + உதயகுமார், கமலாதேவி + புவனசுந்தரராஜன் ஆகியோரின் அன்புப் பெறாமகனும் சர்மிளா, ரிஸ்மிலா, ரிஸ்மிலன், சுபா, கமல்ராஜ், நிமல்ராஜ் ஆகியோரின் அன்பு உடன்பிறவா சகோதரரும், பைரவியின் பாசமிகு மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 03.03.2017 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு இல. 33, வெவசெற் பிளேஸ், வெள்ளவத்தையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்..

தகவல்: த.சிவானந்தன் (மாமா)
No. 33, Vaverset Place, Wellawatte, Colombo- 06.

### அரச தலைவர் மைத்திரி பணிப்பு

# பொருத்து வீடு குறித்து மீள ஆராயவேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 3

பொருத்து - முன்நிர்மாணிக்கப்பட்ட வீடு தொடர்பில் மீண்டும் ஆய்வுகளை நடத்துவதற்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகின்றது.

10 ஆயிரம் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை அமைப்பதற்கு அனுமதி கோரி, முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தை ஏற்றுக் கொள்ள மறுக்கப்பட்ட பின்னர், அரச தலைவர் இந்தக் குழுவை அமைத்துள்ளார்.

மீள்குடியேற்ற அமைச்சினால் வடக்கு - கிழக்கு மாகாணத்தில் முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டை அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. 2.1 மில்லியன் ரூபா செலவில் ஒவ்வொரு வீடும் நிர்மாணிக்கப்பட இருந்தது. அரசின் இந்தத் திட்டத்துக்கு வடக்கு மாகாண சபை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் என்று சகல தரப்பினரும் தமது எதிர்ப்புக்களை வெளியிட்டிருந்தனர். முன்நிர்மாணிக்கப்பட்ட வீடு ஒன்றை அமைப்பதற்கு செலவாகும் தொகையில் இரண்டு கல் வீடுகள் அமைக்க முடியும் என்று அவர்கள் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவைக் குழு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவா நியமிக்கப்பட்டிருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இந்த விடயத்தில் பலமாக எதிர்த்திருந்த நிலையிலும் முன்நிர்மாணிக்கப்பட்ட வீட்டை அமைப்பதற்கான முயற்சிகள் மீள்குடியேற்ற அமைச்சால் மேற்கொள்ளப்பட்டன.

10 ஆயிரம் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளை அமைப்பதற்காக அமைச்சரவையின் அனுமதிக்காக முன்வைக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் அரச தலைவர் மைத்திரிபாலவால் ட்ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

இதன் பின்னர் முன்நிர்மாணிக்கப்பட்ட வீடு தொடர்பில் மீளவும் ஆராய்ந்து அறிக்கையை முன்வைக்குமாறு அரச தலைவர் குழு ஒன்றை நியமித் துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## கஞ்சா வைத்திருந்த 3 பேருக்கு ஒரு மாத கால கடூழியச் சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 3

கஞ்சா போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 3 இளைஞர்களுக்கு ஒரு மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது யாழ்ப்பாணம் நீதிவான் மன்று. கஞ்சா போதைப் பொருளை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் கோப்பாய் பொலிஸாரால் கடந்த வாரம் கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் மூவரும் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றால் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. சந்தேகநபர்களுக்கு எதிரான குற்றப்பத்திரிகையை பொலிஸார் முன்வைத்தனர். மூவரும் தமக்கு எதிரான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மாத கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாண நீதிவான் மன்று தீர்ப்பளித்தது. (வ-103)

## அருளுரை நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 3

யாழ்ப்பாண சின்மயாமிசன் ஞானவேல் ஆச்சிரமத்தில் ஆங்கில மொழியில் அருளுரை நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை இடம்பெறும் என்று யாழ்ப்பாண சின்மயா மிசன் அறிவித்தது.

யாழ்ப்பாணத்துக்கு வருகை தர இருக்கும் ஒரிஸ்ஸா சின்மயா மிஷன் சுவாமி மாதவனானந்தாஜி மற்றும் கல்கத்தா சின்மயா மிஷன் சுவாமி சைத்தன்யானந்தாஜி ஆகியோரின் ஆன்மிக அருளுரையே இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-10)

## கண்ணீர் அஞ்சலி

எமது துறை விரிவுரையாளர் **திரு. பா. கேதீசன்** அவர்களின் அன்புத் தந்தையார்

**தாமோதரம்பிள்ளை பாலச்சந்திரன்**

அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்

**ஓம் சாந்தி சாந்தி சாந்தி**

**தலைவர் விரிவுரையாளர்கள், ஊழியர்கள்**
**கணிதமும் புள்ளிவிபரவியலும் துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

## மருத்துவர் அம்பிகைபாகனுக்கு சாவ. வைத்தியசாலையில் சிலை



சாவகச்சேரி, மார்ச் 3

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேவையாற்றி மறைந்த மருத்துவர் சங்கரப்பிள்ளை அம்பிகைபாகனின் உருவச் சிலை வைத்தியசாலை முன்றலில் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

மறைந்த மருத்துவரின் உருவப் படத்திரை நீக்க நிகழ்வு சாவகச்சேரி வைத்தியசாலை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இந்த நிகழ்விலேயே மருத்துவரின் நினைவாக உருவச் சிலை அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தியசாலை சமூகத்தினர் முன்வைத்தனர்.

மருத்துவரின் உருவப்படத்தினை மருத்துவரின் நண்பர் க.பூபாலசிங்கம் திரை நீக்கம் செய்து வைத்தார். உருவப் படத்துக்கான மலர் மாலைகளை மருத்துவ அதிகாரி த.குகதாசன் மற்றும் ஓய்வு நிலை மருத்துவர் ச.சி.அருளானந்தம் ஆகியோர் அணிவித்தனர். இந்த நிகழ்வில் முழங்காவில், பளை தென்மராட்சி பிரதேசங்களைச் சேர்ந்த பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

பதிவு செய்யப்பட்ட நோயாளர்களை உறுப்பினர்களாகக் கொண்ட தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்கம் ஆரம்பிக்கவேண்டும் என்று அமரர் அம்பிகைபாகன் நீண்ட காலமாக முன்வைத்திருந்த யோசனை நேற்றைய நிகழ்வில் சாவகச்சேரி வைத்தியசாலை நிர்வாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. (வ 9)

## அவதாரத் திருவிழா

யாழ்ப்பாணம், மார்ச் 3

அருள் திரு பாங்காரு அடிகளாரின் 77ஆவது அவதாரத் திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு மூத்தவிநாயகர் கோவிலடியில் உள்ள ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. கரவெட்டி கரணவாய் மேல்மருவத்தூர் சுயம்பு ஆதி பராசக்தி வார வழிபாட்டு மன்றத்தால் நடத்தப்படும் இந்த நிகழ்வில் ஆராதனை மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-173)

## மரண அறிவித்தல்



**திருமதி தர்மாம்பாள் ஆறுமுகம்**

சாவகச்சேரி வடக்கு மீசாலை சோலை அம்மன் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு தெஹிவளையைத் தற்போதய வதிவிடமாகவும் கொண்ட திருமதி தர்மாம்பாள் ஆறுமுகம் 01.03.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கைலாயபிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேதவனம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வே.ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், தேவசேனா, திரிபுவனப்பெருந்தேவி, நடேசன், திருமகள், பூமகள், கலைமகள் ஆகியோரின் பாசமிகு தாயும், சந்திரபாலனின் ஆசை அம்மாவும், காலஞ்சென்ற வாரித்தம்பி மற்றும் சற்குணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஞானபண்டிதன், இராஜசிங்கம், வாசுகி, மனோகரன், சிறிரவீந்திரன், முரளிதரன், யோகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், சாருமதி, சுதர்சன், சுமந்திரன், குயிலன், காயத்திரி, மதுராந்தகன், மதுராந்தகி, செந்தூரன், ஐங்கரன், ஆருத்திரன், அஞ்சலி, அஞ்சனா, அபிராமி, அங்கஜன், பைரவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05.03.2017 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளின் பின்னர் தகனக்கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்பு 077 136 9915**
**011 273 4588**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி


எமது கல்லூரி ஆசிரியர் **திரு.இ. சிவச்செல்வன்** அவர்களின் அன்புத்தந்தையார்

**வே. இலகுநாதன்**

அவர்கள் 02.03.2017 அன்று இறைபதமடைந்தார். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

**பாடசாலைச் சமூகம்**
**யா/ நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி**

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



கடந்த 02.02.2017 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் இராசையா சிவராசா**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.03.2017) சனிக்கிழமை காலை 6.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அத்தோடு தொடர்ந்து முற்பகல் 11.30 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*இந்த அழைப்பை அனைவரும் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

**திருவெண்பாதி, வதிரி.** **குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் வாழ்வின் எழுச்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் **திருமதி யாழினி நித்தியானந்தன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சரஸ்வதி வேலுப்பிள்ளை**

அவர்களின் மறைவையொட்டி துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும் ஊழியர் நலன்புரிசங்கம்**


**பிரதேச செயலகம் பருத்தித்துறை.**

## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



**குட்டியன் ஜெயராசா**
**(சின்னத்தம்பி)**

**பிறப்பு**
**12.03.1964**



**இறப்பு**
**03.02.2008**

(ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)
திதி: 03.03.2017

வாழ்வெனும் பெருநதியில் என்றும்
வற்றாத நினைவுகளுடன் வாழ்கின்றேன்
அழியாத வானத்தின் வண்ணமாய் என்னுடன் நீங்கள்
வாழ்ந்திருந்து சென்ற தடமெங்கிலும்
காயாதிருக்கின்றது என் கண்ணீர்த்துளிகள்

**"பவளவனம்"**
**நவிண்டில்**

என்றும் நினைவுகளுடன்
**மனைவி ஜெ.றஞ்சினி**

# தென்மராட்சியில் 70 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள்

தென்மராட்சி, மார்ச் 3
தென்மராட்சி பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 70 குடும்பங்களுக்கு மீள்குடியேற்ற அமைச்சின் வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் சுயதொழில் உதவிப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.
பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ள வன்னிப்பிரதேசத்திலிருந்து வந்த பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், காணாமற்போனோரின் குடும்பங்கள் மற்றும் மறுவாழ்வளிக்கப்பட்டு சமூகத்தில் இணைக்கப்பட்டோரின் குடும்பங்களில் இதுவரை சுய தொழில் உதவிப் பொருள்கள் கிடைக்காத 70 குடும்பங்களுக்கே தற்போது அவை வழங்கப்படவுள்ளன.
இவ்வாறான குடும்பங்களைத் தெரிவு செய்யும் பணிகள் பிரதேசத்தின் கிராம அலுவலர்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அலுவலர்களால் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## விண்ணப்பிக்கும் காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 3
காலையடி மறுமலர்ச்சி மன்றத்தினால் வடமாகாண அளவில் நடத்தப்படவுள்ள ஆங்கில எழுத்துக்கூட்டல் போட்டிக்கு விண்ணப்பிக்கும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.
இந்தப் போட்டிக்கு மாணவர்கள் விண்ணப்பிப்பதற்கு இறுத்தித்திகதி இன்று வியாழக்கிழமை என ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், பல்வேறு தரப்பினரின் வேண்டுகோளுக்கிணங்க எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
இந்தப் போட்டியின் அரையிறுதி வரையான போட்டிகள் யாவும் மாணவர்கள் வசிக்கும் மாவட்டங்களிலேயே இடம்பெறும். போட்டிக்கான விண்ணப்பப் படிவங்களையும், சொற் தொகுதிகளையும் marumalarchy.org என்ற மறுமலர்ச்சி மன்ற இணையத் தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-10)

## எம்மை நாம் தயாரிப்போம்

தவக்காலம் 40 நாள்களுக்காக மட்டுமல்ல. 365 நாள்களும் இறைவன் இயேசுவுக்கு மிகவும் பிடித்தமான பிள்ளைகளாக வாழ்வதற்கும், இறைவனுடைய திருப்பாடுகளைத் தியானிப்பதற்கும் நம்மை நாமே தயாரிக்கும் காலம் தான் தவக்காலம்.
இந்த உலகில் நாம் எப்படி வாழ வேண்டுமென்று தம் சொல்லாலும், செயலாலும், போதனையாலும், வாழ்வாலும் எமக்கெல்லாம் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியவரே இயேசுக் கிறிஸ்து. கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வாழும் கிறிஸ்தவர்களாகிய நாமும் துன்பப்படும் மக்களின் துயர்தனை துடைக்க அழைக்கப்பட்டுள்ளோம்.
பிறரன்புப் பணிகளில் தன்னை ஈடுபடுத்திட விரும்பாத எவருமே கிறிஸ்தவர்கள் என சொல்லத் தகுதியில்லாதவர்களே. நாற்பது நாள்கள் புகைக்கவோ, குடிக்கவோ மாட்டேன் எனவும் இந்தநாள்களில் புலன்களை அடக்குவது, சண்டைசச்சரவுகள் செய்யாமல் இருப்பது, இன்னும் நிறைய ஒறுத்தல் முயற்சிகள் செய்வது என இருந்துவிட்டு உயிர்ப்பு ஞாயிறு தினத்திற்கு பின்பு முன்ரைவிட அதிகமாக அனைத்துக் காரியங்களையும் செய்வது என்று எம்மை நாமே ஏமாற்றிக் கொள்கின்றோம். தவக்காலம் என்பது நல்ல கிறிஸ்தவனாக வாழ்வதற்கான பயிற்சி. கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று திருத்தூதர் பவுல் விடுக்கும் அழைப்பு தவக்காலத்தில் எம் அனைவருக்கும் விடுக்கப்படும் முதல் அழைப்பாகும்.




மனம் திரும்புதல் என்ற முயற்சிக்கு உறுதுணையாகவே செபம், பிறரன்புப் பணிகள், நோன்பு ஆகிய மூன்று வழிகளை நற்செய்தி எமக்குச் சுட்டிக் காட்டுகின்றது. நாம் இயேசுவின் சிலுவையைச் சுமப்பதற்குப் பதிலாக நாமே சிலுவையாக மாறி நிற்கின்றோம். இந்த நிலையிலிருந்து விடுபடவும், தந்தையாம் இறைவனின் மன்னிக்கும், குணமளிக்கும் கரங்கள் எம்மீது பதிவதை உணர்வதற்கும் இயேசுவைப் போன்று சுமைதாங்கியாக பிறர் சிலுவையையும் சேர்த்துச் சுமக்கும் மனநிலையை எம்மில் வளர்த்துக் கொள்வோம். தவக்காலத்தில் நம்மை தயாரிப்போம். பயிற்சி எடுப்போம். அதை செயற்படுத்துவோம்.

செல்வி. அ. சைலேந்தினி, பாண்டியந்தாழ்வு.

**யாழ்ப்பாணத்தில் காண்டம் வாசிக்கப்படுகின்றது**

**ஸ்ரீகௌசிக அகஸ்திய நாடி சோதிட நிலையம் (pvt)Ltd**
**P.ஜெய்சங்கர்**

கொழும்பில் கடந்த .25 வருடங்களாக கௌசிக அகஸ்திய முனிவர்களால் எழுதப்பட்ட ஏட்டுச் சுவடிகள் மூலம் தங்களின் கடந்தகாலம்,நிகழ்காலம், எதிர்காலம், கல்வி,திருமணம், குழந்தைகள் , தொழில்வாய்ப்புக்கள், வெளிநாட்டுப்பயணம்போன்றவற்றைக்கூறிப்புகழ்பெற்ற சேதிடர்களால் தற்போது யாழ்ப்பாணத்தில் பலருடைய வேண்டுகோளுக்கு இணங்கி கீழ் கண்ட முகவரியில் காண்டம் வாசிக்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு.
384 A, நாவலர் வீதி, (கைலாசபிள்ளையார் கோயில் சந்தி,நல்லூர்.)
T.P: 021 2217944.

கொழும்பு முகவரி .19,1/1, கொத்தலாவல மாவத்தை,பம்பலப்பிட்டி.
தொலைபேசி . 011 258 6180 ,011 258 6208

**தேவை**

யாழ்ப்பாணத்தில் பிரபலமான இந்திய,சீன உணவகம் மற்றும் தங்ககத்திற்கு கீழ்வரும் வேலையாள்கள் தேவை. Cleaners, House keeping staff, Cooks, Kitchen helpers, Drivers
உணவு, தங்குமிடம் இலவசம்
077 464 9297

## NSB
## பகிரங்க ஏல விற்பனை

**தேசிய சேமிப்பு வங்கியின் கீழ்வரும் கிளைகளில் 01.09.2015 முதல் 31.01.2016 வரை அடகு வைக்கப்பட்டு இன்றுவரை மீட்கப்படாத அல்லது புதுப்பிக்கப்படாத தங்க ஆபரணங்கள் எதிர்வரும் 18.03.2017 தொடக்கம் 08.04.2017 வரையான காலப்பகுதியில் அந்தந்த கிளைகளிலேயே பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.**

| | கிளை | பகிரங்க ஏலம் நடைபெறும் திகதி |
|---|---|---|
| 01 | யாழ்ப்பாணம் | 18.03.2017 |
| 02 | மானிப்பாய் | 18.03.2017 |
| 03 | திருநெல்வேலி | 18.03.2017 |
| 04 | சங்கானை | 18.03.2017 |
| 05 | கிளிநொச்சி | 25.03.2017 |
| 06 | மல்லாவி | 25.03.2017 |
| 07 | பருத்தித்துறை | 01.04.2017 |
| 08 | சாவகச்சேரி | 01.04.2017 |
| 09 | முல்லைத்தீவு | 01.04.2017 |
| 10 | நெல்லியடி | 01.04.2017 |
| 11 | ஊர்காவற்றுறை | 01.04.2017 |
| 12 | காரைநகர் | 01.04.2017 |
| 13 | வங்காலை | 01.04.2017 |
| 14 | சுன்னாகம் | 08.04.2017 |
| 15 | கொடிகாமம் | 08.04.2017 |
| 16 | அச்சுவேலி | 08.04.2017 |

*ஏலத்தை ஒத்திவைக்கும் அல்லது இரத்துச்செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.*

***பிராந்திய முகாமையாளர் (வடக்கு),***
***தேசிய சேமிப்பு வங்கி***

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்
## 2017 ஆம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

01.கேள்விப் பத்திரம் வழங்கும் கடைசித் திகதி :- 10.03.2017 நண்பகல் 12.00 மணிவரை
02.கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் திகதி :- 16.03.2017(மு.ப. 10.00 மணிவரை
03.கேள்விதிறக்கப்படும் திகதி :- 16.03.2017(மு.ப. 11.00மணிவரை
04.கேள்வித்தொகையின் 2/3பகுதியைசெலுத்தி ஒப்பந்தம் செய்யவேண்டிய இறுதித்திகதி :- 22.03.2017

2017 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகளுக்கான குத்தகைஅட்டவணை

| இல | குத்தகைவிபரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை (இதரவரிகள் தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (இதரவரிகள் தவிர) (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|---|
| 01 | ஆட்டிறைச்சிக் கடை- இல-01 | 595,485.00 | 5,954.85 | 1,000.00 |
| 02 | ஆட்டிறைச்சிக் கடை- இல-02 | 595,485.00 | 5,954.85 | 1,000.00 |
| 03 | மாட்டிறைச்சிக்கடை - இல. 02 | 1,249,627.50 | 12,496.27 | 1,000.00 |

குறிப்பு:- இந்நகராட்சிமன்றத்தின் கோழி இறைச்சிக் கடைகளிலிருந்து 1Km சுற்று வட்டாரத்திற்குள் தனியார் எவரும் கோழி இறைச்சி விற்பனை நிலையம் அமைக்க அனுமதிக்கப் படமாட்டாது. மேலதிக விவரங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**திரு.கா.சண்முகதாசன்,**
செயலாளர்,
நகராட்சிமன்றம், சாவகச்சேரி.
03.03.2017



மட்டக்களப்பில் கனமழை

## இரு குளங்களின் வான்கதவுகள் திறப்பு

கொக்கட்டிச்சோலை, மார்ச்.3
மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு நாள்களாகப் பெய்துவரும் மழை காரணமாக மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட இரு குளங்களின் வான்கதவுகள் நேற்றுக்காலை திறக்கப்பட்டுள்ளன என்று மாகாண நீர்ப்பாசன திணைக்கள புளுகுணாவை பிரிவு தொழிநுட்ப உத்தியோகத்தர் தி.மதியழகன் தெரிவித்தார்.
கங்காணியார், புளுகுணாவை குளங்களின் வான்கதவுகளே இவ்வாறு திறக்கப்பட்டுள்ளன. கங்காணியார் குளத்தின் நீர்மட்டம் 15.5 அடிவரையும், புளுகுணாவை குளத்தின் நீர்மட்டம் 31.5அடிவரையும் இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-ய)

## விபத்தில் பூசகர் சாவு சாரதி தப்பியோட்டம்

மட்டக்களப்பு, மார்ச் 3
மட்டக்களப்பு பழைய கல்முனை வீதி, கல்லடியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் ஆலயப்பூசகர் ஒருவர் உயிரிழந்தார்.
அதேநேரம் விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் சாரதி தப்பிச்சென்றுள்ளதாக காத்தான்குடிப் பொலிஸார் தெரிவித்தனர். கல்லடி, பேச்சியம்மன் ஆலய பூசகரான ஆறுமுகன் வடிவேல் (70) என்பவரே விபத்தில் உயிரிழந்தவராவார்.
கல்முனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிச் சென்ற வானொன்று, இவரை மோதிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது.
சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-ய-46)



## கொட்டும் மழையிலும் பட்டதாரிகள் போராட்டம்

அம்பாறை, மார்ச்.3
அம்பாறை மாவட்ட வேலையற்ற பட்டதாரிகளின் காலவரையறையற்ற சத்தியாக்கிரகப் போராட்டம் 3 ஆவது நாளாகவும் நேற்று மழைக்கு மத்தியில் நடைபெற்றது.
அக்கரைப்பற்று கல்முனைப் பிரதான வீதியில் காரைதீவு சந்தியில் கொட்டும் மழை என்றும் பாராது பட்டதாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் சுமார் 500 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-ய-49)

மன்னாரில் புதிய வர்த்தக வளாகத்துக்கு அடிக்கல்

# கடலட்டைப் பண்ணையின் அழிவுக்கு இழப்பீடு ஏதுமில்லை

பூநகரி பகுதி மீனவர்கள் விசனம்

கிளிநொச்சி, மார்ச்.3
மன்னாரில் புதிய கடலட்டைப் பண்ணை மற்றும் ஏற்றுமதி வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ள நிலையில், ஏற்கனவே பூநகரியில் அமைக்கப்பட்டு, அழிவடைந்த கடலட்டைப்பண்ணைகளுக்கு இழப்பீடுகளோ அவற்றை மீள உருவாக்குவதற்கான உதவிகளோ கிடைக்கவில்லை என்று பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் கவலை தெரிவித்தனர்.
பூநகரி பிரதேசத்துக்கு உட்பட்ட கடற்பரப்பில் பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள், சங்கத்தினூடாகவும், நிறுவனங்களின் ஊடாகவும் கடலட்டைப் பண்ணைகள் 20 ஐ அமைத்து, அட்டை வளர்ப்பில் ஈடுபட்டனர். கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் இந்தப் பண்ணைகளை அமைத்து அவர்கள் கடலட்டை வளர்ப்பில் ஈடுபட்டனர்.
கிளிநொச்சி, மாவட்டச் செயலர், கிளிநொச்சி மாவட்டக் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள பணிப்பாளர் உட்பட அதிகாரிகள் பலர் இதனுடைய ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு அட்டைகளை கடலில் வைப்பில் இட்டிருந்தனர். இவ்வாறு வைப்பில் இடப்பட்ட அட்டைகள் வளர்ந்து வந்த நிலையில், கடந்த 2016 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப்பெருக்குக்



காரணமாக அனைத்து அட்டைகளும் முற்றாக அழிவடைந்தன.
"இந்தப் பண்ணைகளை அமைப்பதற்கு நாங்கள் பல லட்சம் ரூபாவை செலவிட்டோம். இங்குள்ளபண்ணை ஒவ்வொன்றும் 200 தர 200 மீற்றர் பரப்பளவைக் கொண்டது. இதற்கான வலைகள், கடலட்டை குஞ்சுகள் என்பவற்றுக்கும் குறிப்பிட்ட நிதியைச் செலவு செய்தோம். அட்டைகளும்வளர்ந்து வந்தன. அவற்றைப் பிடித்து விற்பதற்கு ஆவலுடன் இருந்தோம். ஆனால் அது கைகூடவில்லை. கடந்த 2016 ஆம் ஆண்டு இடம்பெற்ற வெள்ளப்பெருக்குக் காரணமாக மழை வெள்ளம் கடலுக்குள் புகுந்தது. கடற்கரையில் இருந்து சுமார் 10 கிலோமீற்றர் தூரம் கடல் நீருடன் நன்னீர் சங்கமமானது. இதன் போது கடல் நீர் உவர்ப்புத் தன்மையை இழந்தது. இது நடைபெற்று ஒரு சில நாள்களின் பின்னர் கடலட்டைகளைச் சென்று பார்த்த போது அத்தனை அட்டைகளும் நிலத்தி னுள்ளேயே சாவடைந்து கிடந்தன. பின்னர் தான் நன்னீர் கலந்ததால் கலலட்டை சாவடைந்துள்ளதை அறிந்தோம். இதனால் பல கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இதை நம்பியை எமது மீனவர்கள் பலர் தொழிலில் ஈடுபட்டனர். அவர்கள் அனைவருக்கும் இது பெரும் இழப்பாகும். எமது பண்ணைகள் கடற்கரையை அண்டிய பகுதியில் 10 கிலோ மீற்றர் தூரத்துக்கு உட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டதால் தான், நன்னீர் புகுந்தவுடன் அட்டைகள் சாவடைந்தன. இங்கு இரணைதீவை அண்மித்த பகுதியில் அமைக்கப்பட்ட ஒரேஒருஅட்டைப்பண்ணை மட்டுமே எஞ்சியுள்ளது.
ஆனால் அழிவடைந்த அட்டைப் பண்ணைகள் தொடர்பாக உரியவர்களுக்கு தெரியப்படுத்தினோம், எனினும் இதுவரை அதற்கான நட்ட ஈடுகள் எவையும் வழங்கப்படவில்லை." என்று பூநகரி யாகப்பர் கடற்றொழிலாளர் சங்கத்தை சேர்ந்த மீனவர்கள் தெரிவித்தனர்.
"எமக்கான நட்ட ஈடுகள் எவையும் வழங்கப்படாத நிலையில், மன்னாரில் புதிதாகக்கடலட்டைப்பண்ணை அமைப்பது அதிருப்தியை ஏற்படுத்துகின்றது. பூநகரியில் ஏற்கனவே அட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், மன்னாரில் முதலாவதாக அமைக்கப்படுகின்றது என்று விளம்பரம்செய்வதுவேதனை தருகின்றது" என்றும் மீனவர்கள் குற்றம் சாட்டினர்.
"பூநகரியில்இருந்து கௌதாரி முனை வரைக்கும் மீனவர்கள் கடலட்டைப் பண்ணைகளை அமைத்திருந்தனர். அவற்றுக்கான அனுமதிகள் மட்டுமே கடற்றொழில் நீரியல் வளத் திணைக்க ளத்தால் வழங்கப்பட்டன. அவற்றினுடைய வேலைத்திட்டங்களை நக்ரா நிறுவனமே செயற்படுத்தியது." என்று கிளிநொச்சி கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் சிறீரஞ்சன் தெரிவித்தார்.
"மீனவர்களுடைய வாழ்வாதாரம்உயரும்என்றுஅனைவரும் எதிர்பாத்திருந்தோம், எனினும் வெள்ளம் காரணமாக அந்தப் பண்ணைகளில் இருந்த அட்டைகள் இறந்து விட்டன. இது தொடர்பாக கொழும்பு உயரதிகாரிகளுக்கும், மாவட்ட செயலகத்தினருக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை முடிவுகள் எவையும் கிடைக்க வில்லை" என்று நக்ரா நிறுவனத்தினர் தெரிவித்தனர். (ஐ-21)



## 640 ஆசிரிய மாணவருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 3
கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் 2014/2016 கல்வி ஆண்டில் ஆசிரிய பயிற்சியை நிறைவு செய்த ஆசிரிய மாணவர்களின் பயிற்சிச் சான்றிதழ்களை வழங்கும் நிகழ்வு நாளை சனிக் கிழமை நடைபெறும் என ஆசிரிய கலாசாலை அதிபர் வி.கருணலிங்கம் தெரிவித்தார்.

கோப்பாய் ஆசிரிய கலாசாலை ரதிலக்சுமி மண்டபத் தில் கலாசாலை அதிபர் தலைமையில் நிகழ்வு நடை பெறும். 640 ஆசிரிய மாணவர்கள் சான்றிதழ்க ளைப் பெறவுள்ளனர். இடவசதிகளைக் கருத்தில் கொண்டு இரண்டு அமர்வுகளாக நடத்தத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

முதலாவது அமர்வு ஆரம்பக்கல்வி மற்றும் ஆங்கில ஆசிரிய மாணவர்களுக்கானது. காலை 9மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும். முதன்மை விருந்தினராக இசுறுபாய பத்தரமுல்ல கல்வி அமைச்சின் ஆசிரியர் கல்வி நிர்வாகப் பிரி வின் முதன்மை ஆணையாளர் கே.எம்.எச்.பண் டார கலந்து கொள்ளவார்.

மாலை அமர்வு ஏனைய 12 பாடநெறிகளுக்கானது. பி.ப.1.30 மணிதொடக்கம் 4.30 மணிவரை நடை பெறும். நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளை யாட் டுத்துறை இளைஞர்கள் விவகார கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொள்வார்.

சான்றிதழ்களைப் பெறவிருக்கும் ஆசிரியர் மாண வர்களுக்கும் அவர்களது தனிப்பட்ட முகவரிக்கு அழைப்புக் கடிதங்கள் தபாலிடப்பட்டுள்ளன. இடர் பாடுகளைத் தவிர்த்துக் கொள்ளும் முகமாகச் சான் றிதழ்களைப் பெறவரும் ஆசிரிய மாணவர்கள் தங்களது வரவை முற்கூட்டியே தத்தமது வகுப்பு ஆசிரிய மாணவ தலைவர் ஊடாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். (ந - 10)

# நிறைவேறாத வாக்குறுதிகள்

## துறைகள் இன்றி மீனவர்கள் தவிப்பு

கிளிநொச்சி, மார்ச் 3
கிளிநொச்சி மாவட்டத்தில் அமைக்கப்படவுள்ளன என்று கூறப்பட்ட 3 இறங்குதுறைகளுக்கான கட்டுமானப் பணிகள் எவையும் இதுவரை ஆரம் பிக்கப்படவில்லை. தொழிலில் ஈடுபடும் மீனவர் கள் இதனால் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள் கின்றனர்.

இவ்வாறு கிளிநொச்சி, பூநகரிப் பிரதேச மீனவர் கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பள்ளிக்குடா, நாச்சிக் குடா, வலைப்பாடு ஆகிய இடங்களில் மீன்பிடி இறங்குதுறைகள் அமைக்கப்படவுள்ளன என்று 2015ஆம் ஆண்டு தெரிவிக்கப்பட்டது. இறங்கு துறைகள் அமைக்கப்படவிருந்த இடங்களை அதிகாரிகள் ஆய்வும் செய்திருந்தனர். இதுவரை இறங்குதுறைகளுக்கான எந்தக் கட்டுமானமும் ஆரம்பிக்கப்படவில்லை.

"நாளாந்தம் தொழிலுக்குச் செல்லும் மீனவர்கள் தங்களுடைய படகுகளை நிறுத்துவதில் நெருக் கடிகளை எதிர்கொள்கின்றனர். மீன்களை கரைக்கு கொண்டுவருவதிலும், அவற்றை இறக் குவதிலும், வலைகளை கடலுக்குக் கொண்டு சென்று பாய்ச்சுவதிலும் சிக்கல்களை எதிர் கொள் கின்றனர். இறங்குறை அமைக்கப்பட்டால் இல குவான முறையில் தொழிலில் ஈடுபட முடியும் என எதிர்பார்த்தோம். அது நிறைவேறவில்லை. இறங்குதுறைகளை விரைவில் அமைக்க அதி காரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்." என்று பிரதேச மீனவர்கள் தெரிவித்தனர்.

"இந்தப் பகுதிகளில் இறங்குதுறை அமைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. அதற்கான கோரிக் கைகளை நாம் முன்வைத்தோம். இறங்குதுறை களை அமைப்பதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி ஒதுக்கியது. நீண்ட காலமாக எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை. மாவட்ட செய லகத்துக்கு இது தொடர்பாக தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

அண்மையிலும் மொறட்டுவ பல்கலைக் கழக மாணவர்கள் வந்து இது தொடர்பான ஆய்வு களை மேற்கொண்டனர். விரைவில் இறங்குது றைகள் அமைக்கப்படும் என எதிர்பார்க்கின் றேன்." என்று கிளிநொச்சி கடற்தொழில் நீரியல் வளத்திணைக்கள பதில் பணிப்பாளர் தெரிவித் தார்.

"நிதி இன்னமும் விடுவிக்கப்படவில்லை. விடுவிக் கப்பட்டதும் கட்டுமான வேலைகள் ஆரம்பிக்கப் படும்." என்று கிளிநொச்சி கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களப் பணிப்பாளர் சிறிரஞ்சன் தெரிவித்தார். (ந-21)

## நிமோனியா காய்ச்சலால் பெண் சாவு

மட்டக்களப்பு, மார்ச் 3
மட்டக்களப்பு ஏறாவூர் சுகா தார வைத்தியஅதிகாரி பிரி விலுள்ள ஏறாவூர் பள்ளி யடி வீதியைச் சேர்ந்த பெண்ணொருவர் நிமோ னியாக் காய்ச்சலால் பீடிக் கப்பட்டு சிகிச்சை பய னின்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்ததார் என்று தெரிவிக்கப்பட்டது.

36 வயதுடைய இந்தப் பெண் விசேட தேவையு டையவராவார். சில நாள் களாக காய்ச்சலால் பீடிக்கப் பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே இவர் உயி ரிழந்தார் என்று தெரிவிக் கப்பட்டது. (ந-ய.46)

## ஆயத்த வழிபாடு

யாழ்ப்பாணம், மார்ச் 3
சக்கோட்டை புனித பிரான் சிஸ் சவேரியார் ஆலயத் தின் வருடாந்தத் திரு விழா வுக்கான ஆயத்த வழிபாடு நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது. நவநாள் ஆராத னைகள் தினமும் மாலை 5 மணிக்கு திருச்செப மாலையுடன் நடைபெறஉள் ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருச்செப மாலையைத் தொடர்ந்து நற்கருணை வழிபாடும் மறுநாள் 13 ஆம் திகதி திங் கட்கிழமை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப் பலியும் ஒப்புக் கொடுக்கப்ப டும். திருவிழாத் திருப் லியைத் தொடர்ந்து ஆலய வளவில் புனிதரின் திருச் சொரூப பவனியும், ஆசீ ரும் இடம்பெறும். (ந-51)

## மாடிப்படியில் வழுக்கி விழுந்து ஒன்றரை வயது குழந்தை சாவு

நுவரெலியா, மார்ச் 3
மாடிப்படிகளில் வழுக்கி விழுந்து ஒன்றரை வயதுக் குழந்தையொன்று பரிதாப கரமாக உயிரிழந்தது. இந் தச் சம்பவம் நேற்றுமுன்தி னம் இரவு திம்புள்ள கொட் டகலை ரொசிட்டா பகுதி யில் இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தின் போது தாய் மற்றும் பாட்டி வீட்டில் இருந்துள்ளனர். அவர்கள் வேலைகளில் மூழ்கியி ருந்த வேளை இந்தச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது.

மாடிப்படிகளில் இருந்து தவறி விழுந்த குழந்தை உடனடியாக டிக்கோயா கிளங்கன் வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டது. மேலதிக சிகிச்சைக்காக கண்டி வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டது. எனினும் வைத்தியசாலை செல்லும் வழியிலேயே குழந்தை உயிரிழந்து விட்டது என்று வைத்திய சாலை அதிகாரியொருவர் தெரிவித்தார். (ந-ய .43)

## வடக்கு முஸ்லிம்களின் சவால்கள் குறித்து கனேடிய அதிகாரிகள் ஆய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 3
வடக்கு முஸ்லிம்கள் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் தேவைப்பாடுகள், அபிவிருத்திகள் குறித்து வடக்கு முஸ் லிம் சிவில் சமூகத்தினர் கனேடிய அதிகாரிகளுடன் சந்திப்பு நடத்தினர்.

சந்திப்பு யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் ஆசிய பசுபிக் அபிவிருத்தி விவகாரங்களுக்கான கனேடிய பணிப்பாளர் குளோரியா வைஸ்மன் தலைமையில் நடைபெற்றது.

மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத் தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் ரீதியாக பல விடயங் கள் முன்வைக்கப்பட்டன. காணி, வீடமைப்பு, தொழில்வாய்ப்பு, கல்வி போன்ற விடயங்களில் காணப்படு கின்ற பொதுவான பிரச்சினைகள், அவற்றின் தேவைப்பாடுகள், வர்த் தகம், விவசாயம், மீன்பிடி போன்ற துறைகளில் காணப்படும் குறைபாடு கள், பெண்கள் விவகாரம், சிறு வர்க ளின் நிலமைகள், கல்வி நிலமைகள் ஆகியன குறிப்பாக இனமுரண்பா டும், இனப்பாகுபாடும், அதனடியாக எழுகின்ற பாகுபாடுகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

இனநல்லிணக்கம், நிலைமாறுகால நீதிப்பொறிமுறை, ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கான முயற்சிக ளிலும் அரசமைப்பு மாற்றங்களில் முஸ்லிம் மக்களின் பங்களிப்புகள் குறித்து ஆராயப்பட்டது. வடக்கு மாகா ணத்தின் பொதுவான நிலைமைகளை மேம்படுத்துவதற்கு எத்தகைய விட யங்கள் முன்னெடுக்கப்படல் வேண் டும் என்ற விடயங்களும் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டன.

சந்திப்பில் வடக்கு முஸ்லிம் சிவில் சமூகப் பிரதிநிதிகள் சார்பில் ஜனாப் எம்.சி ஆரிப், ஜனாப் எம்.டி.எம். குவைஸ், ஜனாப்.எம்.எம்.எம்.நிபா ஹிர். செல்வன் அப்துல்லாஹ், செல்வி நிபியா ஆகியோர் பங்கேற்ற னர். (ந - 10)



மன்னார், மாந்தை மேற்கு பிரதேச செயலகத்துக்குட்பட்ட இலுப்பைக்கடவை ரூபி முன்பள்ளி, அந்தோனியார்புரம் முன்பள்ளி, அந்தோனியார்புரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் ஆசிரியர் விடுதி என்பவற்றுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. வடக்கு போக்குவரத்து அமைச் சர் பா.டெனீஸ்வரன் வைபவரீதியாக மின் இணைப்பு வழங்கினார். அவரின் 2016 ஆம் ஆண்டிற்கான பிரமான அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதி ஒதுக்கீட்டில் இருந்து மின் இணைப்புக்கான நிதி வழங்கப்பட்டது. (ந–21)

# காணி மீட்புப் போராட்டங்கள் கிழக்கிலும் நடக்கவேண்டும்

## யோகேஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

செங்கலடி, மார்ச்03
வடக்கு மாகாணத்தில் இராணுவத் தால் கையகப்படுத்தப்பட்ட காணிக ளைப் பெறுவதற்காக மக்கள் தீவிர மான போராட்டங்களை நடத்துகின் றனர். கிழக்கு மாகாணத்திலும் காணிகளை மீடக மக்கள் சாத்வீக போராட்டங்களை நடத்தவேண்டும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித் தம்பி யோகேஸ்வரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோறளைப்பற்று தெற்கு பிரதேச மக்களுடைய காணிப் பிரச்சினை தொடர்பாக ஆராயும் கூட் டத்திலேயே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது
மட்டக்களப்பு மாவட்டத்தில் பாடசா லைகள் மற்றும் தனியார் காணிக ளில் இராணுவத்தினரும், விசேட அதிரடிப்படையினரும் முகாமிட்டுள் ளனர். அந்தக் காணிகளை விடு விக்க நாங்கள் பலமுறை முயற்சி எடுத்தபோதிலும் அவை விடுவிக்கப் படவில்லை.

முறக்கொட்டாஞ்சேனையில் பாட சாலைக் கட்டடங்கள் உட்பட அந்தப் பகுதியை அண்டியுள்ள பொது மக்க ளின் காணிகளை உள்ளடக்கிய இராணுவமுகாம் அமைக்கப்பட்டுள் ளது. சுமார் 45 பேருக்குச் சொந்த மான காணிகள் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

புனானை இராணுவமுகாம், வாகரை இராணுவ முகாம், குருக்கள்மடம் இராணுவமுகாம், களுவாஞ்சிக்குடி விசேட அதிரடிப்படை முகாம் போன் றவை அரச அலுவலக காணிகள், பாடசாலைக் காணிகள் மற்றும் பொதுக்களுக்குச் சொந்தமான தனி யார் காணிகளில் அமைக்கப்பட்டுள் ளன.

பாதுகாப்புத் தரப்பினரால் முகாம் அமைப்பதற்குக் கையகப்படுத்தப் பட்ட காணிகளை விடுவிக்கக் கோரி சாத்விக முறையில் போராட்டங்கள் நடத்த வேண்டிய தேவை எமது பிர தேசங்களிலும் தோன்றியுள்ளது.

வடக்கு மக்கள் துணிந்து அறவழிப் போராட்டங்கள் நடத்துவதன் மூலம் தமது காணிகளை மீட்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். போராடாமல் எதை யும் பெற்றுக்கொள்ள முடியாத நிலை யிலேயே தற்போது தமிழ்ச்சமூகம் உள்ளது. என்றார். (ந-ய.47)

# போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணை தேவை

## வலியுறுத்துகின்றது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, மார்ச் 3

போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி, மீறல்களில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன்நிறுத்துவதற்கு இலங்கைக்கு ஐ.நா. அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களை கொழும்பில் நேற்றுமுன்தினம் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூறுவது தொடர்பாக ஐ.நா மனித உரிமைகள் சபையின் தீர்மானத்துக்கு கொழும்பு அரசு, 2015ஆம் ஆண்டு இணக்கம் தெரிவித்தது.

இந்த விடயத்தில் இலங்கை எதையுமே செய்யவில்லை.

இலங்கைக்கு 8 மாத கால அவகாசம் அளிக்கப்பட்டது. தனது கடப்பாடுகளில் ஒன்றைக்கூட நிறைவேற்றவில்லை. தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 18 மாதங்கள் கடந்தபோதும், இலங்கை ஊக்குவிக்கப்பட வேண்டும், அவர்கள் இணங்கியதை நிறைவேற்ற வேண்டும்.

அதற்கு, இலங்கைக்கு மேலதிக காலஅவகாசம் அளிக்கப்பட வேண்டும் என்று நாம் ஐ.நா மனித உரிமை ஆணையாளரையும், ஐ.நா மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளையும் கோரியுள்ளோம். காணாமற்போனோர், இராணுவம் வசமுள்ள தனியார் காணிகள், தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் போன்ற பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும்.

2015ஆம் ஆண்டுத் தீர்மானத்தை இலங்கை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்கும் பொறிமுறை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உருவாக்க வேண்டும். என்றார். (ந-10)

## புற்றுநோய்

### விழிப்புணர்வு 2

மார்பகப் புற்றுநோய், தாக்கும் வாய்ப்புக்கள் அதிகமுள்ள பெண்கள் யார்?


+ குடும்பத்திலவருக்கேனும் மார்பகப் புற்று நோய், கருப்பைப் புற்று நோய் உள்ளவர்கள்.

+ 11 வயதுக்கு முன்பாக பூப்பெய்திய பெண்களும், 55வயதுக்குப்பின்னர்தாமதமாகிமாதவிடாய்ச்சக்கரம் நின்றபெண்களும்.

+ தாய்மைப் பேறடையாதவர்கள்.

+ 35 வயதுக்குப் பின்னராகவே முதற் கர்ப்பம் தரித்தவர்கள்.

+ தாய்ப்பாலூட்டாதவர்கள்.




# சைட்டத்தை மூடுமாறு வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

வவுனியா, மார்ச் 3

சைட்டம் மாலபே மருத்துக் கல்லூரிக்கு எதிராக வவுனியா பொது வைத்தியசாலையில் நேற்று வைத்தியர்கள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பி.ப.1மணிமுதல்பி.ப.2மணிவரைஆர்ப்பாட்டம்நடத்தப்பட்டது. மாலபே தனியார்மருத்துவக்கல்லூரியைஅரசுடைமைஆக்கவேண்டும்என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர்.

வைத்திய சேவையின் இதயத்தைக் காப்போம், போலிப் பட்டம் விற்கும் சைட்டத்தை மூடு போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஏந்தியிருந்தனர்.

வைத்தியர்களின்போராட்டத்தால்அவசர சிகிச்சைப்பிரிவு, வெளிநோயாளர்பிரிவு, மற்றும்விடுதிச்செயற்பாடுகள்எவையும்பாதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. (ந-21)

## சந்தேகநபர் தப்பியோட்டம் பொலிஸார் இடைநிறுத்தம்

மன்னார், மார்ச் 3

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட திருட்டுச் சந்தேகநபர் ஒருவர் தப்பிச் சென்றதையடுத்து மூன்று பொலிஸார் தற்காலிக பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் மன்னார் பொது வைத்தியசாலையில் நடந்துள்ளது.

மன்னாரில் இடம் பெற்ற திருட்டுத் தொடர்பாக குடும்பத் தலைவர் ஒருவரை அண்மையில் மன்னார் பொலிஸார் கைது செய்தனர். அந்தநபரைப்பொலிஸ் நிலையத்தில் விசாரணை செய்தபோது அவர் திடீர் சுகவீனம் அடைந்தார். கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார்மாவட்ட பொதுவைத்தியசாலையில்பொலிஸ் பாதுகாப்புடன் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டார்.

நேற்று முன் தினம் புதன் கிழமை காலை சந்தேக நபரின் மனைவி பார்வையிட வந்த போது பொலிஸார் அவரைப் பார்வையிட அனுமதித்தனர். அப்போது சந்தேகநபர்நபர்பொலிஸ்பாதுகாப்புக்கு மத்தியில் கைவிலங்கிடப்பட்ட நிலையில் வைத்தியசாலையில் இருந்து தப்பிச் சென்றுள்ளார். பொலிஸார் தேடுதல் மேற்கொண்டபோதும் சந்தேக நபர் மீண்டும் கைது செய்யப்படவில்லை.

சந்தேக நபர்தப்பிச்சென்ற நேரம் சிறப்புப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த மூன்று பொலிஸார் தற்காலிகமாக பணியில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-56)

## நூறு வயதில் இறந்த பெண்

யாழ்ப்பாணம், மார்ச் 3

கைதடி அரச முதியோர் இல்லத்தில் வாழ்ந்த வயோதிபப் பெண் ஒருவர் நூறாவது வயதில் உயிரிழந்தார்.

கடந்த சில நாள்களாக நோய்வாய்ப்பட்ட நிலையில் இருந்த இவர் கடந்த செவ்வாய்க்கிழமை உயிரிழந்தார் என்று இல்ல அத்தியட்சகர் தெரிவித்தார்.

நீர்வேலி வடக்கைச்சேர்ந்த செல்லத்துரை தங்கம்மா என்ற இந்த வயோதிபப் பெண் கடந்த 2009 ஆம் ஆண்டு இல்லத்தில் இணைந்து வாழ்ந்தார். (ந-17)

## 20க்குப் பதில் 200 மாணவர்கள் வவுனியா சென்று அலைக்கழிவு

யாழ்ப்பாணம், மார்ச் 3

20 மாணவர்களுக்குப் பதிலாக 200 மாணவர்கள் ஊழியர் நம்பிக்கை நிதிய வவுனியா அலுவலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டனர். அழைப்பிதழ் கடிதத்தைத் தவறாகப் புரிந்து கொண்டமையே இதற்கான காரணம் என்று பின்னர் தெரிய வந்தது.

"வட மாகாண ஆரம்பக் கல்வி அதிகாரியின் தவறான வழிகாட்டல் கடிதத்தாலேயே வடக்கின் சகல வலயங்களிலும் இருந்து வவுனியாவரைக்கும் அலைக்கழிக்கப்பட்டோம். தரம் 5 மாணவர்கள் 200 பேருக்கும் அதிகமானோர் அதிகாலை 5 மணிக்குப் புறப்பட்டு வவுனியா சென்றோம். எமது பணத்தைச் செலவு செய்தே சென்றோம்.

வடக்கின் 12 வலயங்களிலும் வலய ரீதியில் முதல் 20 இடங்களையும் பெற்ற மாணவர்கள் என்ற அடிப்படையிலேயே தேர்வு செய்யப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர். வவனியாவில் இடம்பெற்ற நிகழ்வுக்குச் சென்ற தன் பின்பே எமக்கு உண்மை நிலமை தெரிந்த்து. அது ஒரு கல்வி சார் நிகழ்வோ அல்லது மாணவர்களிற்கான ஊக்குவிப்புநிகழ்வோ அல்ல. வவுனியாவில் இடம்பெற்ற நிகழ்வுஊழியர்நம்பிக்கைநிதிய அலுவலகத் திறப்பு விழா மட்டுமே. ஊழியர் நம்பிக்கை நிதிப் பங்களிப்புச் செய்யும் குடும்பத்தைச் சேர்ந்த 20 மாணவர்களை மட்டுமே அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டிருந்தது. ஆனால் மாகாணம் வலயங்களுக்கு வழங்கிய ஒரு தவறான அறிவித்தல் காரணமாகவே அலைச்சல் இடம்பெற்றது." என்றுபாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர்கள் விசனம் தெரிவித்தனர்.

"எமக்கு மாகாணத்தால் வழங்கப்பட்ட தொலைநகலில் கூறப்பட்டிருந்ததன் பிரகாரமே செயற்பட்டோம். பெற்றோர்மாலையில் திரும்பிவந்து எம்முடன் தர்க்கத்தில் ஈடுபட்டநேரமே முழுமையான விபரத்தை அறிந்து கொண்டோம்" என்று வலயக் கல்விப் பணிப்பாளர்கள் தெரிவித்தனர்.

"மத்திய கல்வி அமைச்சில் இருந்து வந்த அறிவுறுத்தலை அவ்வாறேசெயற்படுத்தினோம். அவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட தகவலாலேயேகுறித்ததவறு நிகழ்ந்துவிட்டது" என்று மாகாண கல்வித் திணைக்களத்தினர் தெரிவித்தனர். (ந-101)

### சைட்டம் நிறுவனத்தை அரசுடைமையாக்கக் கோரி

# வட மாகாண வைத்தியர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மார்ச். 3

தனியார் வைத்திய கல்வி வழங்கும் சைட்டம் நிறுவனத்தை அரசுடைமையாக்குமாறு கோரி நேற்று வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த வைத்தியசாலைகளின், வைத்தியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாணத்தின், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பொது வைத்தியசாலைகள், மற்றும் பிரதேச வைத்தியசாலைகளின் வைத்தியர்கள் நேற்று முழுநாளும் இந்தப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்தப் போராட்டம் நேற்று காலை 8 மணிக்கு ஆரம்பமாகிய நிலையில் இன்று காலை 8 மணிக்கே நிறைவடையும் எனத் தெரிவிக்கப்பட்டது.

வைத்தியர்களுடைய பணிப்புறக்கணிப்புக் காரணமாக யாழ்ப்பாணம் உட்பட வடக்கு வைத்தியசாலைகளில், வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெற வந்த நோயாளிகள் பலர் திரும்பி ச்சென்றனர். வைத்தியசாலைகளில் வெளிநோயாளர் பிரிவு இயங்காததாலேயே மக்கள் திரும்பிச் சென்றனர், சிலர் சிகிச்சைக்காக நீண்டநேரம் காத்திருந்து சென்றதை அவதானிக்க முடிந்தது.

எனினும், அவசர சிகிச்சைப் பிரிவு, மற்றும் விடுதிகளுக்கு வருவோர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். தென்மராட்சி பிரதேசத்தில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் வைத்திய அதிகாரிகள் போராட்டத்தில் ஈடுபட்டதால், காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையான நோயா ளர்கள் காலையில் வைத்தியசாலைக்கு வருகை தந்து, சிகிச்சை பெற முடியாமல் திரும்பினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதனால்வைத்தியசாலைகளின்வெளிநோயாளர் பிரிவுகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவு மற்றும் கிளினிக் சேவைகள் மாத்திரமே இயங்கவில்லை என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் அகிலேந்திரன் தெரிவித்தார். இது இலங்கை மருத்துவ சேவையின் தராதரம் பற்றிய போராட்டம். தரமற்ற மருத்துவர்களை அரசியல் செல்வாக்குக்காகவும், பணத்துக்காகவும் உருவாக்கி நோயாளர்களின் உயிரைப் பணயம் வைக்கும் அரசியல் வியாபாரிகளுக்கு எதிரான போராட்டம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ- 21,9)

## ஆசியாவின் மிகப்பெரிய அச்சு இயந்திரம் கொழும்புத் துறைமுகத்தின் பிடிக்குள்

கொழும்பு, மார்ச் 3
ஆசியாவின்மிகப்பெரியஅச்சுஇயந்திரம்ஒன்றுகொழும்புத்துறைமுகத்தில் விடுவிக்கப்படாமல் உள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன்மகேந்திரனின்மருமகன், அர்ஜுன் எலோசியஸ் பத்திரிகை ஒன்றுஆரம்பிக்கவுள்ளார். அதற்காகவே இந்த அச்சு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இயந்திரம் தெற்காசிய நாடு ஒன்றில்கொள்வனவுசெய்யப்பட்ட மிகப்பெரியஅச்சுஇயந்திரம்என்று துறைமுக தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்த இயந்திரத்தின் பெறுமதி இலங்கை நாணயத்தில் கிட்டத்தட்ட 7 கோடி ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தின்மூலம்மணிக்கு90ஆயிரம் பக்கங்களையும், அதனோடு 1 லட்சத்து 20ஆயிரம் சாதாரண பக்கங்களையும் அச்சிட முடியும்.

அச்சு இயந்திரம் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கான காரணம் இதுவரையில் வெளியாகவில்லை. எனினும்வரிதொடர்பானபிரச்சினையாக இருக்கக்கூடும் எனத் தெரியவருகின்றன. (ஐ10)

# ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த கால அவகாசம் கோருகிறது இலங்கை

### வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடக்கம் தொடர்பிலும் மௌனம்

ஜெனிவா, மார்ச். 3
போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறைக்குவெளிநாட்டு நீதிபதிகள் உள்ளீர்க்கப்படுவார்களா என்ற கேள்விக்கு மௌனம் சாதித்துள்ள இலங்கைஅயலுறவுத்துறை அமைச்சர்மங்களதலைமையிலான குழுவினர், ஐ.நா. தீர்மானத்தை நடைமுறைப்படுத்த இரண்டு வருட கால அவகாசத்தைக்கோரப்போவதாகத் தெரிவித்துள்ளனர்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 34 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ளது. இந்த அமர்வில் இலங்கை தொடர்பில் 4 அறிக்கைகள் சமர்பிக்கப்படவுள்ளன. இலங்கை விவகாரம் இந்தக் கூட்டத் தொடரில் பேசுபொருளாகியுள்ளது. இதனைக் கையாள்வதற்குஅயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான குழுவினர் ஜெனிவாவுக்குச் சென்றுமுகாமிட்டுள்ளனர்.

கடந்த 28 ஆம் திகதி அயலுறவுத்துறைஅமைச்சர்மங்கள சமரவீர,ஜெனிவாவில்உரையாற்றியிருந்தார். அதன்பின்னர்பக்கநிகழ்வுகளைஜெனிவாவில் இலங்கை நடத்திவருகின்றது. முதலாவதுபக்கநிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இலங்கை அரசின் சார்பில் அயலுறவுத்துறைஅமைச்சர் மங்கள சமரவீர, நல்லிணக்கப் பொறிமுறைகளுக்கான ஒருங்கிணைப்புச் செயலகத்தின் செயலர் மனோ தித்தவெல, ஐ.நா.வுக்கான இலங்கைப்பிரதிநிதிரவிநாத்ஆரியசிங்க, சிவில்செயற்பாட்டாளர் ஜொஹான் பெரேரா ஆகியோர்கலந்து கொண்டனர்.

2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனிதஉரிமைகள்சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு, இரண்டு வருட கால அவகாசம்கோரப்போவதாக, இலங்கைப் பிரதிநிதிகள் இதன் போது தெரிவித்துள்ளனர்.

'இலங்கை அரசு 2015 ஆம் ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள்சபையின்தீர்மானத்தில்குறிப்பிடப்பட்டதைப்போன்று வெளிநாட்டு நீதிபதிகளை அனுமதிக்குமா?'என்றுஎழுப்பப்பட்ட கேள்விக்கு, இலங்கைக் குழுவினர் பதிலளிக்கவில்லை.

இந்தக்கூட்டத்தில்உரையாற்றிய தேசிய சமாதானப் பேரவையின்தலைவர்ஜெஹான் பெரேரா,ஐ.நா.தீர்மானத்தை நடைமுறைப்படுத்தஅரசுக்கு கால அவகாசம் வேண்டும் என்றுதெரிவித்தார். அரசுக்கு கால அவகாசம் வழங்குவதன்மூலமேசிலவிடயங்களை நிறைவேற்றமுடியும்என்றும் அவர் குறிப்பிட்டார். (ஐ5)

## கல்கிசை நீதிமன்ற வளாகத்தில் ஆயுதங்கள் மீட்கப்பட்ட சம்பவம் சந்தேகநபர்கள் 20 பேர் கைதாகி மறியல்

கொழும்பு, மார்ச். 3
கல்கிசை நீதிமன்ற வளாகத்தில் ஆயுதங்கள் மீட்கப்பட்டசம்பவம்தொடர்பில்20பேர்கைது செய்யப்பட்டுள்ளதாகபொலிஸ்ஊடகப்பேச்சாளர்பிரியந்தஜெயக்கொடிதெரிவித்தார். அவர்களை எதிர்வரும் 13ஆம் திகதிவரை விளக்கமறியலில்வைக்கநீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்ற வளாகத்தில் இருந்த 9 பேரும், சம்பவம்இடம்பெற்றவேளையில்நீதிமன்றத்துக்கு வருகை தந்த 11 பேருமே இவ்வாறு சந்தேகத்தின்அடிப்படையில்கைதுசெய்யப்பட்டனர்.

கல்கிசை நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் மறைத்துவைக்கப்பட்ட இரண்டுதுப்பாக்கிகள் மற்றும் 10 துப்பாக்கி ரவைகள் என்பன கல்கிசை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடடிவக்கையின் போது நேற்றுமுன்தினம் கண்டுபிடிக்கப்பட்டன.

துப்பாக்கிகள்ஏதேனும்தாக்குதலுக்காகஅங்கு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் விசாரணை நடைபெற்றது.

பாதாளக்குழுஒன்றின்தலைவரானதெமுனி, ஹெரால்ட்ரோஹனஎன்றகொனாகோவிலே ரோஹாஎன்பவரைக்கொலைசெய்வதற்காக இந்த ஆயுதங்கள் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (ஐ-10)

## தலதா மாளிகைக்கு அருகில் இசுருபுர தேரர் போராட்டம்

கொழும்பு, மார்ச். 3
கண்டி திகனை கந்தே விகாரையைச் சேர்ந்தஇசுருபுரசித்தார்த்ததேரர், ஸ்ரீதலதா மாளிகைக்கு அருகில் உள்ள வாவிக் கரையோரத்தில் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

இந்தசத்தியாக்கிரகப்போராட்டத்தைநேற்று முன்தினம் ஆரம்பித்த தேரர், தன்னைச் சுற்றி சில துண்டுப் பிரசுரங்களையும் மக்களின் பார்வைக்காக வைத்துள்ளார்.

"அரச தலைவர் வேட்பாளராக போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆசி வழங்கியதால்சிலர்என்னை துன்புறுத்தியுள்ளார்கள்.

எனது விகாரைக்கு தீ வைத்து சேதப்படுத்தியதுடன், என்னையும் கடுமையாகத்தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்குமாறு வலியுறுத்தியே இந்த சத்தியாக்கிரகப்போராட்டத்தில் குதித்துள்ளேன்" என்றுதேரர்தெரிவித்தார். (ஐ-10)



## பாலாவின் சடலம் உறவினர்களிடம் கையளிப்பு

இந்தியாவில் உயிரிழந்த, கடத்தல் குழுவின் முன்னாள் தலைவர், தெல் பாலா என்றழைக்கப்பட்ட கருப்பையா பாலாவின் சடலம் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது. போதைப்பொருள் கடத்தல்தொடர்பாக குற்றம்சாட்டப்பட்ட தெல்பாலாவைக்கைதுசெய்யவதற்குபொலிஸார்வலைவீசியநிலையில், அவர் இந்தியாவுக்குத்தப்பிச் சென்று அங்கு தலைமறைவாகி இருந்தார்.

இந்தநிலையில்அவருக்குஉறுப்புமாற்றுஅறுவைச்சிகிச்சைமேற்கொள்ளப்பட்டு, அதுபயனளிக்காதநிலையில்உயிரிழந்தார். இலங்கைக்குக்கொண்டுவரப்பட்டஅவரின்சடலம்நேற்று முன்தினம் காலை 6 மணியளவில் கொடவத்தை - வெல்லம்பிட்டியவிலுள்ள உறவினரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ5)

# துறைமுக அபிவிருத்திக்கு காணி வழங்கிய அனைவருக்கும் இழப்பீடுகள் வழங்கப்படும்

### அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 3
அம்பாந்தோட்டைதுறைமுகநிர்மாணப்பணிகளுக்காகக் காணிகள் வழங்கியஅனைவருக்கும்இழப்பீடுகள் வழங்கப்படும் . இவ்வாறு அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார்.



அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்தி காரணமாக காணிகளை இழந்த மக்களுக்கு இழப்பீடுகள் வழங்கும் செயன்முறை தொடர்பான கலந்துரையாடல் நேற்று துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சில்நடைபெற்றது.

இந்தக்கலந்துரையாடலிலேஅவர் மேற்கண்டவாறு தெரிவித்ததாக துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் அலுவலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்காகக்காணிகளைவழங்கிய அனைத்துமக்களுக்கும் சாதாரணமான நிலைமையை நிலைநாட்டுவதே தற்போதைய அரசின் குறிக்கோளாகும். காணிகளை வழங்கியதன் மூலமாக தம்முடையஇருப்பிடங்களைஇழந்தவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காணிகளை இழந்தவர்களுக்கு இழப்பீடுகளை வழங்கல் மற்றும் அந்தமக்களின்வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்ஆகியவற்றுக்குஅரசு 2 பில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. இந்தநிதி உரியமுறையில் பயன்படுத்தப்பட வேண்டும்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத் திட்டத்தில் தற்பொழுது இரு கட்டங்கள் நிறைவடைந்துள்ளன. இந்தத் திட்டத்தில்முதலாம்கட்டநிர்மாணப் பணிகளுக்காக 1115 ஹெக்ரேயர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டன.

இவற்றுள் 463 நிலபரப்புகள் உள்ளடங்கும். கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குப் பதிலாக வேறு நிலங்களை வழங்குவதற்கும், நிலத்தின் மற்றும் அதன் அபிவிருத்திப்பெறுமதியை அடிப்படையாகக்கொண்டுஇழப்பீடுகளைவழங்கும் செயன்முறையும் தற்பொழுது முழுமையாக நிறைவ டைந்துள்ளது.

அதற்காகசெலவிடப்பட்ட 511மில்லியன் ரூபா இலங்கை துறைமுக அதிகாரசபையால்வழங்கப்பட்டது. எது எவ்வாறாயினும் இரண்டாம் கட்டத்தில் கையகப்படுத்தப்பட்ட காணிகளுக்கென பொது திறைசேரியால் துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறைஅமைச்சுக்காகவழங்கப்பட்ட 2பில்லியன்ரூபாநிதிபயன்படுத்தப்படும். இலங்கைதுறைமுக அதிகாரசபையிடம்போதியளவுநிதியின்மையால், அமைச்சரால் சமர்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திரத்துக்கு அமைவாக, பொது திறைசேரியானதுதுறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுக்கு நிதியை ஒதுக்கியது.

பொதுத் திறைச்சேரி வழங்கிய இரண்டுபில்லியன்ரூபா நிதியைக் கொண்டு 237 காணிகளுக்கு காணி மற்றும் அபிவிருத்திப் பெறுமதிகளைஅடிப்படையாகக்கொண்டு முழுமையான இழப்பீடுகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. இன்னும் 129 காணிகளுக்கு அதன் மொத்தப் பெறுமதியில் 75 வீதம் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. மிகுதியானஇழப்பீட்டுத்தொகையை வெகு விரைவாக வழங்குவதற்கு நாம் நடவடிக்கையெடுத்துள்ளோம். நாம் வழங்கிய வேறு காணிகளுக்கான வீதிகளை அபிவிருத்தி செய்வதற்கும், மின்சாரம் மற்றும் குடிதண்ணீர் வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளோம். அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்திக்கு மிகவும் வறுமையான மக்களே காணிகளை வழங்கியுள்ளனர். கடந்தஅரசானதுகாணிகளை இழந்த மக்கள் எதிர்கொள்ள நேரிட்ட துன்பங்கள் தொடர்பாக போதியகவனம்செலுத்தவில்லை. அந்தமக்களின்வீடுகளைஎடுத்தார்களே தவிர, அவர்களைப் பாதுகாக்கவில்லை. அன்று இழைக்கப்பட்ட தவறைத்திருத்திக்கொள்ளவேநாம் இன்று முயற்சிக்கின்றோம். என்றுள்ளது. (ஐ10)

# புதிய தேர்தல் முறையிலேயே உள்ளூராட்சி தேர்தல் நடக்கும்

## அமைச்சர் அஜித் பீ பெரேரா திட்டவட்டம்

கொழும்பு, மார்ச் 3

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தாமதமானாலும் பரவாயில்லை. தற்போதைய முறைமையின் கீழ் தேர்தலை நடத்தவேமாட்டோம். எவ்வளவு காலம் எடுத்தாலும் புதியமுறைமையின் கீழ்தான் தேர்தல் நடத்தப்படும்.

இவ்வாறு அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

தற்போதுள்ள விருப்பு வாக்குத் தேர்தல் முறைமை காரணமாக தேர்தல் ஊழல், மோசடிமிக்கதாக அமைகின்றது. அவற்றை இல்லாதொழிக்க வேண்டும் என்பதில் அனைவரும் ஒருமித்த கருத்தில் உள்ளனர். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அந்தந்தப் பிரதேச மக்கள் விரும்பும் பிரதிநிதிகளை சிக்கல் இன்றி தெரிவு செய்யும் ஒரு முறைமையை நாம் உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோம்.



உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் 2012ஆம் ஆண்டு சட்டமொன்று நிறைவேற்றப்பட்டபோது சில குறைபாடுகள் அதில் இருப்பதைக் கண்டு நான் 10 யோசனைகளை அப்போது முன்வைத்தேன். இப்போது காலம் போதாதுள்ளதால் இந்தச் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு இடம் தாருங்கள். பிறகு இந்தத் திருத்தங்கள் அதில் உள்ளடக்கப்படும் என்று அப்போதைய அமைச்சர் அதாவுல்லா உறுதியளித்தார்.

அந்த உறுதி மொழியை ஏற்று என்னுடன் சேர்ந்து ரவூப் ஹக்கீம், சஜித் பிரேமதாசா மற்றும் ரோஸி சேனாநாயக்க ஆகியோர் திருத்த யோசனைகளை நீக்கிக்கொண்டனர்.

எமது அரசு உள்ளூராட்சி சபையில் பெண்களின் பிரதிநிதித்துவம் 25 வீதமாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை நாடாளுமன்றில் சமர்ப்பித்தது. அதையும் சேர்த்தே சட்டமூலம் திருத்தப்பட வேண்டும். தேர்தல் திணைக்களம் 58 யோசனைகளை முன்வைத்துள்ளது. அதுவும் புதிய சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். பெண்கள் பிரதிநிதித்துவமும் பாதிக்கப்படாமல் சிறுபான்மை இன மக்களும் பாதிக்கப்படாமல் சிறு கட்சிகளும் பாதிக்கப்படாமல் இளைய சமூதாயமும் பாதிக்கப்படாமல் இந்தச் சட்டமூலம் திருத்தப்பட வேண்டியுள்ளது. தற்போதைய முறைமையின்கீழ் தேர்தலை நடத்தமுடியாது. மேற்படித் திருத்தங்கள் அனைத்தையும் மேற்கொண்டு புதிய முறைமையின்கீழ்தான் தேர்தலை நடத்தமுடியும்.

தேர்தல் தாமதமாவதால் அதிகம் பாதிக்கப்படுவது ஐக்கிய தேசிய கட்சிதான். நீண்ட காலமாக அரசியல் அதிகாரம் இல்லாமல் இருந்து இப்போது அதிகாரத்தைக் கைப்பற்றியுள்ளோம். உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்கள் இப்போது எமது கையில் இல்லாததால் எம்மால் கிராம மட்டத்தில் அபிவிருத்திகளை செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தேர்தல் தாமதமாக தாமதமாக எமக்குத்தான் நட்டம். முடியுமானவரை விரைவாக சட்டத்தைத் திருத்தி புதிய முறைமையின்கீழ் தேர்தலை நடத்துவோம். என்றார்.

(ந-3)

# போர்க் காலத்தில் பெண்கள் மதிப்போடு வன்னியில் வாழ்ந்தனர்

## சாந்தி எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு, மார்ச்.3

போர் இடம்பெற்ற காலத்தில் வன்னி பிராந்தியத்திலே கௌரவமாகவும் கண்ணியமாகவும் எமது பெண்கள் வாழ்ந்தனர். போர் முடிந்த பின்னர் அவர்களின் நிலமை எங்கே சென்று கொண்டு இருக்கின்றது என்பதே தற்போதைய பெரும் சவாலாகும்.

இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராசா தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

இறுதிப் போரில் அனைத்து வழிகளிலும் அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் பெண்களே. பெண்களுக்குரிய நீதி, நியாயம் அவர்கள் கண்ணீருக்கு உரிய பதில் கூறப்படாமை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

மீள்குடியேற்றத்தின் பின்னர் அதிகமாக பாதிக்கப்பட்டது பெண்கள் என்று இனங்காணப்பட்டுள்ளது. கணவரை இழந்தவர்கள், கணவரைத் தொலைத்தவர்கள், அவசர திருமணங்களால் பிரிந்தவர்கள், நீண்ட காலம் சிறையிலே ஆண்கள் வாடுவதால் தலைமைத்துவத்தை ஏற்று நடத்துகின்ற பெண்கள், முன்னாள் போராளிகள், அங்க அவயங்களை இழந்தவர்கள், தாய் தந்தையை இழந்தவர்கள், உழைக்கும் வயதிலே உள்ள பிள்ளைகளை இழந்து தவிக்கும் தாய்மார்கள் என்று பல குழுவினர் இனங்காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டம் ஏழ்மையான மாவட்டமாகக் காணப்படுகின்றது. கணவரை இழந்துவிட்டு நான்கு, ஐந்து பிள்ளைகளோடு இருக்கின்ற தாய்க்கு 25 கோழிக்குஞ்சுகளை கொடுத்து விட்டு வாழ்வாதாரம் வழங்கப்பட்டு விட்டது என்று கூறப்படுகின்றது. அந்தப் பெண் தன்னுடைய பிள்ளைக்கு பால்மா வாங்குவதா அல்லது அந்த கோழிக்குஞ்சுக்கு மாஸ் வாங்குவதா?. நிரந்தரமான ஒரு வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பக்கூடிய சிறு கைத்தொழிற்சாலைகளை நம்பிக்கைக்குரிய, பதிவு செய்யப்பட்ட கணக்கு காட்டுகின்ற பெண்கள் அமைப்புக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இயங்குகின்ற சங்கமி பெண்கள் அமைப்பு பெண்களுடைய வாழ்வாதாரத்துக்கு மட்டுமின்றி பல்வேறு விதமான இன்னல்களில் கைகொடுக்கின்றது. சட்ட ரீதியாக உதவி செய்தல், பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் இடம்பெறுகின்ற போது உதவுதல் போன்ற அர்ப்பணிப்பு மிக்க சேவைகளை செய்கின்றனர். யுக சக்தி சம்மேளனம் 4 ஆயிரம் பெண்களை உறுப்பினர்களாகக் கொண்டு குழுக்கள், கொத்தணிகளாக இயங்குகின்றன - என்றார்.

(ந - 101)

# புதிதாக அரசமைப்பு உருவாக்கப்படாது

## அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவிப்பு



கொழும்பு, மார்ச். 3

புதிய அரசமைப்பு உருவாக்கப்படமாட்டாது. அரசமைப்பில் மாற்றங்கள் மாத்திரமே மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு கூட்டு அரசின் அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்தார்.

எவர் எதிர்த்தாலும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்றும், பொது வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் அமைச்சரவை இணைப் பேச்சாளர் ராஜித, அரசதகவல்திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார். இந்தநிலையில் அமைச்சர் சந்திம வீரக்கொடி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிதாக அரசமைப்பு உருவாக்கப்படாது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிற்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு அமைய இந்தத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன. மக்கள் எதிர்பார்க்கும் விடயங்களே தவிர வேறு எந்த விடயமும் மேற்கொள்ளப்படாது.

ஐக்கிய தேசியக் கட்சி எவ்வாறான கருத்து வெளியிட்டாலும், அரசமைப்பு முழுமையாக மாற்றம் செய்யப்படாது. என்றார்.

(ந-5)



புதிய தலைமை நீதியரசராக உயர் நீதிமன்றத்தின் மூத்த நீதிபதி பிரியசாத் டெப் அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் மைத்திரிபால சிறிசேன முன்னிலையில் நேற்றுப் பதவிப்பிரமாணம் செய்து கொண்டார். 2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை அரசின் தலைமை சட்ட ஆலோசகராக கடமையாற்றிய பிரியசாத் டெப் பதில் தலைமை நீதியரசராக பல்வேறு சந்தர்ப்பங்களில் கடமையாற்றியுள்ளார். நிகழ்வில் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ச, அரச தலைவரின் செயலாளர் பீ.பீ.அபேகோன் மற்றும் பிரியசாத் டெப்பின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர். (ந–5)

# மகிந்தவின் காலத்து ஊழல்களை விசாரிக்க நீதிமன்றங்கள் போதாது

## அஜித் மானபெரும எம்.பி. கூறுகின்றார்

கொழும்பு, மார்ச் 3

மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் மக்களால் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றின் எண்ணிக்கைகளைப் பார்த்தால் அவை தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நீதிமன்றங்களின் எண்ணிக்கை போதாது. பல நீதிமன்றங்களை அமைக்க வேண்டி வரும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மானபெரும தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் காரணமாகவே அவரது ஆட்சி கவிழ்ந்தது. ஊழல்வாதிகள் தண்டிக்கப்படுவர் என்று நாம் மக்களுக்கு வாக்குறுதி வழங்கியுள்ளோம். அதன் அடிப்படையில் நடவடிக்கைகைகளை மேற்கொண்டுள்ளோம். பலர் கைது செய்யப்பட்டு விசாரணைகள் நடக்கின்றன.

கடந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகள் தொடர்பில் மக்கள் தினமும் முறைப்பாடுகளைமுன்வைக்கின்றனர். முறைப்பாடுகள் குவிகின்றன. உண்மையில் அவற்றை விசாரிப்பதற்கு நீதிமன்றங்கள் போதாது. புதிய நீதி மன்றங்கள் அமைக்கப்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களத்தில் தாமதம், வழக்குத் தொடர்வதில் தாமதம் என சில குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றையெல்லாம் தீர்த்துக் கொண்டுதான் இந்த விடயத்தில் முன்னேறிச் செல்ல வேண்டியுள்ளது.

மகிந்தவின் காலம்போல் வெள்ளை வான்களைக் கொண்டு இந்தப் பிரச்சினையைத்தீர்க்கமுடியாது. சட்டப்படிதான் அணுக வேண்டும். வெள்ளைவான்கலாசாரத்தை ஒழிக்கவே நாம் வந்துள்ளோம். தாமதமானாலும் சட்டப்படிதான் ஊழல்வாதிகள் தண்டிக்கப்படுவார்கள். ஊழல்வாதிகள் அனைவரும் நிச்சயம் தண்டிக்கப்படுவர்-என்றார். (ந-3)

# மகிந்தவின் குடியுரிமையை பறிக்க முயன்றால் எதிர்ப்பேன்

## அமைச்சர் விஜிதமுனி சொய்சா தெரிவிப்பு

கொழும்பு, மார்ச் 3

அரச முன்னாள் தலைவர் மகிந்த ராஜபக்சவின் குடியுரிமையைப் பறிப்பதற்கு இந்த அரசு முயற்சி செய்தால் அதற்கு எதிராக வாக்களிப்பேன்.

இவ்வாறு அமைச்சர் விஜிதமுனி சொய்சா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது

மகிந்தவின் பிரஜாவுரிமையைப் பறிப்பதற்கு எமது அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்று செய்திகள் தெரிவிக்கின்றன. நான் அறிந்தவகையில் அப்படியான எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அப்படியான திட்டமொன்று இருக்குமாக இருந்தால் அதை முதலில் எதிர்ப்பவன் நான்தான். அதற்கு எதிராக வாக்களிப்பேன்.

மகிந்தவை இவ்வாறு பழிவாங்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற ஊழல், மோசடிகளுக்கு எதிராக சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். குடியுரிமைகளையோ அல்லது வேறு எந்த உரிமைகளையோ பறிக்கும் அளவுக்கு ஜனநாயக விரோத ஆட்சியல்ல எமது ஆட்சி.

மகிந்த போரை நிறைவு செய்து இந்த நாட்டு மக்களைக் காப்பாற்றியவர். அந்தக் கௌரவம் அவருக்கே உரியது. அந்த வெற்றியின் போர்வையில் ஒளிந்துகொண்டு நடத்திய மக்கள் விரோத ஆட்சிக்கு மக்கள் தண்டனை வழங்கிவிட்டனர். அத்தோடு முடிந்து விட்டது.

இப்போது எம்முன்னால் உள்ள சவால்கள் எல்லாம் இந்த நாட்டை எப்படி அபிவிருத்தி செய்வது என்பது பற்றியதுதான். அரசியல் பழிவாங்கல்களை மேற்கொள்வதற்கு எமக்கு நேரமுமில்லை. அவ்வாறான திட்டமுமில்லை. என்றார்.

(ந-3)

# இராணுவம் – தலிபான் இடையே ஆப்கானிஸ்தானில் கடும் சண்டை

காபூல், மார்ச் 3
ஆப்கானிஸ்தானில், இராணுவம்-தலிபான்ஆயுததாரிகளுக்குஇடையே நேற்றுமுன்தினமும், நேற்றும் கடும் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

காபூல் நகரிலேயே இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. பொலிஸ் தலைமை அலுவலகம், இராணுவ ஆள்சேர்ப்பு மையத்தை குறிவைத்து தலிபான் அமைப்பு நடத்திய வெடிகுண்டுத் தாக்குதல்களை அடுத்தே, இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்று வருகிறது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் இருதரப்பு உயிரிழப்பு விவரங்கள் தொடர்பில் முழுமையானதகவல்கள்வெளியாகவில்லை. எனினும் சிலர் சாவடைந்திருக்கலாம்என்றுஅச்சம்வெளியிடப்பட்டது.

முன்னதாக, தலிபான் ஆயுதக் குழு ஹெல்மாண்ட் மாகாணத்தில் நடத்தியதாக்குதலில்24பொலிஸார்உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)





# 10 நாள்களில் 26 ஆயிரம்
# மேற்கு மோசூலில் இருந்து

பக்தாத், மார்ச் 3
ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புக்கும், ஈராக் அரசபடைக்கும் இடையே ஈராக்கின் மோசூல் நகரின் மேற்குப்பகுதியில்கடந்த10நாள்களாக நடைபெற்றுவரும் போரில் இதுவரை 26 ஆயிரம் மக்கள் மீட்கப்பட்டனர் என்று ஈராக் இராணுவம் குறிப்பிட்டது.

ஈராக், சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர்தனிநாடுஎன்றுஅறிவித்திருந்தது ஐ.எஸ்.ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் ஸ்ரேட்) அமைப்பு. அந்தஅமைப்பின்பிடியில்இருந்த பலநகர்கள் மீட்கப்பட்டுவிட்டன. ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரானமோசூல்ஐ.எஸ்ஸின்பிடியிலேயே இருந்தது. இதன் கிழக்குப் பகுதி முழுவதுமாக மீட்கப்பட்டுவிட்டது.மேற்குப்பகுதியைக் கைப்பற்றும்போர், கடந்த10நாள்களாக நடைபெற்று வருகிறது.

மோசூலையும், டால் அபார் நகரையும் இணைக்கும் சாலை ஈராக் படையால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டது. இது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்புக்குபெரும்பின்னடைவாக இருக்கும்என்றுபன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஈராக் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில், 10 நாள்களில்
மக்கள்மீட்
ளுடன்மக்
அமைப்பி
நுழைந்து
தால், பாதுக
பட்டுள்ளன
ஈராக்கில்
படைத்தள
மேற்கு மே
விடுபடும்எ

# “வத்திக்கானின் செயற்பாடு வெட்கம்”



உரோம், மார்ச் 3
வத்திக்கானில் குழந்தைகள் மீதான வன்கொடுமையை கண்காணிக்க அமைக்கப்பட்ட ஆணையத்தைச் சேர்ந்தமுக்கியஉறுப்பினர் ஒருவர், வத்திக்கான் தலைமைகளில் கடும் விமர்சனத்தை முன்வைத்துதனதுபதவியில் இருந்து விலகிச் சென்றார்.

வன்கொடுமைகளை சமாளிக்ககத்தோலிக்க திருச்சபை போதுமான நடவடிக்கைகளைஎடுக்கத்தவறியதுஎனஎழுந்த விமர்சனங்களைத் தொடர்ந்து, அதற்கு எதிர்வினையாக 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஆணையம் ஒன்றை உருவாக்கினார்போப்பிரான்சிஸ்.

இந்த ஆணையத்தின் உறுப்பினரும், முன்பு, மதகுரு ஒருவரின் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவருமான மேரிகொலின்ஸ்என்பவரேஅவ்வாறுகாரசாரமானவிமர்சனங்களை முன்வைத்தார்.

வத்திகானின்அதிகாரத்துவம்ஆணையத்தின் பணிகளுக்கு ஒத்துழைக்க மறுக்கிறது. அதன்செயற்பாடுவெட்கக்கேடானது. குழந்தைகளை வன்கொடுமை செய்தனர் என கண்டறியப்பட்ட பல பாதிரியர்களுக்கு குறைந்த அளவிலான தண்டனைகளேவழங்கப்பட்டுள்ளனஎனவும் கொலின்ஸ் குறிப்பிட்டார். (ம)

## ஸ்டாலினுக்கு திருமாவளவன் புகழாரம்



தி.மு. கழகத்தின்செயல்தலைவரும், தமிழகசட்டசபையின் எதிர்க்கட்சித்தலைவருமானமு.க. ஸ்டாலின்சிறந்தமுறையில் செயற்படுகிறார் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் புகழாரம் சூட்டினார். இந்திய ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். (ம)



இத்தாலி நாட்டில் கிழக்கு சிசிலி தீவில் உள்ள எட்னா என்ற எரிமலை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் வெடிக்கத் தொடங்கியுள்ளது. எரிமலையின் சீற்றம் தற்போது மேலும் உக்கிரமடைந்துள்ளது. இதனால் நூற்றுக்கணக்கான மீற்றர் தூரத்துக்கு பாறைகளும் நெருப்புக் குழம்புகளும் வெடித்துச் சிதறுகின்றன என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன. எரிமலையைச் சார்ந்த பகுதி மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட ஓர் எல்லைக்குள் நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பாவின் மிக உயரமானதும் ஆபத்தானதுமான எரிமலையாக எட்னா உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)



## 3 மாதங்களில் 160 சிப்பாய்கள் மியன்மாரில் சா

மியன்மார் இராணுவத்துக்கும் அரச
எதிரான ஆயுதக் குழுக்களுக்கும் இன
லானமோதலில்கடந்தமூன்றுமாதங்க
160சிப்பாய்கள்சாவடைந்தனர்என்று
நாட்டு இராணுவத்தரப்பு தெரிவித்தது.
மியன்மார்-சீன எல்லையில் உள்ள ஆ
குழுக்கள் 1980 ஆம் ஆண்டில் இரு
மியன்மார் அரசுக்கு எதிரான செயற்
களில் ஈடுபட்டுவருகின்றன. இந்தக் கு
ளுடன் இடம்பெற்ற மோதலிலேயே க
மூன்று மாதங்களில் 160 சிப்பாய்கள்
டைந்தனர் என்று குறிப்பிடப்படுகிறது.
மியன்மார் அரசு, பங்களாதேஷ் எல்
யில் உள்ள ரொகின்கயா இன இஸ்லா
களுக்கு எதிராக இனவளிப்பு நடவடிக்
யில் ஈடுபட்டுவருகிறது என்று குற்றஞ்
யுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இன்று கூடுகிறது தமிழக சட்டசபை

சென்னை, மார்ச் 3
தமிழக சட்டசபை இன்று மாலை 4.30 மணிக்கு முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி தலைமையில் கூடவுள்ளது.
நெடுவாசல் இயற்கை எரிவாயுப் பிரச்சினை, வரவு-செலவுத் திட்டங்கள் ஆகியன தொடர்பில் கலந்தாலோசிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
முதல்வராக எடப்பாடி பழனிச்சாமி தெரிவான பின்னர் நடத்தப்படும் முதலாவது சட்டசபைக் கூட்டம் இது. கடந்த கூட்டத்தில் எடப்பாடியின் மீது கடும் அதிருப்தியை முன்வைத்தன எதிர்க்கட்சிகள். இதனால் இன்றும் இது தொடர்பில் அமளி நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# இரவுபகலாகத் தொடர்கிறது நெடுவாசலைக்காக்கும்போர்

சென்னை, மார்ச் 3
இயற்கை எரிவாயு எடுப்பதற்குதமிழ்நாடு புதுக்கோட்டைமாவட்டம் நெடுவாசல் கிராமத்தில்இந்தியமத்திய அரசு வழங்கிய அனுமதியைதிரும்பப்பெற வேண்டும்என்றுவலியுறுத்தி பல்லாயிரக் கணக்கான மக்கள் இணைந்து 16 ஆவது நாளாக நேற்றும் போராட்டத்தில்ஈடுபட்டனர்.
தமிழகம்-புதுக்கோட்டை மாவட்டம் நெடுவாசல் கிராமத்தில்இயற்கைஎரிவாயு எடுப்பதற்கு இந்திய மத்தியஅரசுஅனுமதி வழங்கியுள்ளது. இந்தத்திட்டம்நடைமுறைப் படுத்தப்பட்டால், நெடுவாசல்கிராமத்தின்நீர் வளம், விவசாயநிலங்கள்ஆகியனபாழாகும் என்ற அச்சம் உள்ளதால், திட்டத்தைதிரும்பப் பெறவேண்டும் என்றுவலியுறுத்திபல்லாயிரக்கணக்கான மக்கள் இணைந்து தொடர்ந்து இரவுபகலாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். சுழற்சி முறையில்உணவுஒறுப்பும் நடைபெற்றுவருகிறது.
இந்திய மத்திய அரசு, தமிழகஅரசுஆகியன மக்களை சமரசம் செய்யும் முயற்சியில், இறங்கிய போதிலும் எந்தவித கோரிக்கைகளையும்மக்கள்ஏற்பவில்லை.
திட்டம் கைவிடப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டால் மட்டுமே, நெடுவாசலில்இருந்து வீட்டுவாசலுக்கு புறப்படுவோம்என்றுதெரிவித்துவிட்டனர்.
இரவுபகலாகபோராட்டத்தில் ஈடுபட்டுவரும் மக்களுக்கு கிராமத்தின் சார்பில் உணவுகள் வழங்கப்படுகின்றன. தன்னார்வலர்கள் பலரும் உணவுப் பொதிகளைஅன்பளிப்புச்செய்துள்ளனர். (ம)





## ஐ.எஸ். என நினைத்து அமெரிக்கப்படைகள்மீது ரஷ்யா தாக்குதல்


சிரியாவில்முகாமிட்டுள்ளஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினர் என்று எண்ணி அமெரிக்கப்படைகள்மீதுரஷ்யப்போர்விமானங்கள் தாக்குதல் நடத்தின.
சிரியாவில் உள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பினரை இல்லாது [illegible] அமெரிக்காவும் ரஷ்யாவும் கடு[illegible] குதல்களைநடத்திவருகின்றன[illegible] பாக ரஷ்யா வான் தாக்குதல்[illegible] மும்முரமாக நடத்துகிறது. அவ[illegible] ஐ.எஸ். ஐ.எஸ். ஆயுததாரிகள் [illegible] எண்ணிஅமெரிக்கஆதரவுப்ப[illegible] மீது நேற்றுமுன்தினம் ரஷ்யா [illegible] தாக்குதல்களை நடத்தியது. இ[illegible] தாக்கு தல்கள் நடத்தப்பட்ட சி[illegible] டங்களில்ரஷ்யாவைத்தொடர்புகொ[illegible] தாக்குதலுக்கு அமெரிக்க இராணு[illegible] முற்றுப்புள்ளி வைத்தது. (ம)

## தாமிரபரணி ஆற்றில் தண்ணீர் எடுக்க குளிர்பான ஆலைகளுக்கு அனுமதி!

சென்னை, மார்ச் 3
தாமிரபரணி ஆற்றில் இருந்து குளிர்பான ஆலைகள் தண்ணீர் எடுக்க விதிக்கப்பட்டிருந்த இடைக்காலத் தடையை உயர் நீதிமன்றமதுரைகிளைநேற்று நீக்கியது.
திருநெல்வேலியைச் சேர்ந்த பிரபாகர் என்பவர் குளிர்பான ஆலைகள்தாமிரபரணிஆற்றில் இருந்து தண்ணீர் எடுக்க தடை விதிக்கவேண்டும்என்றுஉயர் நீதிமன்ற மதுரை கிளையில் பொதுநல வழக்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற மதுரை கிளை, கடந்த நவம்பர் மாதம் தண்ணீர் எடுக்க குளிர்பான ஆலைகளுக்கு இடைக்காலத் தடை விதித்தது.
அதனை எதிர்த்து குளிர்பான ஆலைகள் சார்பில் முறையிடப்பட்டது. அதில், தாமிரபரணியில் இருந்து வெளியாறும் உபரி நீரைத்தான்பயன்படுத்துகிறோம் என்றும்-தனால் தண்ணீர் எடுக்க விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க வேண்டும் என்று-கேட்கப்பட்டது. இதை ஏற்று தடைநீக்கப்பட்டது. (ம)




# அந்தியேட்டி அழைப்பு



அமரர்
**வைத்தியர் சங்கரப்பிள்ளை**
**அம்பிகைபாகன் (கடவுள்)**
("வைத்திய வள்ளல்", வைத்தியமாமணி", "வைத்தியவாணர்", "கலைத்தென்றல்")
எங்கள் எல்லோரையும் ஆறாத்துயரில் ஆழ்த்தி இறைவனடி சேர்ந்த எமது சகோதரனும், ஆசை மாமாவுமான கடவுளின் மறைவுச்செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வருகைதந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், தொலைபேசிமூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அன்பான உள்ளங்களுக்கும், சாவகச்சேரி ஆதாரவைத்திய சாலையைச் சேர்ந்த அனைத்து தொழில்சார் உறவுகளுக்கும் எங்கள் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு அன்னாரின் 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (03.03.2017) வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது.
**இந் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**
**குடும்பத்தினர்.**
**டச்சு வீதி, சாவகச்சேரி.**

# புதிய தொழில்நுட்பத்துக்கான தேசிய கல்வியியற் கல்லூரி நிர்மாணப் பணிகளுக்கு கொரிய அரசு நிதி உதவி



*"தேசிய கல்வியியற் கல்லூரியை அமைக்கும் மேற்படி திட்டத்துக்கு கொரிய அரசானது 19.11 மில்லியன் ரூபா தொகை மதிப்பீட்டு நிதியை இலங்கை அரசுக்கு வழங்கவுள்ளது."*


தொழில்நுட்பத்தின் அதீத வளர்ச்சிப் போக்கோடு போட்டி போடும் விதமாகவும் வினைத்திறன் மிக்க தொழிற்பாட்டையை உருவாக்கிக் கொள்ளும் நோக்கோடும் கொரிய அரசின் நிதியுதவியுடன் குளியாப்பிட்டியவில் புதிய தொழில்நுட்பத்திற்கான தேசிய கல்வியியற் கல்லூரி ஒன்று அமையவுள்ளதான தகவல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி கொரிய அரசுக்கும் கல்வி அமைச்சுக்கும் இடையேயான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி மற்றும் கொரிய குடியரசின் விசேட பிரதிநிதி லீ டொங் கு ஆகியோர் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்தநிகழ்வானது கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் மற்றும் கொரிய குடியரசின் விசேட பிரதிநிதி லீ டொங் கு ஆகியோரின் பங்களிப்பில் கல்வி அமைச்சில் இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

மேலும், புதிதாக அமையவுள்ளதான தொழில்நுட்பத்துக்கான தேசிய கல்வியற் கல்லூரியானது தொழில்நுட்பத்திறனுடன் கூடியதான தொழிற்றுறையை உருவாக்குவதில் சிறந்த பங்களிப்பை வழங்குவதுடன் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான தேசிய மட்டத்திலான தொழில்நுட்ப தேசியகல்வியயற் கல்லூரியாகவும் அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நவீன ஐபோன்-8 அறிமுகம்

## முப்பரிமாண வடிவில் ஒளிப்படங்களை பதிவுசெய்கிறது

புதியதான தொழில்நுட்ப உள்ளடக்கங்களோடு பல தொழில்நுட்பம் சார் செயலிகள் வெளிவரத் தொடங்கியுள்ள நிலையிலே பல்வேறு புதிய சிறப்பம்சங்களுடன் கூடியதான ஐபோன்-8 அறிமுகப்படுத்தப்படவுள்ளதான தகவல் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இவை முப்பரிமாண வடிவிலே ஒளிப்படங்களை பதிவு செய்யும் சிறப்பு வசதி கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும் 5X8 இன் அளவுடையதான தொடுதிரை. 3 ஜிபி ரம். 64 ஜிபி மற்றும் 256 ஜிபி சேமிப்பு அளவுடையதான இரண்டு நினைவக தெரிவுகள் (Memory option) போன்ற சிறப்பம்சங்களையும் கொண்டதாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் ஐபோன் 7 மற்றும் ஐபோன் 7 எஸ் வகைகளின் தயாரிப்புக்கள் குறைக்கப்பட்டு இந்தமுறை 100 சதவீதம் தரமான சாதனங்களைத் தயாரிக்க திட்டமிட்டுள்ளதாக அப்பிள் நிறுவனம் அறிவித்துள்ளது. எனினும் ஐபோன்-8 இதுவரை வெளியான ஐபோன்களைவிடவும், விலை நிர்ணயத்தில் அதிகமாக இருக்கும் எனச் சொல்லப்படுகிறது.

ஐபோன்-8 தயாரிப்பிற்கு அப்பிள் நிறுவனம் தயாராகி வருகின்ற நிலையிலே அண்மையில் ஐபோன்-7 பிளஸ் வெடித்துச் சிதறியிருந்தமை வாடிக்கையாளர்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியமை நோக்கத்தக்கது. இந்த நிலையிலேயே இந்தச் சம்பவமானது ஐபோன்-8 விற்பனையில் பாதிப்பை ஏற்படுத்தலாம் என தகவல்களும் சுட்டிக்காட்டப்பட்டது.

# பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான சேவை வழங்குநராக 'திண்ணை'

வடமாகாணத்தின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கு சேவை வழங்கும் விதமாக சகல வசதிகளுடனும் கூடியதான 'ஒல்சூட் போற்றிகியூ ஹோட்டல் திண்ணை' பொது மக்களின் பாவனைக்காக யாழ்ப்பாணத்தில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி வட பிராந்தியத்தின் ஹோட்டல் துறையின் நியமங்களை மேம்படுத்தும் வகையில் திண்ணை வடிவமைப்பைப் பெற்றுள்ளது. குறிபபாக ஓய்வெடுக்கவும், ஒன்றுகூடவும், இளைப்பாறவும் சிறந்த இடமாகத் திகழ்கிறது.

அத்துடன், சூழலுக்கு நட்புறவான வகையில் அமைந்துள்ள மேற்படி ஹோட்டலானது எனும் திட்டத்து 'ஜ லவ் கிறீன்' திட்டத்துடன் கைகோத்து செயலாற்றி வருவதாகக் கூறப்படுகிறது. குடா நாட்டில் பரவலாக காணப்படும் குடிதண்ணீர் பிரச்சினையை தீர்ப்பதற்கான வழிமுறைகளைக்கொண்டுள்ளதுடன் சமையலறையில் பயன்படுத்தப்படும் பால், பழங்கள் மற்றும் மரக்கறிகள் போன்றன அதன் சொந்த பண்ணைகளிலிருந்து சேதனப் பசுமையான பயிரிடல் முறையில் பெறப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இதன் மூலமாக உயர்தரமான மூலப்பொருள்கள் பெறப்படுவதுடன், உள்ளூர் சந்தையில் காணப்படும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது.



# ஊடகக்கற்கை துறையில் பட்டக்கற்கையை முழுமை செய்தோருக்கான பட்டமளிப்பு

கொமன் வெல்த் சர்வதேச அங்கத்துவம் பெற்ற கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமான பிசப் சவுந்தரம் மீடியா நிலையத்தில் 2012 மற்றும் 2015 கல்வியாண்டுகளில் ஊடகக்கற்கைத் துறையில் இளங்கலைமாணிமற்றும்ஊடகக்கற்கைமுதுகலைமாணி கற்கைநெறிகளை முழுமை செய்த 11 மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா அண்மையில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது கருத்துரைத்த தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,

"ஆரம்பத்தில் இந்த பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மேற்படி இளங்கலைமாணி மற்றும் ஊடகக்கற்கை முதுகலைமாணி கற்கைநெறி வகுப்புக்களை நடத்தவதற்காக பல சிரமங்களை எதிர்கொண்டுள்ளது. இந்தக் கற்கை நெறிகளை தொடரும் மாணவர்களின் எதிர்காலம் எப்படி அமையும், இந்த பட்டக் கற்கை நெறிகளை அவர்கள் வரவேற்பார்களா என்பதான கேள்விகள் எம்மிடையே இருந்தன. உண்மையிலேயே இந்த விடயங்களை எல்லாவற்றையும் கடந்து-வெற்றிகொண்டு மாணவர்கள் கற்கைநெறிகளை முழுமை செய்வதற்கு அதன் நிறுவுநரான ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் நிதானமாகச் செயற்பட்டு எல்லா விடயங்களையும் கையாண்டுள்ளார்.




அந்தவகையிலே அவர் எல்லோருடைய பாராட்டுக்கும் உரித்தானவராக இருக்கின்றார். விடாமுயற்சியோடு இந்தக் காரியங்களை சிறப்பாக செய்துள்ளார். மாணவர்கள் பட்டங்களைப் பெற்றுக்கொள்ள உதவியாக இருந்திருக்கிறார். இந்த நிலையத்தின் பணிகள் மேலும் சிறக்கட்டும"- என்றார்.

இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொண்டதுடன், சிறப்பு விருந்தினர் களாக யாழ்.பல்கலைக்கழக ஊடக கற்கைகள் இணைப்பாளர், கலாநிதி எஸ். ரகுராம், யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் கலாநிதி யோசப்தாஸ் ஜெபரட்ணம் அடிகளார், பத்திரிசியார் கல்லூரி லண்டன் பழைய மாணவர் சங்க தலைவர் அருளானந்தம் ஜெயராசா தம்பதியினர் மற்றும் யசிந்தா புஸ்பம் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தனர்.

# 24 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான உண்டியல்களுக்கான ஏலம் இடம்பெற்றுள்ளது

24 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான உண்டியல்களுக்கான ஏலம் கடந்த புதன்கிழமை மத்திய வங்கியில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக மூன்று,ஆறு மாதங்கள் மற்றும் ஒரு வருடம் என காலவரையறை நிர்ணயம் குறிப்பிடப்பட்டதான திறைசேரி உண்டியல்கள் ஏலத்தில் விடப்படுவதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன் மத்திய வங்கியின் முறிகள் விநியோகம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழு அதிகாரிகள் அன்றைய தினம் முறிகள் விநியோகம் இடம்பெறும் முறைமையைக் கண்காணிப்பதற்கு அங்கு சென்றிருந்ததான தகவல்களும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



கே.எஸ்.சிவஞானராஜா



# குளிக்கப்போய்ச் சேறு பூசலாமா?

ஆற்றிலே குளத்திலே கிணற்றிலே ஓடையிலே கடலிலே எதிலுமே நாம் குளிக்கலாம். ஆனால் சேற்றை உடலில் கொட்டுவதாக நாம் குளித்துவிடக் கூடாது. குளிப்பது என்பது தூய்மையின் செயற்பாடாகும். அதை விடுத்துச் சேற்றுக்குள் அகப்பட்டுத் திக்கு முக்காடுதல் ஆகாது. மேலும் அசிங்கங்களைப் பிரட்டிக் கொள்ளுதல் ஆபத்தைத் தருவிப்பதாகும். குளிக்கப் போய் சேறு பூசிய கதை, சிறப்பாகக் கும்பிடப் போகிறவர்கள் நல்ல கைங்கரியங்களை அனுட்டிக்காமல் அல்லாத காரியங்களில் ஈடுபட்டு அவதிப்படுவதையே இங்கு சுட்டுவதாகும். குறிப்பாகத் திருவிழாக்காலங்களில் பக்த கோடிகள் இறைவனோடு ஒன்றித்து வழிபாடாற்றும் நிலையானது திருவருளை வீடுவரையும் கொண்டு வந்து சக வாழ்வுக்கு வித்திடும் முறையாகும். ஆலயங்களில் வழிபாடாற்றுவதற்குப் பதிலாக அல்லாததும் வயதுக்கு மீறியதுமான தோசமுள்ள நடவடிக்கைகளில் யாராவது ஈடுபடுவார்களாக இருந்தால் குளிக்கப்போய் சேறு பூசியகதையாகவே துன்பப்படுவார்கள். எனவே ஆலயங்களில் மிகுந்த பயபக்தியாகச் சமயிகள் ஒவ்வொருவரும் நடந்து கொள்ளுதலால் இறைவனால் கருணை கூரப்படுவார்கள். ஆனால் ஒரு சிறுதொகையினர் மட்டும் சமூக நீதிக்கு ஒவ்வாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அறியப்படுகிறது. அதுவும் ஆலயங்களில் இரவுத் திரு விழாக்களைச் சாதகமாக்குகிறார்களென உறுதிப்படுத்தப்படுகிறது.

### சிவராத்திரி

சைவ சமயிகள் மிகவும் பக்தி பூர்வமாக அனுட்டிக்கும் விரதம் சிவராத்திரியாகும். சிவாலயங்களில் மிகவும் பக்திபூர்வமாக நான்கு சாமங்களும் அபிசேக ஆராதனைகளுடன் சிவநாம இசை வேள்விகளால் அர்ச்சிக்கப்படுகிறது. சிவன் அம்பிகையோடு பக்தர்களுக்கு அருள்சுரக்கும் திருநாள் சிவராத்திரியாகும்.

"அம்பிகை மகிழ்வது நவராத்திரி
சிவன் மகிழ்வது சிவராத்திரி
ஆன்மா பேறாவது ஒரு ராத்திரி
அதுவே எமக்கு சிவராத்திரி"

இவ்விதம் யாவருமறிந்த இந்த இராத்திரிக்குக் குந்தகம் விளைவிக்க யாராவது முற்படுவார்களாக இருந்தால் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமல்ல நாட்டுக்கும் ஆபத்தாகும். எது எவ்வாறு இருப்பினும் இந்த மண் எல்லோரையும் தனித் தனியாகவும் கூட்டாகவும் கண்காணித்துக் கொண்டே இருக்கிறது. யாருமே தப்பித்துக் கொள்ள முடியாது. தப்பித்துக் கொள்ள நினைத்தாலும் காயங்களோ முத்திரைகளோ ஊர் வாய்களோ ஏதாவதொன்று துரத்திக் கொண்டேயிருக்கும். சம்பவங்களுக்கு மேடைபோட்டுப் பேசத் தேவையில்லை. எவர் எது சொன்னாலும் சமூகம் சொன்னவரைப் பற்றி ஒரு தீர்ப்பை வழங்கியே தீரும், ஏன் கூறுகிறேன் என்றால் தெரியாமல் எதையுமே செய்ய முடியுமாயின் சமயம் ஒன்று இருக்க வேண்டிய அவசியமில்லை. சமயம் தெரிய வைக்கும். அதுதான் இப்போது நடக்கிறது. எனவே சிவராத்திரி, நவராத்திரி விரதங்கள் எமக்கு ஒரு விடுதலையை நிச்சயம் அளித்தே தீரும். யாருக்கு? குற்றம் இழைத்தவர்களுக்கு! என்ன குற்றம்? தெரியாமல் செய்த குற்றங்களுக்கு மட்டும்! அப்போ தெரிந்து செய்த குற்றங்களுக்கு என்ன பரிகாரம்? தானே கெட வேண்டியதுதான்.

### நுணலும் தன்வாயால் கெடும்

இதுவே அதற்கு விடை. மனச்சாட்சியை எந்த உடையாலும் மறைக்கவே முடியாது. புருவமும் கண்களும் பார்வையும் முகமும் காட்டிக் கொடுத்துக் கொண்டேஇருக்கும். செந்தழிப்பு இருக்கவே இருக்காது. முகம் அமாவாசை போலாகிவிடும். முகம் பௌர்ணமியாய் இருப்பதற்கு ஒழுக்கத்தில் பதம் கெடாதவராய் பாதம் கொடாதவராய் பாதம் கோடாதவராய் பாதம் பிடிக்காதவராய் இருக்க வேண்டும்.

### திருமுகம்

முகத்தைப் பார்த்தவுடன் ஆன்ம ஈடேற்றம் தரக் கூடிய திருமுகம் நல்லூர் ஆதீன முதல்வருக்குத் தெட்டத் தெளிவாக உண்டு. அவரது முகத்தில் ஒரு ஒளி பிரவாகிக்கின்றது. அந்த ஆன்மிக அருள் ஒளியில் சைவசமயிகள் யாவரும் குளிக்கலாம். நிவாரணம் கிடைக்கும்.

### திருக்கேதீஸ்வரம்

"பாவம் வினையறுப்பார் பயில்
பாலாவியின் கரைமேல்
தேவன் எனையாள்வான்
திருக்கேதீஸ்வரத்தானே"

பாலாவித்தீர்த்தமானது பாவங்களை அறவே போக்க வல்லது. உடலாலோ உள்ளத்தாலோ தெரியாமல் செய்த குற்றங்கள் அனைத்தையும் பாலாவித் தீர்த்தம் கழுவ வல்லது. அதற்காகவே திருக்கேதீஸ்வரத்திலே மகாசிவராத்திரி விரதமானது மிகவும் உன்னதமாக அனுட்டிக்கப்படுகிறது. அன்றைய தினம் பாலாவியில் தோய்ந்து குடத்திலே தீர்த்தமெடுத்து நனைந்த உடை கொண்ட உடலோடு சுமந்து சென்று சிவலிங்கத்துக்கு அபிசேகம் செய்யும் போதும் "ஓம் நமசிவாய சிவாய நம ஓம்" என உச்சரித்த வண்ணம் சுற்றிவரும்போது சிவபுராணம் ஓதி பஜனாவளி பாடும் போதும் அதில் பங்கு பற்றும் போதும் அத்தனை குற்றங்களும் தீர்ந்து புது மனிதனாக மீளலாம். கீரிமலைச் சிவன் கோயிலிலும் சிவராத்திரி தினம் மிகவும் புனிதமாக அனுட்டிக்கப்படுகிறது.

### சேறு

நான்கு சாமங்களும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்வதை விடுத்து இரவுப் பொழுதில் தீயசம்பவங்களில் ஈடுபட்டு சேற்றை அப்பிக் கொள்ளாதீர். இந்தச் சேற்றை யாராலும் கழுவமுடியாது!

"ஆலயங்களில் மிகுந்த பயபக்தியாகச் சமயிகள் ஒவ்வொருவரும் நடந்து கொள்ளுதலால் இறைவனால் கருணை கூரப்படுவார்கள். ஆனால் ஒரு சிறுதொகையினர் மட்டும் சமூக நீதிக்கு ஒவ்வாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அறியப்படுகிறது. அதுவும் ஆலயங்களில் இரவுத் திருவிழாக்களைச் சாதகமாக்குகிறார்களென உறுதிப்படுத்தப்படுகிறது.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# கொழும்பு அரசு ஏன் அவசரப்படுகிறது?

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் இன்னமும் 2 மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என்று ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் சபையில் தெரிவித்திருக்கிறார் அயலுறவுத் துறை அமைச்சர் மங்கள சமரவீர. போருக்குப் பின்னர் தென்னாபிரிக்காவில் இதுபோன்றதொரு ஆணைக்குழு அமைக்கப்பட்டது. அதன் மூலம், அங்கே மோதலில் ஈடுபட்ட இரு இனங்களுக்கும் இடையில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் கொண்டுவருவதற்கு அந்த ஆணைக்குழு பெரும் பங்காற்றியது. அதுபோன்றதொரு ஆணைக்குழுவை இங்கும் கொண்டுவருவதிலேயே கொழும்பு அக்கறையுடன் உள்ளது.

போராலும் மனித உரிமை மீறல்களாலும், போர்க் குற்றங்களாலும் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் இத்தகையதொரு ஆணைக்குழு வேண்டும் என்று ஒருபோதும் கேட்கவுமில்லை, விரும்பவுமில்லை. தமிழ் அரசியல் கட்சிகளோ, தமிழ் மக்களின் ஏகோபித்த அரசியல் பிரதிநிதியாக இருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்போகூட அதனை வலியுறுத்தவில்லை. எனினும் அந்தக் குழுவை அமைப்பதில் கொழும்பு அதிக கரிசனை காட்டுகின்றது.

தமிழ்மக்கள் கேட்ட, கேட்டுக்கொண்டிருக்கிற போர்க்குற்ற நீதி விசாரணையை நடத்துவதற்குப் பின்னடித்து வரும் நிலையிலேயே, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை அமைப்பது குறித்து கொழும்பு அக்கறைப்படுகிறது. காணாமற்போனோர் தொடர்பான அலுவலகத்தை இயக்குவதை, தொடர்ந்து தாமதித்துக் கொண்டே புதிய ஆணைக்குழுவை அமைப்பது குறித்து அறிவிக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் இரண்டு வருடங்களுக்கு முன்னர், தானே ஏற்று இணங்கிய கலப்பு நீதிமன்றப் பொறிமுறையை உருவாக்குவதற்கு மறுத்து, அதில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கவே முடியாது என்று நிராகரித்து நிற்கும் இந்த அரசு, உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்குவதற்கு முண்டியடிப்பதன் பின்னணி பலத்த சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது. வாக்குறுதியளித்த போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறைக்குப் பதிலாக இந்த ஆணைக்குழுவுக்கு ஏன் கொழும்பு அவசரப்படுகிறது?

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைக் வழங்குவதற்குப் பதிலாக தாம் விரும்பும் ஒரு நீதி நாடகத்தை அரங்கேற்றுவதற்குக் கொழும்பு விரும்புகிறது என்று சந்தேகிப்பதிலும் தவறில்லை.

தமிழ் சிவில் சமூகமும்கூட, அரசின் இந்த அறிவிப்பை நிராகரித்திருக்கிறது. கண்டித்திருக்கிறது. போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறை ஒன்றை ஏற்படுத்தாமல் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவை உருவாக்குவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைப்பதை மறுக்கும் செயல் என்று அது கண்டித்திருக்கிறது. முதலில் போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும் என்றும் அது வலியுறுத்துகிறது.

இப்போது மட்டும் என்றில்லை, கடந்த இரண்டு வருடங்களாகவே இந்த வலியுறுத்தல் தொடர்ந்துகொண்டுதான் உள்ளது. பன்னாட்டுப் போர்க் குற்ற விசாரணை அல்லது குறைந்தபட்சம் பன்னாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய தான போர்க்குற்ற விசாரணை வேண்டும் என்பதே தமிழர்களதும், தமிழ் அரசியல் கட்சிகளினதும் ஒரே நிலைப்பாடாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் அதற்கான எந்தவொரு நடவடிக்கையையும் இதுவரை எடுக்காத கொழும்பு, ஐ.நா. மனித உரிமைகள் சபையிலும் அது பற்றிய எந்த அறிவிப்பையும் விடுக்காமல், உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு பற்றி அறிவித்திருப்பது காலத்தை இழுத்தடித்து பிரச்சினையை நீர்த்துப்போகச் செய்வதற்காகவே.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்குவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த அரசு, அதைச் செய்யாமல் நழுவிச் செல்வதையே இது காட்டுகிறது. இவ்வாறு தன் மீதான நம்பிக்கையைத் தகர்க்கும் வகையில் கொழும்பு செயற்படுவது நிரந்தரத் தீர்வுக்கும் அமைதிக்கும் உதவப்போவதில்லை.

# மகிந்தவின் பிரஜாவுரிமையைப் பறிக்கமாட்டோம்

## சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன உறுதி கூறுகின்றார்



■ மொழியாக்கம்: எம்.ஐ.முபாறக்

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவை அரசியலில் இருந்து முற்றாக ஒதுக்கும் நோக்கில் அவரது பிரஜா உரிமையை பறிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று பரப்பப்பட்டு வரும் செய்தியை அமைச்சர் ராஜித சேனாரத்ன மறுத்துள்ளார். அவரது பிரஜா உரிமையை பறிப்பதுபற்றி எங்களில் எவரும் கனவில்கூட நினைத்துப் பார்க்கவில்லை என்று அவர் கூறியுள்ளார்.

சிங்களத் தொலைகாட்சி ஒன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியின் விவரம் கீழே தரப்பட்டுள்ளது:

*மகிந்த தோல்வியடைந்த அரசியல்வாதியாகி விட்டார்*

கேள்வி: சிறிலங்கா சுதந்திர கட்சியில் உள்ள சிலர், மகிந்த அணியை இணைத்து அடுத்த தேர்தலில் போட்டியிடுவதற்கு முயற்சி செய்கின்றனர். இது தொடர்பில் உங்களின் நிலைப்பாடு என்ன?

பதில்: மகிந்த ராஜபக்சவுக்கும் எனக்கும் இடையில் தனிப்பட்ட பிரச்சினைகள் எவையும் இல்லை. போர் முடிந்த பின்னர், இந்த நாடு எப்படி பயணிக்க வேண்டும் நான் மகிந்தவுக்கு எடுத்துக் கூறினேன். முதலில் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டவர் பின்பு மாறிவிட்டார். ஆறு மாதங்களில் எல்லாம் தலைகீழாகிப் போனது.

போர்க்குற்றம் தொடர்பில் நானே அவரிடம் முதலில் கூறினேன். சர்வதேசம் இது தொடர்பில் எமக்கு அழுத்தம் கொடுக்கும் முன்னர் நாம் இது தொடர்பில் தேடிப் பார்த்து நடவடிக்கை எடுப்போம் என்று கூறினேன்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்ததை உலகம் பெரிதுபடுத்தாது. போரின்போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் பற்றியே உலகம் தேடும். இதை உணர்ந்ததால்தான் நெல்சன் மண்டேலா நடவடிக்கை எடுத்தார். நாமும் நடவடிக்கை எடுப்போம் என்றேன்.

போர்க்குற்றம் தொடர்பில் நடவடிக்கை எடுத்து தமிழர்களுக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டு, நோபல் பரிசைப் பெறுவதற்கு முயற்சிப்போம் என்று நான் அவருடன் தனிமையில் பேசினேன்.

இதெற்கெல்லாம் உடன்பட்டவர் பிறகு மாறிவிட்டார். அவரது குடும்பம் அவரை நாசமாக்கி விட்டது.

> மகிந்த ராஜபக்சவுக்கும் எனக்கும் இடையில் தனிப்பட்ட பிரச்சினைகள் எவையும் இல்லை. போர் முடிந்த பின்னர், இந்த நாடு எப்படி பயணிக்க வேண்டும் நான் மகிந்தவுக்கு எடுத்துக் கூறினேன். முதலில் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டவர் பின்பு மாறிவிட்டார். ஆறு மாதங்களில் எல்லாம் தலைகீழாகிப் போனது.

உண்மையில், மகிந்த அடிப்படையில் நல்ல மனிதர். பாடசாலைக் காலத்தில் இருந்து நான் அவருடன் பழகுகிறேன். நாம் கூறும் ஆலோசனைகளைக் கேட்டு செயற்படக்கூடியவர். ஆனால், போர் வெற்றியின்பின் அவர் மாறிவிட்டார். நாம் சொல்வதைக் கேட்பதில்லை.

பின்னாளில் இதையெல்லாம் உணர்ந்து என்னுடன் மன வேதனைப்பட்டார். நல்லவற்றைச் செய்வதற்கு அவரது குடும்பம் அவரை விடவில்லை. தமிழருக்குக் கொடுக்க வேண்டியதைக் கொடுக்கவில்லை. நாட்டுக்கு எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யவில்லை. தொடர்ந்தும் அவர் குடும்பச் சதிக்குள்தான் சிக்கி இருக்கின்றார். அவர் தோல்வியடைந்த அரசியல்வாதியாகிவிட்டார்.

கே: இப்போதேனும் அவர் மாறி இருப்பாரா?

ப: நிச்சயமாக இல்லை. அவர் இப்போது இனவாத அரசியல் பயணத்தைக் தேர்ந்தெடுத்துள்ளார். முற்றாக இனவாதியாக மாறிவிட்டார். அதனால்தான் அரசமைப்பைத் தயாரிக்கும் வழிநடத்தல் மற்றும் உப குழுக்களில் இருந்து அவரது அணி விலகியுள்ளது.

இனவாதத்தை வைத்து அரசியல் செய்பவர்களுக்கும் செய்ய முற்படுபவர்களுக்கும் மகிந்தவின் நிலைமை அது ஒரு பாடமாக அமையும்.

கே: சம்பிக்க ரணவக்கவும் அதே அரசியலைத் தானே செய்தார்.?

ப: ஆம். ஆனால், அவர் இப்போது மாறிவிட்டார். உரிய நேரத்தில் அதில் இருந்து கழன்று விட்டார். அவர் ஒரு சிறந்த கல்விமான் என்பதால் நன்கு சிந்தித்துப் பார்த்து இனவாத அரசியலில் இருந்து தப்பிவிட்டார். ஆனால், மகிந்ததான், அதில் இருந்து இன்னும் மீளவில்லை. அநியாயமாகச் சிக்கிக்கொண்டார்.

கே: மகிந்த அரசுக்கு எதிராக ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களை முன் வைத்தே நீங்கள் அதிலிருந்து விலகினீர்கள். ஆனால், மகிந்த தரப்பு இப்போது உங்களின் அரசுமீது ஊழல், மோசடிக் குற்றச் சாட்டுக்களை முன்வைக்கின்றதே?

ப: அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மூடிமறைப்பதற்கான ஏற்பாடுதான் இது. என்மீதும் மூன்று குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. அது தொடர்பில் நிதிக் குற்றப் பிரிவுக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளேன். மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற அதிகமான ஊழல், மோசடிகளை நாம் வெளியில் கொண்டு



வந்துகொண்டு இருக்கின்றோம். சிலரைக் கைது செய்தும் இருக்கின்றோம். இவ்வாறு பல மோசடிகளை நாம் வெளியில் கொண்டு வருவதால் இதைத் திசை திருப்புவதற்காக மகிந்த தரப்பினர் எம்மீது போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்துகின்றனர். மகிந்த தரப்பினர் சிலருக்கு அரசில் இணைய விருப்பமுண்டு.

*மகிந்த தரப்பில் சிலருக்கு அரசில் இணைய விருப்பமுண்டு*

**கே**:மகிந்த அணியில் உள்ள ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ள பலர் அரசுடன் இணைவதற்கு முற்படுவதாகக் கூறப்படுவதில் உண்மை உண்டா?

**ப**:உண்மை. அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் இறுக இறுக அவர்கள் அரசுடன் இணைவதற்கு முயற்சி செய்கின்றனர். பலர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவதற்குக்கூட முயற்சி செய்தனர். பிரதமருடன் பேசினர். பிரதமர் அவர்களது கோரிக்கைகளை நிராகரித்து விட்டார். ஊழலில் ஈடுபடாதவர்கள் எவராக இருந்தாலும் அரசுடன் இணையலாம்.

**கே**: ஒரு சிறிய குழுவே நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றது என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது உண்மையா?

**ப**:ஆம். எனது அமைச்சிலும் இந்தப் பிரச்சினை இருந்தது. நான் துணிச்சலுடன் எதிர்த்து நின்றதால் அந்தத் திட்டம் தோற்கடிக்கப்பட்டது. எதைப்பற்றியும் சிந்திக்காத சில அதிகாரிகள் விரும்பியவாறு செயற்படப் பார்க்கின்றனர். அதற்கு இடங்கொடுக்க முடியாது. துணிச்சல் அற்ற சில அமைச்சர்கள், இந்தக் குழுவிடம் சிக்கிக்கொள்ளவே செய்கின்றனர்.

நல்லாட்சி என்பது ஏழை மக்களுக்கானது. அதனால் நல்லாட்சியைப் பாதுகாப்பதற்கு அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். உயிரைப் பணயம் வைத்து இந்த ஆட்சியை உருவாக்கி இருக்கின்றோம்.

நாம் துணிச்சலுடன் மகிந்தவை எதிர்த்துக் களத்தில் இறங்கினோம். ஆனால், எம்மைப் போன்று எந்தவித தியாகங்களையும் செய்யாத சிலர், சலுகைகளை அனுபவிப்பதற்கும் பொருளாதாரத்தைச் சீர்கெடுப்பதற்கும் முயற்சிக்கின்றனர்.

**கே**:உண்மையில். இந்த ஆட்சி நல்லாட்சி என்ற பதத்துக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுகின்றதா?

**ப**:ஜனாதிபதித் தேர்தலில் நாம் தோல்வியடைந்து மகிந்த வெற்றிபெற்றிருந்தால் என்னநடந்திருக்கும் என்று சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். 2010 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவை எதிர்த்துப் போட்டியிட்ட ஒரே காரணத்துக்காக சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டார்.

ஆனால், நாம் அத்தகைய பழிவாங்கல் எதிலும் ஈடுபடவில்லை. நாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் பலவற்றை நாடாளுமன்றுக்குக் கொடுத்துள்ளோம். வெள்ளை வான் கலாசாரம் அற்றுப் போய்விட்டது. வடக்கில் எந்த இடத்திலும் எப்போது வேண்டுமானாலும் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்யலாம். அங்கு இளைஞர்கள் நிம்மதியாகத் தூங்கி எழும்புகின்றனர்.

முஸ்லிம்களுக்கு இப்போது ஹலால் பிரச்சினை இல்லை. மகிந்த ஆட்சியில் வாய் திறக்க முடியாமல் இருந்தவர்கள் எல்லோரும் இப்போது வாய் திறக்கின்றனர்.

இருந்தாலும், குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. நாட்டில் ஜனநாயகம் முழுமையாக இல்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன். மகிந்த ஆட்சியுடன் ஒப்பிடுகையில் எமது அரசு எவ்வளவோ மேல்.

**கே**:லசந்தவின் படுகொலைச் சம்பவத்தில் கொலையாளிகளுக்குத் தண்டனை வழங்குவீர்களா?

**ப**:நிச்சயமாக. அவரது கொலை தொடர்பில் கைது செய்யப்பட்டிருப்பவர்கள் வழங்கி இருக்கும் வாக்குமூலத்தின் அடிப்படையில் பார்க்கும்போது குற்றவாளி யார் என்பது தெரிகின்றது. குற்றவாளி நிச்சயம் தண்டிக்கப்படுவார். எந்தவிதமான அழுத்தங்கள் வந்தாலும் நாம் விடமாட்டோம். அப்போது சரியான தீர்மானத்தை எடுப்போம்.

**கே**:மகிந்தவின் பிரஜா உரிமையை இந்த அரசு பறிக்கப் போவதாகக் கூறப்படுகின்றதே?

**ப**:அவ்வாறு செய்யமாட்டோம். இது பற்றி நாம் கனவிலும் நினைத்ததில்லை. இது ஒரு வதந்தியாகும். அத்தகைய தேவை எதுவும் எமக்கு இல்லை. மகிந்தவின் கூட்டத்தில் உள்ளவர்கள் தான், அவரது பிரஜா உரிமை பறிக்கப்பட வேண்டும் என்று விரும்புகின்றனர் என்று நான் நினைக்கின்றேன்.

*அமைச்சரவை விரைவில் மாற்றி அமைக்கப்படும்*

**கே**:அமைச்சரவை மாற்றம் ஏற்படுமா?

**ப**:அதற்கான தேவை உண்டு. ஜனாதிபதியும் பிரதமரும் பேசி இதுதொடர்பில் ஒரு முடிவுக்கு வருவர். விரைவில் அமைச்சரவை மாற்றம் ஏற்படும். திருப்தி இல்லையென்றால் எனது சுகாதார அமைச்சும் மாற்றப்படலாம். அமைச்சுமுக்கியமல்ல. மக்களுக்கான சேவைதான் முக்கியம். எந்தஅமைச்சை வழங்கினாலும், அதை ஏற்று மக்களுக்கு சேவை செய்வதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.



**2010 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவை எதிர்த்துப் போட்டியிட்ட ஒரே காரணத்துக்காக சரத் பொன்சேகா சிறையில் அடைக்கப்பட்டார். ஆனால், நாம் அத்த கைய பழிவாங்கல் எதிலும் ஈடுபடவில்லை. நாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்கள் பலவற்றை நாடாளுமன்றுக்குக் கொடுத்துள்ளோம். வெள்ளை வான் கலாசாரம் அற்றுப் போய்விட்டது. வடக்கில் எந்த இடத்திலும் எப்போது வேண்டுமானாலும் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்யலாம்.**



# வாசகர் திருமுகம்

## அரசியல் நாகரிகம் அவசியம் தேவை

அரசியலில் ஈடுபட, அது குறித்து விமர்சிக்க எவருக்கும் உரிமை உண்டு. ஆனால் பேச்சாலோ, எழுத்தாலோ அரசியல் விமர்சனம் செய்வதற்கும் ஒருநாகரிகம், பண்பு தேவை. காரணம் அவற்றைக் கேட்போரும் வாசிப்போரும் ஆறறிவு படைத்தவர்கள் என்பதை இந்த அரசியல் கற்றுக் குட்டிகள் மறந்து விடுகின்றனர்.

அண்மைக்காலமாக முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், மேடைகளிலும் ஊடகங்களிலும் தமது வங்குரோத்து அரசியல் கருத்துக்களை வெளிப்படுத்தி வருவது கவலை தருகின்றது; ஜீரணிக்க முடியாதுள்ளது.

உயர்நோக்கில் ஆரம்பிக்கப்பட்டு, நல்ல தலைமையிடம் ஒப்படைக்கப்பட்டு, தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு மக்களின் அமோக ஆதரவையும் அங்கீகாரத்தையும் பெற்ற பெரிய தொரு விருட்சமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அதில் இருந்தவரும் இருப்பவரும் தங்களது சுயநல அரசியல் கருத்துக்களைத் தமிழ் மக்களுக்கு உபதேசித்து வருவது குறித்து ஆச்சரியப்பட இயலாது. அது தமிழர்களின் தலைவிதி.

எது எவ்வாறாயினும், இலங்கைத் தமிழ்ப்பேசும் மக்களின் இன்றைய பெருந்தலைவரும், அரசியல் அனுபவம் வாய்க்கப்பெற்றமூத்த அரசியல்வாதியுமான இரா. சம்பந்தன் ஐயாவின் அரசியல் நகர்வையும் வழிநடத்தலையும் விமர்சிப்பதற்கும் ஒரு தகுதி வேண்டும். ஆனால் அரசியலரங்கில் இன்றுமக்களால் புறக்கணிக்கப்பட்டுள்ளவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்த வேளை தமிழ் மக்களுக்காக எதைத்தான் சாதித்தார்கள்? மாறாக சுகபோகங்களைத்தான் அனுபவித்தார்கள். நாங்களோ சாவின் நிழலில் வாழ்ந்து கொண்டிருந்தோம்.

இவர்களது வாழ்வும், வரலாறும் எல்லாமக்களுக்கும் தெரிந்தவையே. தமது தவறுகளைப் பெருந்தன்மையுடன் ஏற்றுக்கொண்டு அமைதியாகயிருப்பது தான் இவர்களுக்கு நல்லது. இவர்கள் தமிழ் மக்களைக் குழப்ப முயலாதிருக்கட்டும். இவர்கள் என்னதான் வாய்கிழியக் கூப்பாடு போட்டாலும், தமிழ் மக்கள் இவர்கள் பக்கம் திரும்பிப் பார்க்கப் போவதில்லை என்பதே யதார்த்த உண்மை.

*திருமதி நா. நாகேஸ்வரி*
*நல்லூர்*

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** நல்லவர்களின் அன்பும், ஆசியும் கிடைக்கும். அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். ஆதாயம் அதிகரிக்கும்.

**இடபம்:** மாறுபட்ட கருத்து உள்ளவரிடம் விவாதம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலக்கு நிறைவேற விடாமுயற்சி தேவை. லாபம் சுமாராக இருக்கும். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை.

**மிதுனம்:** எதிர்கால வாழ்வில் நம்பிக்கை அதிகரிக்கும். நண்பர்களின் உதவியைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் தாராள பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**கடகம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். சுபவிடயம் குறித்த பேச்சு நடக்கும். பெண்கள் மனம் போல ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**சிங்கம்:** எவரிடமும் நிதானத்துடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமைக்கு ஆளாகலாம். பெண்கள் குடும்ப நலனுக்காகப் பாடுபடுவர்.

**கன்னி:** சிறு செயல்கூட கடினமாக தோன்றலாம். பொது விடயத்தில் நிதானித்து பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பெண்கள், உறவினர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**துலாம்:** எதிர்பார்த்த வெற்றிச் செய்தி வந்து சேரும். நண்பர்களிடம் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். பெண்கள் குடும்ப வளர்ச்சி கண்டு மகிழ்வர்.

**விருச்சிகம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் இருந்த மந்த நிலை விலகும். சீரான லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் வந்து சேரும்.

**தனுசு:** வழக்கத்துக்கு மாறாக, பணியில் பொறுப்புக் கூடும். குடும்பத்தினரின் ஆதரவும், உதவியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் லாபம் சுமாராக இருக்கும். பெண்கள் நகை, பண விடயத்தில் பாதுகாப்பாக இருப்பது நல்

**மகரம்:** அலைச்சலால் சோர்வுக்கு ஆளாக நேரிடும். தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் வீட்டுச் செலவுக்காக கடன் வாங்குவர்.

**கும்பம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உற்சாகமுடன் செயற்பட்டு, தொழிலில் ஆதாயம் அடைவீர்கள். பூர்வீகச் சொத்து மூலம் வருமானம் வரும். பெண்களுக்கு தாய்வீட்டினரின் ஆதரவு உண்டாகும்.

**மீனம்:** மனதில் குழப்பம் உருவாகி மறையும். தொழில், வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது அவசியம். சுமாரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள், பணிச்சுமையைச் சந்திப்பர்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 3 | 2 | | 1 |
| | 9 | | | 2 | | | | |
| | 7 | | 4 | 5 | | | | |
| | 4 | | | | | 5 | | 7 |
| | | 8 | 5 | | 6 | 9 | | |
| 6 | | 9 | | | | | 8 | |
| | | | | 6 | 5 | | 1 | |
| | | | | 4 | | | 2 | |
| 5 | | 3 | 1 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 5 | 4 | 2 | 8 | 9 | 6 | 7 | 3 |
| 3 | 6 | 9 | 7 | 4 | 1 | 8 | 2 | 5 |
| 7 | 8 | 2 | 3 | 5 | 6 | 9 | 1 | 4 |
| 5 | 4 | 3 | 9 | 1 | 2 | 7 | 6 | 8 |
| 2 | 1 | 7 | 8 | 6 | 5 | 4 | 3 | 9 |
| 8 | 9 | 6 | 4 | 7 | 3 | 1 | 5 | 2 |
| 4 | 7 | 1 | 5 | 2 | 8 | 3 | 9 | 6 |
| 9 | 2 | 8 | 6 | 3 | 7 | 5 | 4 | 1 |
| 6 | 3 | 5 | 1 | 9 | 4 | 2 | 8 | 7 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு.
தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## அநாதையாக இருந்த என்னை சினிமா உலகம் தத்தெடுத்தது என்று ஷாருக்கான் பெருமிதம்



பிரபல ஹிந்தி இயக்குநர் யாஷ் சோப்ரா நினைவு தேசிய விருது வழங்கும் விழா அண்மையில் மும்பையில் நடைபெற்றது. இந்த வருடத்துக்கான விருது, ஷாருக்கானுக்கு வழங்கப்பட்டது. அவருக்கு மராட்டிய ஆளுநர் வித்யாசாகர் ராவ் விருது வழங்கினார். அவருக்கு நடிகை ரேகா தங்கக் காப்பு அணிவித்தார். விழாவில் உரையாற்றிய ஷாருக்கான், நான் மும்பைக்கு வந்த போது எனக்குத் தாயும் இல்லை. தந்தையும் இல்லை. இருந்த ஒரே சகோதரிக்கும் உடல்நிலை சரியில்லை. அப்போது எனக்கு என்று ஒரு குடும்பமும் இல்லை. ஆனால், இந்திய சினிமா உலகம் என்னைத் தத்து எடுத்து இருகரங்களாலும் அணைத்துக் கொண்டது. ஆனால், இன்று நான் நூறு கோடிக்கும் அதிகமான மக்களை கொண்ட குடும்பத்தை பெற்றிருக்கிறேன். அதற்காக அனைவருக்கும் நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். நான் வாழ்க்கையில் சந்தித்த எல்லோரும் என்னிடம் காட்டிய அன்பு, அக்கறை, பரிவு, ஊக்கம் அனைத்தும் இல்லையென்றால் இந்த அளவுக்கு உயர்ந்து இருக்க முடியாது -என்றார்.

மிடில் கிளாஸில ஆண் மகனா பொறந்து பாருங்க சார்....




வாழ்க்கையில ஒவ்வொரு விடயமும் கிடைக்க எவ்வளவோ கஷ்டப்படுகிறோம் என்று புரியும்....

ஜிம்முக்குப் போற பிள்ளைகளைப் பார்த்த உடனே கண்டுபிடிச்சிடலாம்



இரண்டு கையிலையும் சாம்பார் வாளியைத் தூக்கிட்டு நடக்கிற மாதிரியே நடப்பாங்க...

ஒவ்வொரு புது மொபைலுக்குப் பின்னாலும்...



பழைய மொபைலை வாங்கிக் கொள்ளும் மனைவி இருக்கிறாள்

**மோட்சம் நிச்சயம்!**


**நோயாளி** -மிஸ்... சத்திரசிகிச்சை முடிந்ததும் நான் கண் முழிச்ச உடனேயே எனது மனைவியைப் பார்க்கணும்.

**தாதி-** கவலைப்படாதீங்க.. கடவுளையே நீங்க பார்ப்பீங்க!



2017

# மார்ச் மாதப் பலன்கள்



## மிதுனம்


மிருகசீருடம் 3,4ஆம்பாதங்கள், திருவாதிரை.புனர்பூசம் 1,2,3ஆம் பாதங்கள்

மிதுன ராசி நேயர்களே! எந்தவித கடினமான வேலைகளையும் பொறுப்புடன் செய்து முடிக்கும் ஆற்றலும், பிறரை எளிதில் நம்பாத குணமும் கொண்ட உங்களுக்கு 10இல் சுக்கிரன் 2ம் திகதி முதல் லாப ஸ்தானத்தில் செவ்வாய் சஞ்சரிப்பதால் உங்கள் பலமும் வலிமையும் அதிகரிக்கக் கூடிய மாதமாகும்.

நல்ல வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரும். பொருளாதார ரீதியாக சிறப்பான முன்னேற்றம் உண்டாகும். குடும்பத்திலும் ஒற்றுமை பலப்படும். எதிலும் விட்டுக்கொடுத்து நடந்து கொண்டால், உறவினர்களிடம் நல்ல பெயரை எடுத்துவிட முடியும். உத்தியோக ரீதியாக வெளிநாட்டு பயணங்கள் செல்லும் வாய்ப்பு அமையும். கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. கடன்கள் யாவும் குறையும். திருமண சுப காரியங்கள் கை கூடி மகிழ்ச்சியளிக்கும். உடல் நிலையில் சிறு பிரச்சினைகளைச் சந்தித்தாலும், எந்தக் காரியத்தையும் எளிதில் செய்து முடிக்கும் ஆற்றல் உண்டாகும். தொழில் வியாபாரம் செய்பவர்களுக்கு தொழிலில் கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வதன் மூலம் முன்னேற்றம் ஏற்படும். உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் எதிர்பார்க்கும் உயர்வுகள் தடையின்றிக் கிடைக்கும்.

*பரிகாரம்*

தட்சிணாமூர்த்தியை வழிபாடு செய்வது உத்தமம்.



## நாளை

**மாசி-20**

சனிக்கிழமை -04.03.2017

திதி: ஷஷ்டி மு.ப. 10.50

நட்சத்திரம்: கார்த்திகை பி.இ.12.41

சுபநேரம்:03.26-04.56 வரை

ராகுகாலம்:09.26-10.56 வரை

கார்த்திகை விரதம்

## வரலாற்றில் இன்றைய தினம்

**03.03.2017**

1938 - சவூதிஅரேபியாவில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்டது.

1930 - பம்பாயில் மோகனதாஸ் காந்தி உணவு ஒறுப்புப் போராட்டத்தைத் தொடங்கினார்.

1945 - இரண்டாம் உலகப் போர் அமெரிக்கா மற்றும் பிலிப்பைன்ஸ் படைகளால் மணிலா மீண்டும் கைப்பற்றப்பட்டது.

1945 - இரண்டாம் உலகப் போர் நெதர்லாந்து ஹேக்ஸில் றோயல் விமானப் படையின் தவறுதலான தாக்குதல் காரணமாக 511 பேர் சாவடைந்தனர்.

1958 - நூரி அல் சயிட் ஈராக்கின் பிரதமராக எட்டாவது தடவையும் பதவியேற்றார்.

1974 - துருக்கிய விமான சேவை விமானம் 981 பாரிசுக்கு அருகில் விபத்துக்குள்ளாகி அதிலிருந்த 346 பேரும் சாவடைந்தனர்.

1986 - ஆஸ்திரேலியாவின் 1986 சட்டத்துக்கமைய ஐக்கிய ராச்சியத்திலிருந்து ஆஸ்திரேலியா முழுமையான சுதந்திரம் பெற்றது.

1988 - 20 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைப்பு பொதுத்தேர்தல் 15 ஆம் திகதி புதிய அரசு மார்ச் 9 இல் எனத் தகவல்.

1995 - தற்போது ஏற்பட்டுள்ள நம்பிக்கையை எச்சரிக்கையுடனேயே அணுகிறோம் என மட்டக்களப்பு, திருமலைஆயர் கிங்ஸ்லி சுவாம் பிள்ளை பி.பி.ஸிக்கு செவ்வி.

1995 - போராட்டக் காலத்தைப் பிரதிபலிக்கும் கலை இலக்கியப் படைப்புகள் தேவையென கருத்தரங்கு ஆரம்ப விழாவில் வித்துவான் சொக்கன் தெரிவிப்பு.

1995 - ஊட்டச்சத்துக் குறைவு காரணமாக குழந்தைகளுக்கு ஏற்படும் பாதிப்பு யாழ். நகரத்தில் தொடர்வதாக சுகாதார வைத்திய அதிகாரி அறிக்கை.

1995 - ஜே.வி.பி. காலத்தில் கொடூர சித்திரவதைக் கூடம். பியகமவில் கண்டு பிடிப்பு.

2002 - ஆண்டிப்பட்டி தொகுதியில் வெற்றியடைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, மீண்டும் முதலமைச் சராகப் பதவியேற்பு.

2002 - வடக்கு-கிழக்கிலிருந்து படைகள் வாபஸ் இல்லையென மல்வத்தை மகாநாயக்கரிடம் பிரதமர் உறுதி.

2002 - 18 மாத சிசு உட்பட 19 யூதர்கள் பலஸ்தீன தாக்குதலில் உயிரிழப்பு.

1988 - இந்தியா-புலிகள் பேச்சு, சென்னையில் நடத்த வலியுறுத்து, ஜெனரல் பாண்டேயிடம் சிவஞானம் எடுத்துரைப்பு.

2008 - காணாமற் போனோர் எண்ணிக்கை பன்னாடுகளில் இலங்கையிலேயே உச்சம். ஐ.நா. மனித உரிமைக் கவுன்சிலின் செயற்குழு அறிக்கையில் தெரிவிப்பு.


2008 - பன்னாட்டிடம் பிச்சை கேட்டுப் போகும் நிலையில் நான் இல்லையென ஜனாதிபதி இரத்தினபுரியில் ஆவேசம்.

2008 - பெண்களின் ஆதிக்கம் அரசியலில் அதிகரிப்பு என பன்னாட்டு நாடாளுமன்றக் குழு சுட்டிக்காட்டு.

2007 - வவுனியா நகரில் வழமை நிலை உருவாக உடன் நடவடிக்கை எடுக்க படை பொலிஸ் அதிகாரிகளுக்கு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா உத்தரவு.

2007 - கந்தானை முத்துராஜவெலவில் புதர் மண் டிய சதுப்பு நிலத்தில் சூட்டுக் காயங்களுடன் 5 சடலங்கள்.

2016 - கைதிகளில் 3 பேர் ஆபத்தான நிலையில் உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்ந்தும் இடம்பெறுகிறது.



# உருளைக்கிழங்கை எந்த முறையில் சாப்பிட வேண்டும்

வாயுப்பிரச்சினையையும்வாதநோய்அபாயத்தையும் ஏற்படுத்தக்கூடியவைஎன்பதால், உருளைக்கிழங்கை அளவோடு சேர்த்துக்கொள்வதே நலம் பயக்கும்.

பொதுவாக, உருளைக்கிழங்குபலருக்கும்விருப்பமான உணவாகவே இருக்கிறது. அதை பொரித்து, வறுத்து, அவித்து விதவிதமாய் சாப்பிட்டு மகிழ் கிறார்கள்.

ஆனால், எல்லோரும்இஷ்டப்படிஉருளைக்கிழங்கைச் சாப்பிடுவது நல்லதல்ல என்கிறார் உளவியல் நிபுணர்கள்.

உடல் எடையை அதிகரிக்க நினைப்பவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள், வளரும் குழந்தைகள், கடின உடல் உழைப்பாளிகள், விளையாட்டு வீரர்கள் ஆகியோர் உருளைக் கிழங்கை நிறையச்சேர்த்துக்கொள்ளலாம்.

ஆனால், நீரிழிவுநோயாளிகள், அதிக எடை உள்ளவர்கள்கண்டிப்பாகஉருளைக்கிழங்கைத்தவிர்க்கவேண்டும். வாயுப்பிரச்சினை, வாதநோய்மற்றும்மூலநோய் பிரச்சினை உள்ளவர்கள் கிழங்கு வகைகளைக் குறைத்துக்கொள்வது நல்லது. சிறுநீரகக் கோளாறு இருப்பவர்களும் உருளைக்கிழங்கைச் சாப்பிடக் கூடாது.

பொதுவாக, கிழங்குவகைகளைஎப்படிச்சாப்பிடலாம்? வேகவைத்துச் சாப்பிடுவதுதான் நல்லது. ஆனால், பலரும் ருசிக்காக, எண்ணெயில் வறுத்து, பொரித்துச் சாப்பிடுகின்றனர். எண்ணெயில் உள்ள கொழுப்பும் சேர்ந்து உடலுக்குப் பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தி விடும். மேலும், கிழங்கில் உள்ள சத்துக்கள் உடலில் சேராமல் போகும்.

கருணைக்கிழங்குதவிரமற்றகிழங்குகள்அனைத்தும் வாயுப்பிரச்சினையையும்வாதநோய்அபாயத்தையும் ஏற்படுத்தக்கூடியவை என்பதால், கிழங்குகளை அளவோடு சேர்த்துக்கொள்வதே நலம் பயக்கும்.





ஆண்களுக்கான ரெனிம் ஜீன்ஸ்களில் கால்பகுதிகள் மடித்துவிடக்கூடிய நிலையில் தற்போது ஜீன்ஸ்கள் சந்தைக்கு வந்துள்ளன.

அதிலும் கால் பகுதி, மடித்து விடும் பகுதியில்வேறுநிறங்களைஉடையதாகவும், வித்தியாசமான துணி வகைகளிலும் அமைந்துள்ளன.

இவை 2 ஆயிரத்து 950 ரூபாவில் இருந்து3ஆயிரத்து250ரூபா வரையும் விற்பனை செய்யப்படுகின்றன.

## மரண அறிவித்தல்



தோற்றம்
12.03.1924

மறைவு
02.03.2017

### கலாபூஷணம் அந்தோனி சவிரிமுத்து

யாழ். கரம்பொன் மெலிஞ்சிமுனையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனி சவரிமுத்து நேற்று (02.03.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கலைக்குரிசில் நீ.வ. அந்தோணி - விற்றேறியா தம்பதியரின் ஏகபுத்திரனும் காலஞ் சென்ற சு.வைத்தியார் - சவிராசி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்ற அடைக்கலத்தின் அன்புக்கணவரும் மிக்கேல் தாஸ், பிலோமினா, செல்வராணி, சின்னராணி, ஜெயராஜா, அற்புத ராணி, பீற்றர், மேரிபத்மா, மேரிநிர்மலா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற றூபன் மற்றும் மேரி ஜோசப்பின், பெனடிற் அல்பிறேட், லூக்காஸ் - மேரிதிரேசா, சாந்திறூபன் அமுதா, ரைற்றஸ் ஆகியோரின் அன்பு மாமனும் பேரப்பிள்ளைகளின் பேரனும் பூட்டப்பிள்ளைகளின் பூட்டனும் காலஞ் சென்றவர்களான ராயப்பு, தோமாஸ் மற்றும் விற்றேறியா, சவிரியான் ஆகியோரின் அன்புச்சகலனும் காலஞ் சென்றவர்களான றீற்றா, மரியநாயகம் மற்றும் மலர், தங்கம் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மெலஞ்சிமுனை,**
**ஊர்காவற்துறை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் முகாமைத்துவ உதவியாளராக கடமை யாற்றும் திருமதி .க. தயாளினி அவர்களின் அன்புத் தந்தையாரான

**கந்தர் கணபதிப்பிள்ளை**

அவர்கள் இறைபதமடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச்சங்கம்
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



யாழ்: மாநகரசபை ஆணையாளரும், ஊழியர் நலன்புரிச்சங்கத்தின் தலைவருமான **திரு. பொ. வாகீசன்** அவர்களின் பாசமிகு மாமியார்

### திருமதி சீதாலட்சுமி ஜெயபாலரட்ணம்

அவர்கள் 02.03.2017 வியாழக்கிழமை காலமானார் அன்னாரின் பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**யாழ். மாநகரசபை ஊழியர்,**
**நலன்புரிசங்க உறுப்பினர்கள், யாழ். மாநகரசபை**

# தென்கொரியா மீது தாக்குதல் நடத்த தயாராகிறது வடகொரியா

சியோல், மார்ச் 3

தென்கொரியா மீது கொடூரமாகத் தாக்குவதற்கு தயாராகுங்கள் என்று வடகொரியா அதிபர் தனது படைக்கு அழைப்பு விடுத்துள்ளார். அதனால் தென் கொரியா வடகொரியா இடையே கடும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

தென் கொரியாவும், அயல் நாடான வடகொரியாவும் பரம்பரை எதிரி நாடுகளாக இருந்து வருகின்றன. வடகொரியாவில் அரச அதிபர் கிம் ஜாங் உன் தலைமையிலான நிறைவேற்று அதிகார ஆட்சி நடந்து வருகிறது. அவர், தென் கொரியாவை கடுமையாக மிரட்டி வருகிறார்.

தென் கொரியாவுக்கு அமெரிக்கா ஆதரவாக உள்ளது. மேலும் அமெரிக்கப் படையும் தென் கொரியாவின் பாதுகாப்புக்காக அங்கேயே முகாமிட்டுள்ளது. எனவே, இரு நாடுகளையுமே எச்சரிக்கும் வகையில் வட கொரியா அடிக்கடி கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன ஏவுகணை மற்றும் ஏவுகணைச் சோதனைகளையும் நடத்தி வருகிறது.

“தென் கொரியாவுக்கு எதிராக எந்த தயவு தாட்சண்யமும் இல்லாமல் கொடூரமாகத் தாக்குவதற்கு தயாராகுங்கள்” என்று வட கொரிய அதிபர் இராணுவத் தளபதிக்கு கட்டளையிட்டுள்ளார். இதனால் தென் கொரியா வடகொரியா இடையே கடும் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ4)

**நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு**

60 நாட்கள் நிரம்பிய தடுப்பூசிகள் போடப்பட்ட டோமன், டல்மேசியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. Tim Black colours, White Beauty marks.

தொடர்புக்கு - 075 065 6527

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நிவிலலும்



மலர்வு
26.06.1932



உதிர்வு
03.02.2017

### அமரர் சுந்தரம்பிள்ளை கதிரவேலு

**(முன்னாள் லொறிச்சாரதி SAFEE & V.M.S டிரான்ஸ்போட்)**

கடந்த 03.02.2017 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த குடும்பத் தலைவர் சுந்தரம்பிள்ளை கதிரவேலு அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 05.03.2017 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந் நிகழ்விலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம். மேலும் அன்னாரின் மறைவுச்செய்தி அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும் உள்நாடு வெளிநாடுகளில் இருந்து தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் பதாதைகள் மற்றும் பல வழிகளிலும் பிரிவுத்துயரைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மற்றும் யாருக்கும் இவ் அழைப்பிதழ் தராமல் தவறவிட்டிருப்பின் இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

**துறட்டிப்பனை அம்மன் கோயில் வீதி**
**வட்டுகிழக்கு, வட்டுக்கோட்டை.**

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### திருமதி சீதாலட்சுமி ஜெயபாலரட்ணம்

**(ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு இயக்குநர், ஸ்ரீலங்கா ரெலிகொம்)**



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இல 76/5, ஒட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதாலட்சுமி ஜெயபாலரட்ணம் (ஓய்வுபெற்ற தொலைத்தொடர்பு இயக்குனர், ஸ்ரீலங்கா ரெலிகொம்) 02.03.2017 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அமிர்தலிங்கம்- யோகதேவி தம்பதியரின் மூத்த மகளும் காலஞ்சென்ற அம்பலவாணர்- செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இணுவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற ஜெயபாலரட்ணத்தின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்) அன்பு மனைவியும் திருமதி ஜெயதர்ஷினி வாகீசன் (ஆசிரியை, யா /திருக்குடும்ப கன்னியர்மடம்), ஜெனார்த்தனன்(லண்டன்), ஜெயகணேஷ்(ஆசிரியர், யா/புனிதபத்திரிசியார் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் பொ. வாகீசன்(ஆணையாளர், யாழ்ப்பாணம் மாநகர சபை), ஜெயரஜனி (லண்டன்), சுதாஜினி (முகாமைத்துவ உதவியாளர், யாழ்ப்பாணம் பிரதேச செயலகம்) ஆகியோரின் அன்பு மாமியும் தேவிகாராணி, ஜெயலக் ஷ்மி, யோகலக் ஷமி, அமிர்தகௌரி, ஆகியோரின் அன்புச் சகோதரியும் கனகரட்ணம், அமிர்தலிங்கம், சுகுமாரன், முருகவேள் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிவானுஜன், ஷரங்கவி, கிருஷ்ணுஜன், ஜெயசுவேதா, லிபியானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**76/5, ஒட்டுமடம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்**
**ஜெ.ஜெயகணேஷ் (மகன்)**
*021 222 3691*

# வைத்தியசாலையில் ஹெரோயினுடன் கைதான இருதய நோயாளி சாவு

திருமலை, மார்ச் 3

திருகோணமலை பொதுவைத்தியசாலையில்ஹெரோயின்விற்பனைசெய்தசந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர் திருகோணமலை மனையாவெளிபகுதியைச்சேர்ந்த47வயதுடையவர் எனவும் பொலிஸார் கூறினர்.

இருதய நோயாளியாக வைத்தியசாலையில் சிகிச்சைபெற்றுவந்தபோது, வெளியில்சென்று ஹெரோயின் விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் திருமலை தலைமையகப் பொலிஸாரினால் இவர் கைது செய்யப்பட்டுத்திருகோணமலை நீதிமன்ற நீத வானி டம் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

இவர் பொலிஸ் காவலுடன் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (டு-ய-45)

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 622
சீட்டிழுப்பு திகதி 02.03.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 25 27 36 69 R
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,320, 527/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
நீல நிற டிக்கட்டுக்கள் 04.03.2017 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1345
சீட்டிழுப்பு திகதி 2017.03.02
வெற்றி இலக்கங்கள் 11 29 33 34 R
அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 18,688,291/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

Development Fortune
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 21
சீட்டிழுப்பு திகதி 02.03.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 20 22 35 57
சுப்பர் இலக்கம் 02
அதிர்ஷ்ட மாதம் ஏப்ரல்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் 8, 152, 818/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் 3,638, 824/=
அடுத்த ஜக்பொட் 1, 252, 918/=
04.03.2017 திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

# துறைமுக நகர் பகுதிக்கு எம்.பிக்கள் களப் பயணம்


கொழும்பு, மார்ச் 3

நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று துறைமுக நகரப் பகுதிக்கும் 'ஜுன் யாங் 1' என்ற பெயர் கொண்டதான ஆசியாவின் மிகப்பெரிய தூர்வாரி இறைத்தல் கப்பலுக்கும் அண்மையில் களச்சோதனைப் பயணமொன்றை மேற்கொண்டனர்.

இந்தத் திட்டத்தின் முன்னெடுப்புடன் தொடர்புடைய நுட்ப நுணுக்கங்கள் தொடர்பான விளக்கங்களைக் கூறுவதற்குச் சைனா ஹாபர் என்ஜினியரிங் நிறுவனத்தைச் சேர்ந்த பொறியியலாளர்கள் வருகை தந்திருந்தனர்.

இந்தத் திட்டத்தின் நடைமுறை மற்றும் இது காலத்துக்கு எவ்வாறு பொருத்தமானதாக அமைந்துள்ளது போன்ற விடயங்கள் தொடர்பில் நிபுணத்துவ அறிவிலிருந்து தெளிவான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

அரசின் தலைமைச் சபை முதல்வரின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்ற இந்தக் களச்சோதனைப் பயணத்தைப் பெருநகரம் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு நெறிப்படுத்தியிருந்தது. (டு-10)



## மரணஅறிவித்தல்

### திருமதி இரத்தினம் சிவலிங்கம்




சரவணை கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இரத்தினம் சிவலிங்கம் நேற்று (02.03.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சி.சிவச்சந்திரன் (கிளி) 076 6752 038 (மகன்)
சி.பாஸ்கரன் (சிறி) 076 6653 832 (மகன்)
சி. ரவீந்திரதாசன் (ராசா) 076 6521 851 (மகன்)

## மரண அறிவித்தல்

### பொன்னு அன்ரன்



ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், அரசடி வீதி, 5 ஆம் ஒழுங்கையை வசித்து வந்தவருமாகிய பொன்னு அன்ரன் நேற்று (02.03.2017) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னு - சிவக்கொழுந்து தம்பதியரின் மூத்தபுதல்வனும் காலஞ்சென்ற அருள்ராசா - ராசம்மா தம்பதியரின் அருமைமருமகனும் காலஞ்சென்ற விமலாதேவி மற்றும் யோகா, யோகராசா, லீலா, டில்லி, மஞ்சுளா, நாகேஸ்வரன் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ராணியின் அன்புக்கணவரும் அருள்மாறன் (காண்டீபன்- அப்பிள் கம்பியூட்டர் கடை உரிமையாளர் - பெருமாள் கோயிலடி), கமலினிதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும் நிரோஜினி, றெபின் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மகாலிங்கம் மற்றும் இராசாத்தி காலஞ்சென்ற சரஸ்வதி மற்றும் லலிதா ஆகியோரின் மைத்துனரும் யோகராஜா காலஞ்சென்ற வர்ணலிங்கம் மற்றும் பஞ்சலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.03.2017) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
அருள்மாறன் (காண்டீபன் - மகன்)

## மரண அறிவித்தல்

### திருமதி றஞ்சிதமலர் சந்திரகுமார்



மன்னார் திருக்கேதீஸ்வரத்தைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பொன்னப்பா வீதி, ஒட்டுமடத்தை வதிவிடமாகவும் கொண்ட திருமதி றஞ்சிதமலர் சந்திரகுமார் நேற்று (02.03.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சந்திரகுமாரின் அன்பு மனைவியும் ருக்ஷிக்காவின் அன்புத்தாயும் காலஞ்சென்ற வினாசித்தம்பி - குலமணி தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - யோகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் குனேந்திரன் காலஞ்சென்ற கௌரிமலர் மற்றும் வசந்தி, தவமலர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் மகேந்திரராணி, ஜெயக்குமார், யோகேந்திரமலர், ரவீந்திரகுமார், தவகுமார், சிறிக்குமார், நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்றவர்களான சிவநாமம், பஞ்சாட்சரம் மற்றும் கதிரவேல், விநாயமூர்த்தி ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, பரமேஸ்வரி மற்றும் நாகேஸ்வரி, கேதீஸ்வரி (இந்தியா), சகுந்தலா ஆகியோரின் பெறாமகளும் கிரி, றிதின் ஆகியோரின் சிறியதாயும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (03.03.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுதகனம்செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானிப்பாய் றோட்,
பொன்னப்பா லேன் ஒட்டுமடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## நீங்காத நினைவுகளோடு கழியும் ஓராண்டு



மலர்வு 22.07.1934
மறைவு 13.03.2016

### திருமதி அம்பிகைபாகன் தங்கம்மா


திதி - பூர்வபக்க பஞ்சமி

ஊர்பற்றும் குடும்பப்பற்றும் மாசிலாகுணமும் கொண்டு வாழ்ந்தீர்கள்
கண்பட்டுப் போனதுவோ எம் உறவை விட்டின்று ஓராண்டு சென்றதுவோ
கூட்டுக்குடும்பமாக எமை வாழ வைத்த அம்மாவே! பெத்தம்மாவே!
ஓராண்டு என்ன பல்லாயிரம் ஆண்டுகள்
சென்றாலும் ஓயாது எம் கவலை மறு பிறப்பு என்று இருக்கினும்
மீண்டும் எம் தாயாக எங்கள் பேர்த்தியாக
வாரும் என ஏங்கி நிற்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய
எல்லாம் வல்ல பண்டாரி அம்மனையும்
கொட்டடி வைரவரையும் வேண்டி நிற்கின்றோம்.

அம்பிகை வாசம், கூவில்
புலோலி தென்மேற்கு, புலோலி.
021 226 4280, 021 226 2484 குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகமுத்து சிவகுரு



தோற்றம் 22.05.1933 மறைவு 02.03.2017

துனைவியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து சிவகுரு நேற்று (02.03.2017) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா - இலட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற திரவியத்தின் அன்புக் கணவரும் ஜெபதவக்குமார் (சுவிஸ்), தேவமலர் (சுவிஸ்), நகோமிபுஸ்பமலர் காலஞ்சென்ற றூத்நேசமலர் மற்றும் மேரிஜீவமலர் (மாலா), பிலிப் ஜெபதவக்குமார் (லண்டன்) ஆகியோரின் தந்தையும் மேரிஜெயசீலி (சுவிஸ்), யோகானந்தராசா (சுவிஸ்), புஸ்பராசா (ரஞ்சன்), ரவிக்குமார் (ரவி), நிசா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் கௌரி (சுவிஸ்), கௌசிகன் (சுவிஸ்), டானியலா (சுவிஸ்), டாவிற் (சுவிஸ்), கொலின்ஸ், கிறிஸ்ரின், டொறிஸ், டேவின்ஸ், நிருசன் (லண்டன்), பிறிஸ்சன் (லண்டன்), நிவிசன் (லண்டன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.03.2017) வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று வட்டுக்கோட்டை தென் இந்தியதிருச்சபை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
077 8919 185 குடும்பத்தினர்

# தொடர்ச்சிகள்



## கூட்டு...

அரசமைப்பு உருவாக்க முயற்சியில் கூட்டு அரசின் இரண்டு கட்சிகளிடையேயும் ஏற்கனவே கருத்துப் பிளவு ஏற்பட்டிருந்தது. கடந்த 21 ஆம் திகதி நடைபெற்ற வழிநடத்தல் குழுவின் கூட்டத்தில் அரசமைப்பு உருவாக்க முயற்சியில் இணைந்து செயற்படத் தயார் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்திருந்தது.

'எவர் என்ன சொன்னாலும் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும். பொது வாக்கெடுப்புக்கு விடப்பட்டு நிறைவேற்றப்படும்' என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ராஜித நேற்று முன்தினம் பத்திரிகையாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அமைச்சர் மகிந்த அமரவீர, புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி கூறவில்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தேர்தல் அறிக்கையில், பொது வாக்கெடுப்புக்குச் செல்லும் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுதியாகவுள்ளது. தற்போதைய அரசமைப்பில் மறுசீரமைப்பு மேற்கொண்டு அதிகாரப் பகிர்வு இடம்பெறும்.

கடந்த பொதுத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. ஐக்கிய தேசியக் கட்சியுடன் உடன்படிக்கைகளை செய்து கொண்டு நாங்கள் தேசிய அரசை முன்னெடுக்கவில்லை. இரண்டு கட்சிகளும் இணைந்ததுதான் கூட்டு அரசு. அரசமைப்பு மறுசீரமைப்புக்கே சுதந்திரக் கட்சி ஆதரவளிக்கும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன விரைவில் இது தொடர்பில் தெளிவுப்படுத்துவார். அப்போது எல்லோருக்கும் புரியும். ராஜித கூறுவதை அரசின் கருத்தாகக் கொள்ள முடியாது. ஊடகங்கள் முன் எவரும் எதனையும் பேசலாம். அரசமைப்புச் சபையின் அறிக்கை விரைவில் வரும். அதன் பின்புதான் எந்த முடிவையும் மேற்கொள்ள முடியும் - என்றார். (த-5)

## நாள்கள்...

யாளர்கள் தெரிவித்தனர்.

புதுக்குடியிருப்புப் பிரதேச செயலத்துக்கு முன்னால் உள்ள தமது காணிகளை விடுவிக்கக் கோரி ஒரு மாதகாலமாக அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் இவர்களுக்கு நாளை காலை 8.30 மணியளவில் முதல் படிநிலையாக 7.75 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்படும் என முல்லைத்தீவு மாவட்டச் செயலாளரால் கடந்த திங்கட்கிழமை தெரிவிக்கப்பட்டது.

காணிகள் விடுவிக்கப்படும் எனத் தகவல் அறிந்ததில் இருந்து.பெரும் எதிர்பார்ப்புடன் இருக்கும் தமக்கு நாள்கள் வருடங்களாகக் கடப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (த-7)

## அமெ.பிரிட்டன்...

றுள்ளது. இலங்கை தொடர்பான தீர்மானங்களை ஜெனிவா அமர்வில் அமெரிக்காவே முன்மொழிந்திருந்தது. அமெரிக்காவில் ஆட்சிமாற்றம் ஏற்பட்டுள்ள சூழலில், புதிய அயலுறவுக் கொள்கை எப்படி அமையும் என்பது தெரியாத நிலையில், இலங்கை தொடர்பில் பிரேரணை முன்வைக்கும் பொறுப்பு பிரிட்டனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் தீர்மானங்களை முன்வைத்த நாடு என்ற அடிப்படையில் அமெரிக்காவும், பிரிட்டனும் ஜெனிவாவில் நேற்று உயர்மட்டக் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பன்னாட்டு அமைப்புகள் விவகாரங்க ளுக்கான பிரதி உதவிச் செயலர் எரின் பார்க்லே தலைமையிலான குழுவினரும், பிரிட்டனின் அயலுறவுத்துறை மற்றும் பொதுநலவாயப் பணியகத்தில், ஆசிய, பசுபிக் விவகாரங்களுக்கான அமைச்சர் அலோக் சர்மா தலைமையிலான குழுவினரும் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றனர்.

இந்தப் பேச்சுக்கள் ஆக்கபூர்வமானவையாக இருந்தன என்று, பிரிட்டனின் அயலுறவுத் துறை மற்றும் பொதுநலவாயப் பணியகத்தின், ஆசிய, பசுபிக் விவகாரங்களுக்கான அமைச்சர் அலோக் சர்மா குறிப்பிட்டுள்ளார். (த-5)

## அரிசிப்...

ளர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்ட பாவனையாளர் அதிகாரசபை இணைப்பாளர் த.வசந்தசேகரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரிசியின் கட்டுப்பாட்டு விலை தொடர்பாகத் தற்போது பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளன. இது சம்பந்தமாகப் பலதரப்பட்ட இடங்களில் இருந்தும் முறைப்பாடுகள் பாவனையாளர் அதிகாரசபைக்கு வருகின்றன.

இதனால் அரிசியின் கட்டுப்பாட்டு விலையை ஒரு நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அரிசி மில் உரிமையாளர்கள் அரிசியை மொத்தமாகவோ சில்லறையாகவோ விற்பனை செய்யும்போது அந்த பொதிகளில் கட்டாயம் விலையைப் பொறித்தல்வேண்டும். அவ்வாறு விலை பொறிக்கப்படாத சமயத்தில் மில் உரிமையாளர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மில் உரிமையாளர்களிடம் இருந்து அரிசியை கொள்வனவு செய்யும் மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகள் அரிசிப் பொதிகளில் விலை பொறிக்கப்பட்டுள்ளதா என்பதை அவதானித்து கொள்வனவு செய்யவேண்டும். இதனை அவதானிக்காமல் கொள்வனவு செய்து விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் இவர்களுக்கு எதிராகவும் கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கடைகளில் விலைப் பட்டியல் கட்டாயம் காட்சிப்படுத்தப்பட வேண்டும். பொருள்களின் விலைகள் மாறும்பட்சத்தில் விலைப் பட்டியிலிலும் மாற்றம் செய்யப்படவேண்டும்என்றார். (த-10)

## மீள்குடியேற்ற...

திட்டங்களை மேற்பார்வை செய்வதற்காக அதிகாரிகள் குழு வடக்கின் ஐந்து மாவட்டங்களுக்கும் செல்லவுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மூன்று குழுக்களும் வடக்கின் ஏனைய மாவட்டங்களுக்குத் தலா ஒவ்வொரு குழுவுமாக இன்றைய தினம் ஆராய்வுகளை மேற்கொள்ளவுள்ளன.

மீள்குடியேற்ற, சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, இந்து சமய விவகார அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள், அதிகார சபைகள் என்பவற்றினால் 2016ஆம் ஆண்டில் வடக்கு மாகாணத்தில் என்ன வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன என்பதை இந்தக் குழுவினர் நேரில் சென்று பௌதிக ரீதியாக ஆய்வு நடத்தவுள்ளனர்.

வீடுகள், மலசல கூடங்கள், வாழ்வாதார உதவிகள் எனப் பல்வேறு வேலைத் திட்டங்கள் கடந்த ஆண்டு முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-5,9,101)

## விளக்கமறியல்...

விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மாரடைப்பால் அவர் உயிரிழந்தார் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், பெரிய கடல்துறை தொண்டமானாறைச் சேர்ந்த சரவணமுத்து வேலுப்பிள்ளை (வயது - 61) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

"நேற்றிரவு (நேற்று முன்தினம் இரவு) 9மணிக்கு குறித்த கைதி நெஞ்சு வலியால் அவதிப்படுகிறார் என்று சக கைதிகளால் சிறைச்சாலை பாதுகாப்பு அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டது. அவர் உணர்வற்ற நிலையில் சிறைச்சாலையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவரைப் பரிசோதித்த மருத்துவர் கைதி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்தார். சடலம் வைத்தியசாலையின் சடல அறையில் வைக்கப்பட்டது" என்று இறப்பு விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

குறித்த கைதியின் மனைவி ஏற்கனவே உயிரிழந்துள்ளார். மூன்று பிள்ளைகளும் வெளிநாட்டில் வசிக்கின்றனர். அவர் தனிமையிலேயே வசித்து வந்துள்ளார். சிறையில் உள்ள காலங்களில் அவருக்கு நீரிழிவு மற்றும் இருதய நோய்கள் இருந்தன. நோய்களுக்கான சிகிச்சைகளை சிறையில் இருந்தவாறு பெற்றுக்கொண்டுள்ளார். 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி மிருசுவில் பகுதியில் 29.9 கிலோகிராம் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் கொழும்பு மதுவரித் திணைக்களத்தினரால் வேலுப்பிள்ளையும் மற்றொருவரும் கைது செய்யப்பட்டனர். அவர்கள் சாவகச்சேரி நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

பின்னர் வேலுப்பிள்ளை, பிணை கோரி யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் பிணை மனுத் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த ஜனவரி மாதம் அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். எனினும் அவரைப் பிணையெடுக்க அவரது உறவினர்கள் முன்வராததனால் அவர் யாழ்ப்பாணம் சிறையிலேயே தொடர்ந்தும் இருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது என்று அவரது இறப்பு விசாரணையில் மேலும் கூறப்பட்டது.

பொலிஸார் மற்றும் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் ஆகியோர் நேற்று விசாரணை மேற்கொண்டனர். சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4ரி)

## குற்றமிழைத்த...

இராணுவத்தினரை நாம் காப்பாற்றமாட்டோம். அவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரை வெற்றி கொண்ட இராணுவத்தினரைப் பாதுகாக்க அரசு திடசங்கற்பம் பூண்டுள்ளது. இராணுவத்தினருக்கு எந்தவிதமான பிரச்சினைகளும் ஏற்பட நாங்கள் இடமளிக்க மாட்டோம். இராணுவத்தினரை மின்சாரக் கதிரை, பன்னாட்டு நீதிமன்றம், பன்னாட்டு உடன்படிக்கை என்பவற்றில் இருந்து நாங்கள் தான் காப்பாற்றியுள்ளோம்.

ஆனால், ஒரு சில இராணுவத்தினர் குற்றமிழைத்திருப்பின் அவர்களைத் தண்டிப்பதில் நாங்கள் பின்நிற்கப் போவதில்லை. 1971 ஆம், 1989 ஆம் ஆண்டுகளிலும் குற்றமிழைத்த இராணுவத்தினர் தண்டிக்கப்பட்டுள்ளனர். அரசியல் காரணங்களுக்காகவோ அல்லது தனிப்பட்டவர்களின் தேவைகளுக்காகவோ இராணுவத்தில் எவரேனும் குற்றமிழைத்திருந்தால் கட்டாயம் தண்டிக்கப்பட வேண்டும்.

ஊடகவியலாளர்கள் கொலை, சிவிலியன்கள் மீதுதான தாக்குதல் உள்ளிட்ட விடயங்களில் இராணுவத்தினர் ஈடுபட்டிருப்பின் அவர்களை ஒதுக்குவதில் தவறில்லை. முழு உலகமும் எம்மை பார்க்கின்றது. அதற்காகதான் பன்னாட்டு உள்நாட்டு விசாரணைக்கு சந்தர்ப்பமளித்தது.

சிலர் மீண்டும் நாட்டில் போர் ஏற்படப் போவதாகவும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல், இராணுவ முகாம்களை அகற்றப் போகிறார்கள் என்று பொய் புரளியைக் கட்டவிழ்த்து விடுகின்றனர். இந்த நாட்டில் மீண்டுமொரு போர் ஏற்பட அனுமதிக்கமாட்டோம். தேசிய பாதுகாப்புத் தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால போன்று அக்கறை கொண்டவர் எவரும் இல்லை - என்றார். (த-5)

## மைத்திரி...

நடத்த திட்டமிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களின் மாவட்டச் செயலர்கள், பிரதேச செயலர்கள், மாகாண நிர்வாக அதிகாரிகள் ஆகியோருக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று அலரி மாளிகையில் நடைபெற்றது.

இதன்போதே வடக்கின் நான்கு மாவட்டங்களில் இந்த நடமாடும் சேவைகளை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன்படி, வவுனியா , மன்னார் மாவட்டங்களில் ஏப்ரல் முதல் வாரத்தில் இந்த நடமாடும் சேவை இடம்பெறும். கிளிநொச்சி , முல்லைத்தீவு மாவட்டங்களில் மே மாதம் 20ஆம் திகதிக்கும் 30ஆம் திகதிக்கும் இடையில் இந்த நடமாடும் சேவைகள் நடத்தப்படும்.

இந்த நடமாடும் சேவை மூலம் உடனடியாகவே தேவைகளை நிறைவு செய்யும் வகையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் எனக் கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (த-101)

## சாணக்கிய...

துறைப் பொறுப்பாளர் எழிலன் எனப்படும் சின்னத்துரை சசிதரன் உள்ளிட்ட 12 பேரின் ஆட்கொணர்வு மனு மீதான விசாரணை முல்லைத்தீவு நீதிமன்றில் நேற்று நீதிவான் எஸ்.எம்.எஸ்.சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரர் தரப்பில் மூத்த சட்டத்தரணி கே.எஸ். ரட்ணவேல் மன்றில் முன்னிலையாகியி ருந்தார். ஆனால் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாணக்க குணவர்த்தன நீதிமன்றில் நேற்று முன்னிலையாகவில்லை. சுகவீனம் காரணமாக மன்றில் முன்னிலையாகவில்லை என்று அவர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றில் தெரிவித்து மருத்துவச் சான்றிதழ் ஒன்றையும் சமர்ப்பித்தார்.

சாணக்கிய குணவர்த்தன ஏற்கனவே மன்றில் சாட்சியம் அளித்திருந்தாலும் குறிப்பிடப்படும் சில விடயங்கள் தொடர்பான அவரது சாட்சியம் நேற்று மன்றில் விசாரிக்கப்படவிருந்தது. அவர் முன்னிலையாகாததால் வழக்கை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு நீதிமன்று ஒத்திவைத்தது.

2009 ஆம் ஆண்டு இறுதிக்கட்டப் போரின் போது இராணுவத்திடம் சரணடைந்த நிலையில், தமிழீழ விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன் உள்ளிட்ட 12 பேரும் காணாமல் ஆக்கப்பட்டனர். அவர்கள் தொடர்பில் அவர்களது குடும்பங்களால் தொடரப்பட்ட ஆட்கொணர்வு மனுத் தாக்கல் செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது. (த-4)

## பன்றிக்...

இளம்பெண்ணே நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

'காய்ச்சல் காரணமாகப் பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி இளம்பெண் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு சிகிச்சையளி க்கப்பட்டது. ஒரு வாரத்துக்கு முன்னர் குழந்தை பிறந்துள்ளது. அதன் பின்னரும் காய்ச்சலுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது. இந்த நிலையில் இன்று (நேற்று) காலை உயிரிழந்துள்ளார்' என்று வைத்தியசாலைப் பணிப்பாளர் கூறினார்.

வவுனியா பூவரசம்குளம் பகுதியைச் சேர்ந்த 37 வயதுப் பெண்ணுக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த வைத்தியசாலைப் பணிப்பாளர், அவரது உடல்நலத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார். (த-5)

## கட்டாந்தரையிலேயே...

வைத்தனர். தமது காணிகளை அடையாளம் கண்டுகொண்ட மக்கள் அங்கேயே தங்கியுள்ளனர். தற்காலிகக் கொட்டகைகளை அமைப்பதற்கு உரிய வசதிகள்.ஏற்படுத்திக் கொடுக்கப்படாமையால் மக்கள் மரங்களுக்கு கீழ் தறப்பாள் கூடாரங்களை அமைத்துத் தங்கி உள்ளனர்.

தற்போது மழை பெய்து வருவதால் குழந்தைகளுடன் அவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (த-7)

## சீனிக்கான...

அடுத்து அரசு இந்தத் தீர்மானத்துக்கு வந்திருப்பதாக கொழும்பு நிதி அமைச்சின் தகவல்கள் தெரிவித்தன.

சீனிக்கு 93 ரூபா கட்டுப்பாட்டு விலையை அரசு நிர்ணயித்துள்ளது. கடைகளில் அந்த விலைக்கே அதனை விற்குமாறும் அறிவுறுத்தப்பட்டது. எனினும் இந்தக் கட்டுப்பாட்டு விலையில் சீனியை விற்க முடியாது என்று அத்தியாவசியப் பொருள்கள் இறக்குமதியாளர்கள் சங்க அறிவித்தது.

கடந்த திங்கட்கிழமை அரச அதிகாரிகளுடன் நடந்த கூட்டத்தில் சீனிக்கான கட்டுபாட்டு விலை குறித்து இறக்குமதியாளர்கள் சங்கம் கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. அதனை அடுத்து அரசு இந்தத் தீர்மானத்துக்கு வந்தது என்று அறிய முடிந்தது.

(வ)

# கரிக்குருவியும் எருமையும்



அது ஒரு அழகிய கிராமம். அங்கே ஓர் ஆறு எவ்வித கலப்பும் இல்லாமல் தெளிவாக ஓடிக்கொண்டிருந்தது. அப்போது தனக்குத் தேவையான இரையை உண்டு விட்டு தனது களைப்பைப் போக்க வேண்டி கரிக்குருவி ஒன்று ஆற்றங்கரைக்கு வந்தது. தாகம் தீர ஆற்று நீரைக் குடிக்கத் தொடங்கியது.

அப்போது எங்கிருந்தோ வந்த எருமையொன்று ஆற்று நீரில் குதித்து உருண்டு புரள ஆரம்பித்தது. எருமை தன் விருப்பத்துக்கு ஏற்ப நீரில் உருண்டு புரண்ட காரணத்தால் ஆற்று நீர் சேறும் சகதியுமாகி துர்நாற்றம் வீசத் தொடங்கியது. துர்நாற்றம் வீசும் நீரைக் கரிக்குருவியால் குடிக்க முடியவில்லை. மிகவும் மனவேதனை அடைந்தது.

கரிக்குருவி எருமையைப் பார்த்து "எருமை அண்ணா! ஆற்று நீர் அனைவரும் பயன்படுத்தக் கூடியது. அதனால் இந்த நீரைப் புனித நீர் என்று அனைவரும் சொல்வார்கள். அத்தகைய நீரைக் கலக்கி துர்நாற்றம் வீசும்படியாகச் செய்து விட்டீரே. சிறு பறவைகளெல்லாம் இரை தேடிவிட்டு நீர் அருந்த வரும் நேரத்தில் நீங்கள் இப்படிச் செய்யலாமா?" என்று கேட்டதும் "குருவியே! யாரைப் பார்த்து என்ன கேள்வி கேட்கிறாய்? ஆற்றைக் கலக்குவதும் சேற்றில் புரள்வதும் என் விருப்பம்" என்று கோபமாகப் பேசியது எருமை.



கரிக்குருவிக்கு கொஞ்சம் கோபம் வந்தது. "எருமை அண்ணா! ஆறு உங்களுக்கு மட்டும் சொந்தமல்ல. அது பொதுச் சொத்து எல்லோருக்கும் பயன்பட வேண்டும். நீங்கள் ஆற்றை விட்டு வெளியேறுவதே நல்லது" என்றது கரிக்குருவி. "ஏய் வாயை மூடிக்கொண்டு அப்பாலே போ" என்று குருவியை முட்ட வந்தது எருமை.

இனி பேசிப் பயனில்லை என்று நினைத்த கரிக்குருவி அங்கிருந்து பறந்து செல்லத் தயாரான போது "யம்மா... யம்மா..." என்று அலறிக் கொண்டு எருமை கரையேறியது. அலறல் கேட்ட கரிக்குருவி எருமையின் பக்கம் பறந்து சென்று பார்த்தபொழுது நான்கு ஐந்து அட்டைகள் எருமையின் உடம்பில் ஒட்டியபடி கடித்துக் கொண்டிருந்தன. எருமையின் நிலைகண்டு கரிக்குருவி மனமிரங்கி எருமையின் முதுகில் ஏறி நின்று தனது அலகினால் அட்டைகளைக் கொத்தி அட்டைகளின் பிடியைத் தளரச் செய்தது. எருமையின் உடலில் இருந்த அட்டைகள் ஒவ்வொன்றாக கீழே விழுந்தன.

எருமை நிம்மதிப் பெருமூச்சு விட்டது. கரிக்குருவியின் நல்லெண்ண உதவி எருமையின் தவறை உணர வைத்தது. எருமை "நண்பனே! என்னை மன்னித்து விடு. நான், நீ சொன்ன நல்ல வார்த்தைகளைக் கருத்தில் எடுக்காமல் நடந்து கொண்டேன். ஆனால் நீயோ பழிக்குப் பழி வாங்காமல் என்னைக் காப்பாற்றினாய். இனி ஒரு போதும் ஆற்று நீரைக் கலக்கி அசுத்தப்படுத்த மாட்டேன்" என்று கூறியது.

**இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண**
**நன்னயஞ் செய்து விடல் - குறள்**

**பொருள் : நமக்குத் தீங்கு செய்தவரைத் தண்டிக்கும் வழி அவர்கள் நாணும் படியாக அவர்களுக்கு நன்மை செய்து விடலாகும்.**

**பொதுச் சொத்துகளைச் சேதப்படுத்தக் கூடாது.**

## பொருத்தமான எழுத்துக்களால் இடைவெளிகளை நிரப்புவோம்

1. கி — ங்கு
2. உ — ல்
3. உ — வு
4. ப — வை
5. இ — ங்கை
6. உ — ந்து
7. வெள் — ம்
8. கி — க்கு
9. ப — ம்
10. க — ம்பு
11. காற் —
12. கி —

| | |
|---|---|
| ள | ல |
| ற | ர |
| ண | ன |
| ரு | று |
| ழ | ளு |
| ளி | லு |






## மிருகக் காட்சிச் சாலை

- இலங்கையில் மிருகக் காட்சிச் சாலை கொழும்பு நகரில் உள்ள தெஹிவளையில் உள்ளது.
- அங்கே பல மிருகங்களையும் பறவைகளையும் மீன் மற்றும் ஊர்வனவற்றையும் காணலாம்.
- அங்கே யானை, புலி, சிங்கம், கரடி, மான், மரை, காண்டா மிருகம், ஒட்டகம், ஒட்டகச் சிவிங்கி, குரங்கு, முயல் போன்ற பல் வகை மிருங்கள் உள்ளன.
- அங்கு அமைக்கப்பட்டுள்ள சிறிய குளங்களில் பல வகையான இராட்சத முதலைகள் உள்ளன.
- பாம்புகளில் மலைப் பாம்புகள் உட்பட பல வகையான வண்ண வண்ணப் பாம்புகள் உள்ளன.
- பல வகையான இராட்சத பல்லியினங்களும் இங்கு உண்டு.
- வண்ண வண்ண மீன், இறால், நண்டு, கணவாய் போன்றவை நீர் நிறைந்த கண்ணாடித் தொட்டிகளில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.
- பல வகையான பறவைகளுள் தீக்கோழி, வான்கோழி, பென்குயின் போன்ற பறவைகளும் உள்ளன.
- ஐந்து நிறங்கள் கொண்ட பஞ்ச வர்ணக் கிளிகளையும் காணலாம்.
- மிருகக் காட்சிச் சாலையில் மாலை வேளையில் சிறுவர்களுக்காக யானைகளின் அணி வகுப்பு, அவற்றின் சாகச நிகழ்வுகள் நடனங்கள் என்பவை நடைபெறும்.

## படங்களுக்கிடையேயான வேறுபாடுகளை இனம் கண்டு வட்டம் இடுவோம்



## நல்லதை எண்ணுவோம்



கண்ணாலே பார்க்கிறோம்
காட்சிகள் பல நூறு
காட்சியில் நல்லதை
மட்டுமே பார்க்கிறோம்

காதாலே கேட்கிறோம்
செய்திகள் பல நூறு
செய்தியில் நல்லதை
மட்டுமே கேட்கிறோம்

மூக்காலே முகர்கிறோம்
வாசங்கள் பல நூறு
வாசத்தில் நல்லதை
மட்டுமே முகர்கிறோம்

வாயினால் பேசுகிறோம்
வார்த்தைகள் பல நூறு
வார்த்தைகளில் நல்லதை
மட்டுமே பேசுவோம்

கையாலே தொடுகிறோம்
மெய்யாலே தொடுகிறோம்
நல்ல நல்ல பொருள்களை
மட்டுமே தொடுகிறோம்


## ஊசலாடியின் (பெண்டூலம்) கண்டு பிடிப்பு

இத்தாலி நாட்டில் பைசா நகரத்தில் ஒரு சாதாரண கம்பள வியாபாரியின் மகனாகப் பிறந்தவர் கலிலியோ. இவர் பைசா நகரத்து மருத்துவக் கல்லூரியில் பயின்று வந்த போது அங்குள்ள மாதா கோவிலுக்கு தினசரி சென்று வருவது வழக்கம். ஒருநாள் ஏதோ ஒரு யோசனையுடன் மாதா கோயில் கூரையை அண்ணாந்து நோக்கிய கலிலியோ அங்கு பொருத்தப் பட்டிருந்த ஒரு தொங்கு விளக்கு காற்றில் இரு பக்கமும் ஊசலாடிக் கொண்டிருப்பதைக் கண்டார். அதனைக் கூர்ந்து கவனித்தார் கலிலியோ. விளக்கு அசைந்த தூரம் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே வந்தது. ஆனால் ஆரம்பத்தில் அந்தவிளக்குஒருவிநாடிக்கு எத்தனை முறை இடம் வலமாக மாறிச் சென்றதோ, அத்தனை முறைதான் அசைவின் தூரம் குறைந்த பொழுதும் சென்றது. அதாவது ஊசலாடிய தூரம் குறைந்ததே தவிர அசைவின் எண்ணிக்கை குறையவேயில்லை.



கடிகாரங்கள் அந்தக் காலத்தில் நடைமுறைக்கு வரவில்லை. அதனால் தம்முடைய நாடித்துடிப்பைக் கொண்டு கணக்கிட்டு அசைந்து ஆடுகின்ற ஒரு பொருளின் 'அசைவுத் தூரம் மாறினாலும் அசையும் கால அளவு மாறாதிருக்கும்' என்ற உண்மையைக் கண்டு பிடித்துச் சொன்னார் கலிலியோ.

பெண்டூலம் கடிகாரங்களை உருவாக்கிய பிற்கால விஞ்ஞானி, கலிலியோவின் இந்த உண்மையை ஆதாரமாகக் கொண்டே அதை உருவாக்கினார்.



## குளிர் உறக்கம்

ஆமைகள் குளிர்காலத்தில் ஆறு குளம் என்பவற்றின் தண்ணீர் வற்றிய பகுதிகளில் புதைந்தோ கரை இடுக்குகளில் புதைந்தோ மறைந்து கொள்கின்றன. இந்த நிலையைக் குளிர் உறக்கம் என்பர். ஆமை, பாம்பு, நத்தை, தவளை முதலிய பிராணிகளுக்கு குளிர்காலத்தில் ஓடியாடி இரை தேட முடியாது போகின்றது. அதனால் அவை குளிர் உறக்கம் கொள்கின்றன.

## போராடி வென்றது யங்ஹென்றிஸ் அணி

யாழ்ப்பாணம், மார்ச் 3
அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யங்ஹென்றிஸ் அணி போராடி வெற்றிபெற்றது.
அராலி மாவத்தையில் உள்ள சங்கானை பிரதேச செயலக மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு பைவ்ஸ்ரார் அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைமைதான். சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 5:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யங்ஹென்றிஸ். (ம-23)

## குறிஞ்சிக் குமரன், யூனியன் வென்றன

யாழ்ப்பாணம், மார்ச் 3
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் குறிஞ்சிக்குமரன், ஆனைக்கோட்டை யூனியன் அணிகள் வெற்றி பெற்றன.
உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் அணி மோதியது. 3:0 என்ற கோல் கணக்கில் குறிஞ்சிக் குமரன் அணி வெற்றிபெற்றது.
தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் அணியை எதிர்த்து நாவற்குழி அன்னை அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் யூனியன் அணி வென்றது. (ம-23)



## சாவகச்சேரி இந்துவின் கைகளில் கிண்ணம்

யாழ்ப்பாணம், மார்ச் 3
தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 20 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.
மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சாவகச்சேரி றிபேக் கல்லூரி அணி மோதியது. இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி 25:21, 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.
கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது. (ம-422)

## கச்சாய் அ.த.க.பா. கிண்ணம் வென்றது

யாழ்ப்பாணம், பெப். 3
தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் கச்சாய் அ.த.க. பாடசாலை அணி சம்பியனானது. மட்டுவில் மகா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கச்சாய் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் கச்சாய் அ.த.க. பாடசாலை அணி 27:25, 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் இரு செற்களையும் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. மூன்றாமிடத்தை கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலய அணி பெற்றது. (ம-422)

## சென். தோமஸ் சம்பியனானது

யாழ்ப்பாணம், மார்ச் 3
வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு உட்பட்ட கபடித் தொடரில் 17 வயதுப் பெண்கள் பிரிவில் பருத்தித்துறை சென். தோமஸ் றோ.க.த.க. பாடசாலை நடப்பு வருடச் சம்பியனானது.
உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென். தோமஸ் றோ.க.த.க. பாடசாலையும் நெல்லியடி மத்திய கல்லூரியும் மோதின. 28:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதல் பாதியில் முன்னிலை பெற்றது சென். தோமஸ் அணி. அந்த அணி தனது ஆதிக்கத்தை இரண்டாம் பாதியிலும் தக்கவைத்து 41:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் சம்பியனானது. மூன்றாமிடத்தை வல்வை சிவகுரு வித்தியாலயம் பெற்றது. (ம-108-422)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 3
**சரஸ்வதி வி.க. கால்பந்தாட்டம்**
உரும்பிராய் சரஸ்வதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் அணியை எதிர்த்து உரும்பிராய் அண்ணா ஸ்ரார் அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து கொற்றவத்தை றேஞ்சர்ஸ் அணி மோதவுள்ளது.
**அண்ணா வி.க. கால்பந்தாட்டம்**
அராலி அண்ணா விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தையில் உள்ள சங்கானை பிரதேச செயலக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விளான் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து கொட்டடி முத்தமிழ் அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் திருக்குமரன் அணி மோதவுள்ளது. (ம-108-23)



## ஞானமுருகன் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், மார்ச் 3
வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் மயிலங்காடு ஞானமுருகன் அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
இளைஞர் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில், மன்னார் ஜோசவாஸ் ஐக்கியம் அணியும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழகமும் மோதின. ஆட்டத்தின் 2ஆவது நிமிடத்தில் ஜெகன், 14ஆவது நிமிடத்தில் சுபாஸ், 26 ஆவது நிமிடத்தில் தவரூபன் கோல்களைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 3:0 என்று முன்னிலை பெற்றது ஞானமுருகன்.
இரண்டாம் பாதியின் 36 ஆவது நிமிடத்தில் தீபன், 42 ஆவது மற்றும் 53 ஆவது நிமிடங்களில் ஜெகன் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 6:0 என்ற கோல் கணக்கில் கம்பீரமாக வென்று இறுதிக்குள் நுழைந்தது ஞானமுருகன். அந்த அணி தனது இறுதியாட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸுடன் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. (ம)

## நாவற்குழி அ.த.க.பா. சம்பியன்

தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் 16 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை அணி கிண்ணம் வென்றது. மட்டுவில் மகாவித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து கச்சாய் அ.த.க. பாடசாலை அணி மோதியது. இதில் கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை அணி 25:17, 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலிரு செற்களையும் கைப்பற்றி சம்பியனானது. மூன்றாமிடத்தை சாவகச்சேரி மகளிர் கல்லூரி அணி பெற்றது. (ம-422)

## நியூசிலாந்து தெ.ஆபிரிக்கா இறுதி நாளை

நியூசிலாந்து - தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் ஐந்தாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது. முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களின் அடிப்படையில் இரு அணிகளும் தலா இரு ஆட்டங்களில் வெற்றி பெற்றுள்ளன. எனவே நாளைய ஆட்டத்தில் வெற்றிபெறும்அணியே சம்பியன் என்ற காரணத்தால் இந்த ஆட்டம் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

## கொழும்பு இந்துக் கல்லூரி இலகு வெற்றி

யாழ்ப்பாணம்,மார்ச்3
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும்இடையில் நேற்று நடைபெற்ற நட்பு ரீதியிலான கால்பந்தாட்டத்தில் கொழும்பு இந்துக் கல்லூரி அணி அபார வெற்றி பெற்றது.

ஆட்டத்தின் ஆரம்பம் முதல் தனித்து ஆதிக்கம் செலுத்திய கொழும்பு இந்துக் கல்லூரி அணி முதற் பாதியில் 4 கோல்களைப் பதிவு செய்தது. இரண்டாம் பாதியில் மேலதிகமாகஒருகோலைப் பதிவுசெய்து, முடிவில் 5:0 என்ற கோல் கணக்கில் மகுடம் சூடியது. (ம-23)

# யாழ்ப்பாணம் - கொழும்பு "இந்துக்களின் போர்" இன்று



கொழும்பு இந்துக் கல்லூரி அணி



யாழ்.இந்துக் கல்லூரி அணி

யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான "இந்துக்களின் போர்" கொழும்பு இந்துக் கல்லூரி மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளது.

நடப்பு வருட ஆட்டம் 8 ஆவது ஆட்டமாக அமைந்தது. முடிவடைந்த 7 ஆட்டங்களில் கொழும்பு இந்துக் கல்லூரி 3 ஆட்டங்களிலும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அணி ஒரு ஆட்டத்திலும் வெற்றிபெற்றன. மூன்று ஆட்டங்கள் சமநிலையில் முடிவடைந்தன.

எனவே நடப்பு வருடத் தொடரில் பதிலடி கொடுக்க வேண்டிய கட்டாயம் யாழ். இந்துவுக்கு உள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி அணி விவரம் கஜானந் (தலைவர்), லோ.சிவலக்சன் (உபதலைவர்), ம.கோபிராம், சி.தனுஸ்ரன், கி.சந்தோஸ், ஈ.பரிமலன், ம.துவாரகன், சு.ஆஞ்சிகன், ப.தனுசன், ந.அபிப்பிரியன், க.நிகேஸ், யோ.விதுசன். நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால கலந்துகொள்கிறார். சிறப்பு விருந்தினராக சிம்பாப்வே அணியின் முன்னாள் தலைவர் அன்டி பிலவர் கலந்து கொள்கிறார். (ம-23)



## பழிதீர்க்குமா இந்திய அணி நாளை இரண்டாவது டெஸ்ட்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

புனேயில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி வெற்றிபெற்று தொடரில் முன்னிலை வகிக்கிறது. இதனால் பெங்களூரில் நாளை நடைபெறவுள்ள இரண்டாவது ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டிய நெருக்கடிக்கு இந்திய அணி தள்ளப்பட்டுள்ளது.

இந்திய அணியின் துடுப்பாட்டத் தூணாக வர்ணிக்கப்படும் கோக்லி கடந்த ஆட்டத்தின் இரு இன்னிங்ஸிலும்முறையே ஓட்டமெதனையும் பெறாமலும் 13 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இதனால் நாளை ஆட்டத்தில் அவர் மீது அதிக எதிர்பார்ப்புள்ளது.

ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணியின் தலைவராக கோக்லி உள்ளார். இதனால் பெங்களூர் ஆடுகளம் அவருக்கு மிகையாகப் பழக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. இதுவும் கோக்லியின் மீது எதிர் பார்ப்புக்கள் அதிகம் இருக்க முக்கிய காரணமாக அமைந்தது. (ம)



கொழும்பு இந்துக் கல்லூரி அணி



யாழ்.இந்து அணி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையில் வருடாவருடம் இந்துக்களின் போர் என்ற தொனிப்பொருளில் துடுப்பாட்டத் தொடர் நடத்தப்படுவது வழமை. நடப்பு வருடத்தில் இரு கல்லூரி அணிகளுக்கு இடையே விவாதப் போட்டியும் நடைபெறவுள்ளது. இனிவரும் காலங்களிலும் வருடாவருடம் இந்தப் போட்டிகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. நடப்பு வருடத்துக்கான போட்டி கொழும்பு இந்துக் கல்லூரியின் தலைமை மண்டபத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் கலந்துகொள்ளவுள்ள இரு அணியினரையும் படங்களில் காணலாம். (ம)



# ஐந்தாவது "நண்பர்களின் போர்" இன்று ஆரம்பம்





யாழ்ப்பாணம், மார்ச் 3
யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்துக்கும் (ஸ்ரான்லி), முல்லைத் தீவு வித்தியானந்தாக் கல்லூரிக்கும் இடையிலான நண்பர்களின் போர் இன்று ஆரம்பமாகிறது.

இரு கல்லூரிகளினதும் வருடாந்த இருதரப்புத் தொடரில் இன்றைய ஆட்டம் 5 ஆவது ஆட்டமாக பதிவானது. ஸ்ரான்லிக் கல்லூரியின் மைதானத்தில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. முடிவடைந்த 4 ஆட்டங்களில் முதல் மூன்று ஆட்டங்களிலும் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய அணி வெற்றிபெற்றது. கடந்த வருடம் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்திருந்தது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் துடுப்பாட்ட பயிற்றுனர் வி.கே.சண்முகலிங்கம் கலந்து கொள்கிறார். (ம-23)

## என்னைவிட சிறந்தவராக உருவெடுப்பார் ஸ்ரீவ் சிமித்

### பொண்டிங் நம்பிக்கை

என்னை விட ஸ்ரீவ் சிமித் சிறந்தவராக உருவெடுப்பார். இவ்வாறு தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் பொண்டிங்.

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி 333 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றது. சுழலுக்குச் சாதகமான இந்த ஆடுகளத்தில் சிமித் சதம் கடந்து அசத்தினார். இதனை அடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே பொண்டிங் இவ்வாறு தெரிவித்தார்.

இந்திய ஆடுகளத்தில் வைத்து அந்த அணிக்கு எதிராக சதம் விளாசுவதென்பது மிகவும் கடினமானது. அதை சிமித் சாதித்துள்ளார் என்றும் அவர் தெரிவித்தார். (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLAS
(OPEN \LIMITED)
பிரதி Sat, Sun- 9.00-2.00 Pm
கடந்தகால, எதிர்பார்க்கை வினாக்கள்
உரிய விடைகளுடன் கலந்துரையாடப்படும்.
விரிவுரையாளர்
P. உமாசங்கர்.
P. கமல்தாசன்
மற்றும் துறைசார் விரிவுரையாளர்கள்.
முகாமைத்துவ உதவியாளர், வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதி Sat, Sun- 2-5Pm
நாவலர் கல்வி நிலையம்.
ஆனைப்பந்தி, யாழ் நகர்
T.P-077 4696695



# கிளி. எல்லே தொடரில் பளை மத்தி. சம்பியன்

கிளிநொச்சி, மார்ச் 3

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான எல்லே தொடரில் பளை மத்திய கல்லூரி சம்பியனாகியது.

கிளிநொச்சி மத்திய மகாவித்தியாலய மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பளை மத்திய கல்லூரியை எதிர்த்து இயக்கச்சி அ.த.க. பாடசாலை அணி மோதியது.

முதலில் களமிறங்கிய இயக்கச்சி அ.த.க. பாடசாலை அணி நிர்ணயிக்கப்பட்ட பந்துகளில் ஓர் ஓட்டத்தைப் பெற பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பளை மத்திய கல்லூரி அணி 2 ஓட்டங்களைப் பெற்று கிண்ணம் வென்றது. (ம-6)

ஜப்பான் சைக்கிள் மலிவு விற்பனைக்கு
Original Japan Ladies & Gents சைக்கிள்கள் மலிவு விற்பனைக்கு உண்டு.
ராசிக் சைக்கிள் பஜார்
கொட்டடி லைடன் சந்தி, யாழ்ப்பாணம்.
0777905333

வேலைக்கு ஆள்தேவை
யாழ் நகரில் உள்ள கடை ஒன்றிக்கு பெண் \ ஆண் வேலையாள்கள் தேவை.
Razeek.Gift Center வயது 18-40
தொடர்பு .077 996 6828

## வறுமையின் உடும்புப்பிடி காரணமாக விற்கப்பட்டன ஒலிம்பிக் பதக்கங்கள்

### ஜிம்னாஸ்டிக் டார்லிங்கின் அவல நிலை

வறுமையின் கோரப்பிடியில் சிக்கி கரையேற முடியாமல் தவித்த ரஷ்யா வின் முன்னாள் ஜிம்னாஸ்டிக் வீராங்கனை ஒல்கா போர்ட் தனது ஒலிம்பிக் பதக்கங்களை ஏலத்தில் விற்றார்.

1972 ஆம் ஆண்டு முனிச் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் தொடரில் கலந்துகொண்டு இரண்டு தங்கப்பதக்கங்கள் ஒரு வெள்ளி என மூன்று பதக்கங்களை அள்ளினார் ஒல்கா போர்ட்.

அக்காலத்தில் அதிகம் பிரபலமான இவரை விளையாட்டு உலகம் 'ஜிம்னாஸ்டிக் டார்லிங்' என செல்லப்பெயர் சூட்டி அழகு பார்த்தது.

தற்போது இவருக்கு வயது 61. வறுமையின் கோரப்பிடி காரணமாக ஒலிம்பிக்கில் தான் வாங்கிய இரண்டு தங்கப் பதக்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் ஏனைய கிண்ணங்கள் உட்பட மொத்தம் முப்பத்திரண்டு பொருள்களை ஒல்கா ஏலத்தில் விட்டுள்ளார். இதன் மூலம் இவருக்கு 3 லட்சத்து 33 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன. அதிகபட்சமாக ஒரு தங்கப்பதக்கம் 66 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு விலை போனது.

199ஆம் ஆண்டில் அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்த ஒல்கா தற்போது அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் வசித்துவருகிறார்.

ஒல்கா வாங்கிய ஒலிம்பிக் பதக்கங்கள் அவரைப் பசியிலிருந்து காப்பாற்றின என அமெரிக்க ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
SLAS
பிரிவு 1
சனி ஞாயிறு
9.00-3.00
பிரிவு II
ஞாயிறு மட்டும்
9.00-4.00
பிரிவு III
திங்கள் தொடக்கம் வியாழன் வரை
பி.ப. 5.00-7.00 மணிவரை
இலங்கை வங்கி
மக்கள் வங்கி
இம்மாதப் பரீட்சை நடைபெறவுள்ளது.
சனி ஞாயிறு
10.00-4.00
வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதி சனி
1.00-5.00
ஆசிரியர் தெரிவு
பிரதி சனி
9.00 - 1.00
தொழில் அலுவலர்.
இறைவரி உத்தியோகத்தர்.
முகாமைத்துவ உதவியாளர்.
கணக்காளர் சேவை.
வகுப்புகளும் நடைபெறுகின்றன.
தொடர்புகளுக்கு
076 688 3394
021 222 3382
யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புக்கள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கிஅருகில்)

யாழ்ப்பாணத்தில்......
திறமையின் தேடல்
ஊடகத்துறையில் உள்நாட்டிலும் சர்வதேசத்திலும்
அங்கீகரிக்கப்பட்ட
டிப்ளோமா சான்றிதழை பெற்றுக் கொடுக்கும்.
Dip.in Mass Media
தயாராகுங்கள்...
இலங்கையிலும்,
சர்வதேசத்திலும்
துடிப்பு மிக்க
ஓர் அறிவிப்பாளராக
வெற்றியடையுங்கள்.



3 - Months
வயதெல்லை கிடையாது.
வானொலித்துறை
செய்தித்துறை
பத்திரிகைத்துறை
ஒலிப்பதிவுத்துறை
விளம்பரத்துறை
ஊடகத்துறையில் ஒரு புதிய பரிணாமம்.
பதிவுகளுக்கு முந்துங்கள்.
BRC
BRITISH ROYAL COLLEGE
20,Kannathitty Lane, Jaffna.
(New Science Hall அருகில்)
T: 021 492 7456 M: 071 432 5002

## கோக்லிக்கு பெங்களூரில் நெருக்கடிகள் ஏதுமில்லை

### ஹர்பஜனின் கண்டுபிடிப்பு

ஆஸ்திரேலியா - இந்தியா அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் பெங்களூரில் நாளை நடைபெறவுள்ள நிலையில் இந்த ஆட்டத்தில் கோக்லிக்கு நெருக்கடிகள் இல்லை. அவர் பெரியதாக ஓட்டங்களைக் குவிப்பார் என்று நம்பிக்கை தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் வீரர் ஹர்பஜன்.

புனேயில் நடைபெற்ற முதலாவது ஆட்டத்தில் இரு இன்னிங்ஸிலுமாகச் சேர்த்து கோக்லி வெறும் 13 ஓட்டங்களையே பெற்றிருந்த நிலையில் இரண்டாவது ஆட்டம் தொடர்பில் ஹர்பஜன் இவ்வாறு தெரிவித்தார்..

முன்னதாக, நான்கு ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரில் இந்தியா 4:0 என்று வெற்றிபெறும் என்று ஹர்பஜன் தெரிவித்திருந்தார். ஆனால் முதலாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

## மாட்டின் குப்திலின் சாதனை ஆட்டம்



தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் நியூசிலாந்தின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் குப்தில் 180 ஓட்டங்களை விளாச நியூசிலாந்து வெற்றிபெற்றது. இந்த ஆட்டத்தில் தனது அதிரடியின் மூலம் ஏகப்பட்ட சாதனைகளைப் படைத்தார் குப்தில்.

ஒருநாள் ஆட்டங்களில் குப்தில் ஒரு இன்னிங்சில் 180 ஓட்டங்களுக்கு மேல் குவித்திருப்பது இத்துடன் மூன்றாவது முறையாகும். இதன் மூலம் ஒருநாள் ஆட்டங்களில் அதிக முறை 180 ஓட்டங்களுக்கு மேல் குவித்த வீரர் என்ற பெருமையை குப்தில் பெற்றார். ஏற்கனவே அவர் 2015 ஆம் ஆண்டில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக ஆட்டமிழக்காமல் 237 ஓட்டங்களையும், 2013 ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்கு எதிராக ஆட்டம் இழக்காமல் 189 ஓட்டங்களையும் குவித்துள்ளார். மேற்கிந்தியத் தீவுகளின் ஜாம்பவான் ரிச்சட்ஸ், இந்திய அணியின் நட்சத்திரம் சச்சின் இருவரும் தலா இரு முறை 180 ஓட்டங்களையும் அதற்கு மேலும் பெற்று இரண்டாவது இடத்தில் உள்ளனர்.

நியூசிலாந்து விரர்களின் தரப்பில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்களின் பட்டியலில் முதல் 3 இடங்களில் குப்திலே உள்ளார். இதன்படி 237 ஓட்டங்கள், 189 ஓட்டங்கள், 180 ஓட்டங்கள் அவரின் அடைவுகளாக உள்ளன. (ம)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.03.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.